# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
# இலங்கை

முப்பத்திமூன்றாவது வருடாந்த அறிக்கை

2011

# உள்ளடக்கம்


பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (ப.மா.ஆ)........01

தலைவருடைய செயற்பாட்டு மீளாய்வு........02

1. ப.மா.ஆ முகாமைத்துவம்........06
2. பல்கலைக்கழக முகாமைத்துவம்........08
3. நிறுவகங்கள்........12
4. பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதி........14
5. கல்வி அபிவிருத்தி மற்றும் கல்வி தராதரங்களின் பராமரிப்பு........25
6. நிதி நிர்வாகம்........31
7. ப.மா.ஆ நிர்வாக காரியாலயத்தின் நிரந்தர சேனை........37
8. மனித வள முன்னேற்றங்கள்........43
9. உள்கட்டமைப்பு அபிவிருத்தி........50
10. தகவல் தொழில்நுட்ப அபிவிருத்த்........51
11. உயர் கல்வியில் தர உறுதிப்படுத்தல்........52
12. மாணவர்கள் தொடர்பான விடயங்கள்........54
13. பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதி சம்பந்தமான உதவி........54
14. நிதி முகாமைத்துவத்தை முன்னேற்றல்........56
15. மாண்புமிகு உயர் கல்வி அமைச்சருடன் முன்னேற்றம் தொடர்பான சந்திப்புகள்........57
16. தேசிய அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட உதவிகள்........58
17. சட்ட விவகாரங்கள்........58
18. மத்திய உள்ளக கணக்காய்வுப் பிரிவு........61
19. பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீடுகள் சபை (ப.சே.மே.ச)........62
20. வெளியீடுகளும் ஆராய்ச்சிப் படிப்புகளும்........62
21. பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்........62
22. பல்கலைக்கழக சேமலாப நிதி........65
23. 2011ஆம் ஆண்டளவில் பின்வரும் ஆணைக்குழு சுற்றறிக்கைகள் மற்றும் ஸ்தாபன சுற்றறிக்கை கடிதங்கள் வெளியிடப்பட்டன........66
24. ப.மா.ஆக்குழுவின் 2011 ம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள்........70
25. பமாஆ க்குழுவின் 2011 டிசம்பர் 31ம் தேதியன்றுடன் முடிவுற்ற கணக்குகள் மீதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை........76

26. பமாஆ க்குழுவின் 2011 டிசம்பர் 31ம் தேதியன்றுடன் முடிவுற்ற கணக்குகள் மீதான கணக்காய்வுத் தலைமையதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்....84

27. பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2011ம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகள்....98

28. பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2011 டிசம்பர் 31ம் தேதியன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை....101

29. பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2011 டிசம்பர் 31ம் தேதியன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்....106

30. பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2011 டிசம்பர் 31ம் தேதியன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள். ....110

31. பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2011 டிசம்பர் 31ம் தேதியன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை....113

32. பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2011 டிசம்பர் 31ம் தேதியன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்....118

33. இணைப்புகள்

(i) பல்கலைக்கழக அனுமதி - கல்வியாண்டு 2010/2011 பலவகையான கற்கை நெறிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையின் மாவட்ட மற்றும் கற்கைநெறி ரீதியா பகுப்பு நெறிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையின்....125

(ii) பல்கலைக்கழக அனுமதி - கல்வியாண்டு 2010/2011 வழமையான மற்றும் விசேட எற்பாடுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையின்....128

(iii) மகாபொல புலமைப் பரிசில்களுக்கான மாவட்டரீதியான தெரிவுகள் கல்வியாண்டு 2010/2011 (2010 க.பொ.த. (உ/த) அடிப்படையாகக் கொண்டு)....130

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (ப.மா.ஆ)

அறிமுகம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் 1978 டிசம்பர் 22 இல் ஸ்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (பமாஆ) ஸ்ரீ லங்காவின் பல்கலைக்கழக முறைமையினது உச்ச நிலை சபையாக கடமையாற்றுகிறது. பமாஆ வினது கடமைகளாவன பல்கலைக்கழக கல்வியினை திட்டமிடலும் ஒருங்கிணைத்தலும், உயர் கல்வி நிறுவனங்களுக்கு (உகநி) நிதிகளை பங்கிடுதல், கல்வியின் தரங்களை பராமரித்தல், உகநி களினது நிர்வாகத்தினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் உகநி களுக்கு மாணவர்களின் அனுமதியினை ஒழுங்குபடுத்துதல்.

ப.மா.ஆ வினது பார்வை

உலகப் போக்குகளுக்கு அமைவாக, தேசிய தேவைகளுக்கும் அவாக்களுக்கும் பொருத்தமான அதி உயர்தரத்திலான ஒரு பல்கலைக்கழக முறைமையினை அபிவிருத்தி செய்தல்.

ப.மா.ஆ வினது குறிக்கோள்

ஒரு பரந்தளவில் அடையும் வழி உடைய பல்கலைக்கழக முறைமையினை, மூலவளங்களை பங்கிடுதலின் ஊடாக விருத்தி செய்வதும், நிலை நிறுத்துவதும், அது பொது மக்களுக்கு பொறுப்புடைமையானதாய் இருப்பதுடன் கல்வி அறிவின் அதி உயர் மட்டங்களுக்கு, நாட்டினது தேவைகளுடன் தொடர்புபட்ட தொழில்சார் பயிற்சிகள் மற்றும் ஆராய்ச்சிகளுக்கு, எளிதாக்குவதனால் உயர் கல்வியின் ஏனைய பங்குதாரர்களுடன் கூட்டாய் இருத்தலுக்கு, கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் தரத்தை உறுதிப்படுத்தல் மற்றும் பலவகைப்படுத்தலுக்கு, கற்பித்தலிலும் ஆராய்ச்சியிலும் விசேஷ திறமை கொண்ட மையங்களைத் தோற்றுவித்தலுக்கு, அர்ப்பணிக்கிறது.

## தலைவருடைய செயற்பாட்டு மீளாய்வு

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது 1978 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக முறைமையினது உச்ச நிலை சபையாக செயற்பாட்டுக்கு வந்தது. பல்கலைக்கழக கல்வியனை திட்டமிடலும் ஒருங்கிணைத்தலும், உயர் கல்வி நிறுவனங்களுக்கு (உ.க.நி) நிதிகளைப் ஒதுக்குதல், கல்வியின் தரங்களை பராமரித்தல், உ.க.நி. களினது நிர்வாகத்தினை ஒழுங்குபடுத்துதல், உ.க.நி. களிற்கான மாணவர் அனுமதியினை ஒழுங்குபடுத்துதல் அத்துடன் கீழ் உள்ள எல்லா நிறுவனங்களினுடைய முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் உதவுதல் போன்றவை ப.மா.ஆ. வினது கடமைகளாகும்.

இந்த வருடாந்த அறிக்கையானது 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ப.மா. ஆவால் செயற்படுத்தப்பட்ட செயற்பாட்டு நடவடிக்கைகளை மீளாய்வு செய்கின்றது. 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்கலைக்கழக மாணவர் அனுமதி, கல்வித்துறை மேம்பாடு, மாணவர் விவகாரங்கள், உத்தியோகத்தர் அபிவிருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி, தர உறுதிப்பாடு, நிதி நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் ஆகிய பரப்புக்களின் முக்கிய நிகழ்வுகள் மற்றும் அடைவுகளை சுருக்கமாகவும், தெளிவாகவும் விபரித்துக் காட்டுகிறது.

### பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கு மாணவர் அனுமதி

மொத்தமாக 142,516 பரீட்சார்த்திகள் 2010/2011 ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெற்றனர். அவர்களுள் 20,016 பேர் வழமை மற்றும் சிறப்பு ஏற்பாடுகளின் கீழ் உயர் கல்வி நிறுவனங்களுக்கு அனுமதி பெற்றனர். கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இது 469 மாணவர்களால் அதிகரித்துள்ளது. கணனி விஞ்ஞான, தகவல் தொழில்நுட்பம், பிரயோக விஞ்ஞானங்கள், பொறியியல் மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் போன்ற தொழில் சார் கற்கைகளில் பாரியளவிலான அதிகரிப்பு காணப்பட்டது.

இக் காலப்பகுதியில் வெளிநாட்டு தகமைகளைக் கொண்ட மாணவர்களது அனுமதியை அதிகரிப்பதற்காகவும் விஷேட கவனம் செலுத்தப்பட்டது. அதன்படி, இந்த முறைமையின் கீழ் அனுமதிக்காக கோட்டா முறையில் ஒதுக்கப்பட்ட 0.5%க்கு மேலதிகமாக 4.5% வரையானதும் அதற்கு மேற்பட்டதுமான இடங்கள் ஒவ்வொரு கற்கை நெறிகளுக்கும் உத்தேசிக்கப்பட்ட உள்ளெடுக்கைகளுக்கு மேலதிகமாக, வெளிநாட்டு மாணவர்களுக்கும், வெளிநாட்டில் தகைமை பெற்ற இலங்கை மாணவர்களுக்கும் பணம் செலுத்தும் அடிப்படையில் ஒதுக்கப்பட்டது. கடந்த காலப்பகுதியில் இளமானிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கான மொத்த வெளிநாட்டு மாணவர் ஆட்சேர்ப்பானது 206 ஆகக் காணப்பட்டதுடன் 212 மாணவர்கள் பட்டப்பின் கற்கை நெறிகளுக்காக சேர்க்கப்பட்டன்ா.

### பட்டதாரி வெளியீடு

2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொத்தமாக 16,639 பட்டதாரி மாணவர்கள் வெளியானார்கள். இந்தத் தொகையானது அதற்கு முதல் வருடத்துடன் ஒப்பிடுகையில் 28% மான அதிகரிப்பாகக் காணப்பட்டது. வெளியான மொத்த பட்டதாரி மாணவர்களில் பெரும்பாலானோர் (41% மாணவர்கள்) கலைப்பிரிவினராகக் காணப்பட்டனர். 2011 இல் வெளியான மொத்த பட்டப்பின் கற்கை மாணவர்கள் 5,231ஆகக் காணப்பட்டனர்.

## கல்வி அபிவிருத்தி மற்றும் கல்விப் படித்தரங்களின் பேணுகை

விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் ஆணைக்குழுவானது பல்வேறு பீடங்கள் / பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளை கவனத்தில் எடுத்தது. பல்வேறு துறைகளிலும் ஒரு விசாலமான கற்கை நெறியைத் தெரிவு செய்யக்கூடிய வகையில் அதில் 6 இளமானிப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கியது. இது தவிர ஆணைக்குழுவானது உயர்கல்வி அல்லது மேற்படிப்பு கற்கை நெறிகளுக்கான வாய்ப்புக்களை முன்னேற்றும் வகையில் 23 புதிய பட்டப்பின் கற்கை நெறிகளுக்கு அங்கீகாரம் வழங்கியது. இன்னுமொரு முக்கிய விடயமாக, நாட்டில் உயர் கல்வியை விருத்தி செய்யும் நோக்குடன், 2011 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வரையறுக்கப்பட்ட தொழில்நுட்பம் மற்றும் மருத்துவத்திற்கான தெற்காசிய நிறுவனம் (SAITM), மற்றும் வரையறுக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (SLIIT) ஆகியவற்றை குறிப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பட்டம் வழங்கும் நிறுவனங்களாக அங்கீகாரம் வழங்கியது.

### மாணவர் விவகாரங்கள்

2010/2011 ஆம் கல்வியாண்டிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான பொது தினங்களை ஏற்படுத்தும் விதத்தில் எல்லாப் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்துடன் பெரும்பான்மையான பல்கலைக்கழகங்கள் / உகநி பதில்கள் சாதகமானதாக இருந்தது. பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய “மாணவர் ஒழுக்கவியல் விடயங்கள் மற்றும் தண்டனை விதித்தல்” சம்மந்தமாக பொது விதிமுறைகள் அடங்கிய கையேடு ஒன்று 2011 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் விநியோகிக்கப்பட்டது.

மொத்தமாக 10,229 மாணவர்கள் மஹாபொல புலமைப் பரிசில் பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்டனர். இது 2009/2010 கல்வியாண்டுடன் ஒப்பிடுகையில் அவ்வருடம் அத்தொகை 8,868 ஆகக் காணப்பட்டது. எனினும், மொத்தமாக மஹாபொல பெற்ற மாணவர்களின் தொகையானது 32,272 ஆக இருந்த அதே வேளை 17,996 மாணவர்கள் நிதி உதவி பெறுவோராகவும், 66 அறக்கொடைப் புலமைப் பரிசில் பெறுவோராகவும் அவ்வருட காலப்பகுதியில் காணப்பட்டனர்.

### உத்தியோகத்தர் அபிவிருத்தி

2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் திறைசேரியால் மொத்தம் 510 புதிய பதவியணிகள் அங்கீகரிக்கப்பட்டதுடன் பல்கலைக்கழக முறைமையின் மொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியானது 20,292 க்கு அதிகரிக்கப்பட்டது. அவ் 510 பதவியணியில் 470 பதவி நிலை அணிகள் கல்வி சார் பதவியணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்டது.

விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் ஆணைக்குழுவானது உத்தியோகத்தர் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக அண்ணளவாக 70 மில்லியன் ரூபாவை ஒதுக்கியதுடன் உத்தியோகத்தர் அபிவிருத்தி நிலையங்களின் (SDCs) பௌதிக வளங்கள் மற்றும் வசதிகள் ஏற்படுத்துதல் அத்துடன் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதில் பயன்படுத்துவதற்காக நிதிகளை விடுவித்தது.

அத்தடன் ப.மா.ஆ. வின் கொள்கைக்கு அமைய வைத்து கல்வி முகாமைத்துவம், மற்றும் வெளியீடு ஆகியவற்றில் பாண்டித்தியம் அடையும் ஒரு பரந்த இலக்குடன் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் உள்ள கல்விசார் உத்தியோகத்தர்கள் வெளிநாடுகளுக்குச்சென்று பட்டப்பின் கல்வித் தகைமைகளை பெறுவதற்காக விமான வழிப் பயணத்துக்கான நிதி உதவியாக சுமார் 8.24 மில்லியன் தொகைப் பணம் அவர்களது வழங்கப்பட்டது. மேலும் கல்விசார் உத்தியோகத்தர்கள் பட்டப்பின் தகைமைகளைப் பெறுவதற்காக 6.70 மில்லியன் பெறுமதியான மானியங்கள் உள்ளூர் ஆராய்ச்சி மானியத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.

### உட்கட்டமைப்பு அபிவிருத்தி

திறைசேரியினால் விதிக்கப்பட்ட பல்வேறு கட்டுப்பாடுகளின் காரணமாக பல்கலைக்கழகங்களும் உயர் கல்வி நிறுவனங்களும் 2011 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 4,290 மில்லியனை மாத்திரமே பெறக்கூடியதாக இருந்தது. இத்தொகையானது பிரதானமாக புதிய பல்கலைக்கழகங்களின் புதிய கட்டுமானம் மற்றும் தொடர்ச்சியான செயற்றிட்டங்கள், புனரமைப்பு செயற்றிட்டங்கள், அத்துடன் மாணவர்களுக்கான திறன் உருவாக்க செயற்பாடுகள் ஆகியவற்றுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் ஆணைக்குழு 24 புதிய கட்டுமான செயற்திட்டங்களை அங்கீகரித்தது. 2011ஆம் ஆண்டு காலப் பகுதியில் 17 செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் படவரைபு மற்றும் நிர்மாணித்தல் செய்முறையின் பல கட்டங்களில் ரூபா. 14,662.55 மில்லியன் பெறுமதியான 41 செயற்றிட்டங்கள் 2011ஆம் ஆண்டில் இடம் பெற்றுக் கொண்டிருந்த அதே வேளை மொத்த செலவினமாக ரூபா. 2,223.45 மில்லியனைக் கொண்ட 12 செயற்றிட்டங்கள் 2011ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழகங்களுக்கு கையளிக்கப்பட்டது.

### தகவல் தொழில்நுட்ப விருத்தி

2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்கலைக்கழக முறைமையில் தகவல் தொழில்நுட்ப வசதிகளின் விருத்திக்காக 4 விசேட வலையமைப்பு தொடர்பான செயற்றிட்டங்களில் அண்ணளவாக ரூபா. 15 மில்லியன் மேலதிக முதலீடாக மேற்கொள்ளப்பட்டது.

### தர உறுதிப்பாடு மற்றும் மதிப்பேற்றல்

மதிப்பாய்வுக்குரிய ஆண்டு காலப்பகுதியில் 6 நிறுவக மீளாய்வுகள், 13 பாட / நிகழ்ச்சித்திட்ட மீளாய்வுகள் மற்றும் 1 நூலக மீளாய்வு அத்துடன் 47 நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய மேசை மதிப்பீடுகள் ஆகியவை, தர உறுதிப்பாடு மற்றும் மதிப்பேற்றல் சபையின் வெளிவாரி தர மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடாத்தப்பட்டன. 2011ஆம் ஆண்டு காலப் பகுதியில் உயர் கல்வி நிறுவனங்களின் தரத்தை விருத்தி செய்வதற்கு பல்கலைக்கழக / பீட மட்டங்களில் தேசிய ரீதியில் 265 பயிற்சிப் பட்டறைகள் நடைபெற்றதுடன், தற்போது நாட்டில் உள்ள அனைத்து உயர் கல்வி நிறுவனங்கள் (அரச மற்றும் தனியார்) மற்றும் பாடத்திட்டங்கள் ஆகியவற்றில் தர உறுதிப்பாடு சம்பந்தமாக 2 கையேடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

### நிதி நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம்

ப.மா.ஆ. வின் மதிப்பீட்டுக்கமைய 2011ஆம் ஆண்டுக்காக 31,556 மில்லியன் ரூபா வேண்டப்பட்டதுடன் திறைசேரி ரூபா. 19,700 மில்லியனை மீண்டெழும் மற்றும் மூலதன

செலவீனங்களுக்காக தொடக்கத் தொகையாக அங்கீகரித்தது. இந்த அதிகரிப்பானது 2010ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடுகையில் 32% அதிகரிப்பாகக் காணப்பட்டது.

கடந்த காலப்பகுதியில் அதிகரித்த ஆளணி வேதனச் செலவுகளுக்கு நிதியளிப்பதற்காக மேலதிக ஒதுக்கீடான ரூபா. 561.2 மில்லியன் அங்கீகரிக்கப்பட்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2011இல் மீண்டெழும் மானியமானது 14% ஆல் அங்கீகரிக்கப்பட்ட அதே வேளை மூலதனச் செலவீனங்கள் 103% ஆல் அதிகரிக்கப்பட்டது.

திறைசேரியால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறந்த ஆட்சி மற்றும் முகாமைத்துவ பயிற்சிகள் ஊடாக நிதி முகாமைத்துவத்தை முன்னேற்றுவதில் உதவுவதற்காக பல்கலைக்கழகங்கள், மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் தொடர்பான விடயங்களை மதிப்பிடுவதற்காக ப.மா.ஆ. வின் கணக்காய்வு நடவடிக்கை மற்றும் கண்காணிப்பு குழுவானது 2011ஆம் ஆண்டில்19 தடவைகள் சந்தித்தது.

உயர் கல்வித்துறையில் உச்ச நிலை சபையாகவும் சீரான அமைப்பாகவும் ப.மா.ஆ. இருப்பதனால் உயர் தரமான பல்கலைக்கழக முறையை விரிவுபடுத்தவும் வலுப்படுத்தவும் சீராக்கவும் எதிர்வரும் ஆண்டுகளில் நாட்டில் உயர் கல்வியை விருத்தி செய்யும் எதிர்பார்ப்புடன் 2011ஆம் ஆண்டு 32 சுற்றறிக்கைகளும் 20 தாபனச் சுற்றறிக்கைகளும் விநியோகிக்கப்பட்டன.

## 1. ப.மா.ஆ முகாமைத்துவம்

ஆணைக்குழுவின் தலைவர், உப தலைவர் மற்றும் அங்கத்தவர்கள் பின்வருமாறு,

**தலைவர்**

**பேராசிரியர் எஸ். வி.டி. ஜி. சமரநாயக்க**
அரசியல் விஞ்ஞான சிரேஷ்ட பேராசிரியர்
பி.ஏ (பேரா), இலங்கை, எம்.ஏ (பேரா) இலங்கை, பி.எச்.டி (சென் அன்ரூஸ்-ஸ்காட்லாந்து)

**உப தலைவர்**

**பேராசிரியர் ரஞ்சித் சேனாரத்ன** (2011.05.03இல் இருந்து)
விவசாய விஞ்ஞான சிரேஷ்ட பேராசிரியர்
பி.எஸ்.சி, எம்.பில், பி.எச்.டி(வியன்னா), பி.எச்.டி எச்.சி(துர்ஹம்)

**அங்கத்தவர்கள்**

**பேராசிரியர் கார்லோ பொன்சேகா**(2011.03.18 வரை)
எம்.பி.பி.எஸ் (சிலோன்), பி.எச்.டி(எடின்), எம்.ஏ (களனி),
இலங்கை மருத்துவக் கல்லூரி அங்கத்தவர் (எச்.சி)
களனி மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களின் கௌரவமாக ஓய்வுபெற்ற பேராசிரியர்

**பேராசிரியர் ரொஹான் ராஜபக்ஸ**(2011.03.18 வரை)
பி.எஸ்சி. விவசாயம் (பேராதனை), எம்.எஸ்சி விவசாயம் (பேராதனை)
பிஎச்டி (புளோரிடா) யுஎஸ்ஏ, விவசாய உயிரியல்துறை சிரேஷ்ட பேராசிரியர்

**பேராசிரியர் எச். ஜானக டி சில்வா**(2011.03.18 வரை)
ஏம்.பி.பிஎஸ் (கொழும்பு), எம்.டி (கொழும்பு), டி.பில் (ஒக்ஸ்போர்ட்), எப்ஆர்சிபி(லண்டன்), எப்ஆர்சிபி (எடின்), எப்சிசிபி (எப்என்எஎஸ்)(இலங்கை), எப்ஆர்எசிபி (சிறப்பு),மருத்துவத்துறை சிரேஷ்ட பேராசிரியர், களனி பல்கலைக்கழகம்

**பேராசிரியர் எச்.அபயகுணவர்தன**
பிவிஎஸ்சி (பேரா) இலங்கை, எம்.எஸ்.சி & பி.எச்.டி (இல்லுனியல், யுஎஸ்ஏ)
பண்ணை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார சிரேஷ்டபேராசிரியர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

**பேராசிரியர் எஸ். மோகனதாஸ்**
பிஎஸ்சி (சிறப்பு), பி.எச்டி(எடிலைடி),எப்.ஐ.கெம், சி.கெம்.
ஓய்வுபெற்ற உப-வேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**பேராசிரியர் மல் காந்தி சந்திரசேகர**(2011.05.03இல் இருந்து)
உடற்கூற்றியல் சிரேஷ்ட பேராசிரியர்
பிடிஎஸ்(இலங்),பிஎச்டி (நியு காசல்,ஐக்கிய இராச்சியம்)

**திரு விஜய மலல சேகர** (2011.05.03இல் இருந்து)
எம்.ஏ.(கன்தாப்), சட்டத்துறையில் பரிஸ்டர் பட்டம்(இன்னர் டெம்பிள்), சட்டத்தரணி

**பேராசிரியர் சம்பத் அமரதுங்க** (2011.05.03இல் இருந்து)
பி.ஏ பொருளியல் (சிறப்பு)(ஸ்ரீஜயபுர), எம்.ஏ பொருளியல் (கொழும்பு),
எம்.எஸ்சி கிராமிய அபிவிருத்திப் பொருளியலில்(சகா)பிஎச்டி(ககோஷிமா)

**திறைசேரிக்கான பிரதிநிதி**

**திரு.பி.ஏ. அபேசேகர எஸ்எல்ஏஎஸ் - தரம் 1**
பிஏ (சிலோன்) (பேராதனை),சான்றிதல் - பொது நிர்வாகம் (எஸ்.எல்.ஐ.டி.ஏ)
கிராமிய முன்னேற்றத்தில் டிப்ளோமா - என்ஐஆர்டி (இந்தியா)
திரைசேரி பிரதி செயலாளர், நிதி திட்டமிடல் அமைச்சு

**செயலாளர்**

**திரு. கே.ஜி.தி.எல். நந்தசேன**
பி.காம் (சிறப்பு), எம்பிஏ (ஸ்ரீ ஜயவர்த்தனபுர)

## 2. பல்கலைக்கழக முகாமைத்துவம்

### 2.1 கொழும்பு பல்கலைக்கழகம்

**வேந்தர்**
அதிவணக்கத்துக்குரிய அருள்திரு பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ்

**துணை வேந்தர்**
பேராசிரியர் ஷானிகா ஹரிம்புருகம

**பதிவாளர்**
திரு. டி.எல்.ஆர். சில்வா (பதில்)

### 2.2 பேராதனைப் பல்கலைக்கழகம்

**வேந்தர்**
கலாநிதி பிரேமதாச உடகம

**துணை வேந்தர்**
பேராசிரியர் எஸ்.பி.எஸ். அபயகோன்

**உப துணை வேந்தர்**
பேராசிரியர் கே. பிரேமரத்ன(2011.08.31வரை)
பேராசிரியர் வீ.எஸ்.வீரசிங்க.(2011.09.01 முதல்)

**பதிவாளர்**
திரு. யு.டி. டொடன்வெல (பதில்)

### 2.3 களனிப் பல்கலைக்கழகம்

**வேந்தர்**
அதி. வண. வலமிட்டியாவே தர்மகீர்த்தி ஶ்ரீ குசலதம்மா தேரர்

**துணை வேந்தர்**
பேராசிரியர் சரத் அமுனுகம

**பதிவாளர்**
திரு. கே. குணரத்ன (2011.10.05 வரை)(பதில்)
திரு டப்ளியு.எம் கருணாரத்ன(2011.10.06இலிருந்து)

### 2.4 ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்

**வேந்தர்**
வண. பேராசிரியர் பெலன்வில விமலரத்ன தேரோ

**துணை வேந்தர்**
கலாநிதி என்.எல்.ஏ. கருணாரட்ண

**பதிவாளர்**
திரு. ஜயலத் முத்திதுவகெதர

**2.5 மொறட்டுவைப் பல்கலைக்கழகம்**

**வேந்தர்**
தேசமானி கலாநிதி எஸ். ரோலண்ட் சில்வா

**துணை வேந்தர்**
பேராசிரியர் மலிக் ரணசிங்க(2011.11.27 வரை)
பேராசிரியர் ஏ.கே.டப்ளியு ஜயவர்த்தன (2011.11.28இலிருந்து)

**உப துணை வேந்தர்**
பேராசிரியர் என்.டி. குணவர்தன

**பதிவாளர்**
திரு. ஏ.எல். ஜ.ஃபர் சாதிக்

**2.6 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**வேந்தர்**
பேராசிரியர் எம்.சிவசூரிய

**துணை வேந்தர்**
பேராசிரியர் என்.சண்முகலிங்கம் (27.03.2011 வரை)(பதில்)
பேராசிரியர் திருமதி வசந்தி அரசநாதம்(28.03.2011இலிருந்து)

**பதிவாளர்**
திரு வி.காண்தீபன்

**2.7 உறுகுணைப் பல்கலைக்கழகம்**

**வேந்தர்**
வண. அத்துடாவே சிரி ராகுல தேரர்

**துணை வேந்தர்**
பேராசிரியர் ஏ.எல்.எஸ். மென்டிஸ்

**உப துணை வேந்தர்**
பேராசிரியர் எஸ்.ஜி.ஜெ.என். சேனநாயக்க

**பதிவாளர்**
செல்வி.பி.எஸ்.கழுகம

**2.8 இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்**

**வேந்தர்**
திரு. சாம் எஸ்.விஜயசிங்க

**துணை வேந்தர்**
பேராசிரியர் உபாலி விதானபதிரண

**உப துணை வேந்தர்**
கலாநிதி ஜெ. லியனகம

**பதிவாளர்**
திரு. டபிள்யு.எம்.கருணாரட்ண (2011.09.19 வரை)(பதில்)
செல்வி டப்ளியு எல் விந்தியா ஜயசேன 2011.09.20 இலிருந்து)

## 2.9 கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

**வேந்தர்**
பேராசிரியர்யோகா ராசநாயகம்(11.08.2011 முதல்)
**துணை வேந்தர்**
குலாநிதிகே. பிரேமகுமார் (பதில்)

**பதிவாளர்**
திரு.எம். தயாபரன் (31.05.2011வரை) (தற்காலிக இரண்டாம் பதவி நிலை - ஒப்பந்தம்)

திரு ஏ.தையுப்(01.06.2011-14.09.2011) (பதில்)
திரு கே.மகேசன்(15.09.2011 முதல்)(தற்காலிக இரண்டாம் பதவி நிலை)

## 2.10 இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பேராசிரியர் அச்சி எம்.இசாக்

**துணை வேந்தர்**
கலாநிதி எஸ்.எம்.எம். இஸ்மாயில்

**பதிவாளர்**
திரு. எச்.ஏ.சத்தார்

## 2.11 இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பேராசிரியர் ஏ.வி. சுரவீர

**துணை வேந்தர்**
பேராசிரியர் கே.ஏ. நந்தசேன

**பதிவாளர்**
திரு. ஏ.ஜி. கருணாரட்ண

## 2.12 இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்

**வேந்தர்**
வண. பேராசிரியர் கம்புருகமுவ வஜிர தேரோ

**துணை வேந்தர்**
பேராசிரியர் எம்.எஸ்.ரூபசிங்க

**பதிவாளர்**
திரு. ரி.கே.டபிள்யூ.ரி. தலகுணே(31.01.2011 வரை)
திரு கே.எம். நவரத்ன பண்டா (01.02.2011இலிருந்து)(பதில்)

## 2.13 இலங்கை வயம்பப் பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பேராசிரியர் லக்ஷ்மண் ஜெயதிலக

**துணை வேந்தர்**
பேராசிரியர் ஏ.என்.எப். பெரேரா

**பதிவாளர்**
திரு. இ.எம்.ஜி. ஏக்கநாயக்க

## 2.14 இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

**வேந்தர்**
வண. கலாநிதி அளுத்வேவ சோரத்த தேரோ

**துணை வேந்தர்**
திரு. சந்திரா இம்புல்தெனிய(27.07.2011 வரை)
பேராசிரியர் டப்ளியு .பி.ஆர் பி.டி.சில்வா(28.07.2011 இலிருந்து)

**பதிவாளர்**
திரு. ஆர்.வி.எஸ்.பி. ராஜபக்ஸ (பதில்)

## 2.15 கட்புல, அரங்கேற்றக்கலைப் பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பண்டிதர் கலாநிதி டபிள்யூ.டி. அமரதேவா

**துணை வேந்தர்**
பேராசிரியர் ஜயசேன கொட்டேகொட

**பதிவாளர்**
திருமதி றீ.எம். எச் பீ. கே.குணதிலக(08.03.2011 வரை)(பதில்)
திரு எச. சுமணபால(09..03.2011 (இலிருந்து)(பதில்)

# 3 நிறுவகங்கள்

## 3.1 விவசாயப் பட்டப்பின் நிறுவகம்

**பணிப்பாளர்**
பேராசிரியர் எ.எல்.ரி. பெரேரா(20.10.2011 வரை)
பேராசிரியர் கொலின் என் பீரிஸ்(2011.10.21 இலிருந்து)

## 3.2 பாளி - பௌத்த கற்கைகள் பட்டப்பின் நிறுவகம்

**பணிப்பாளர்**
பேராசிரியர் சுமனபால கல்மன்கொட

## 3.3 சுதேச மருத்துவ நிறுவகம்

**பணிப்பாளர்**
கலாநிதி ஆர்.ஏ. ஜயசிங்க

## 3.4 மனிதவள மேம்பாட்டு நிறுவகம்

**பணிப்பாளர்**
கலாநிதி டபிள்யூ.கே. ஹிரிம்புருகம

## 3.5 மருத்துவப் பட்டப்பின் நிறுவகம்

**பணிப்பாளர்**
பேராசிரியர் எம்.எச்.ரெஸ்வி ஷெரிப்

## 3.6 தொல்பொருளியல் பட்டப்பின் நிறுவகம்

**பணிப்பாளர்**
பேராசிரியர் ஜகத் வீரசிங்க

## 3.7 முகாமைப் பட்டப்பின் நிறுவகம்

**பணிப்பாளர்**
கலாநிதி உதித பி லியனகே

## 3.8 கொழும்புப் பல்கலைக்கழக கணனி கற்கைகள் நிறுவகம்

**பணிப்பாளர்**
பேராசிரியர் ஜி. என். விக்ரமநாயக்க

## 3.9 கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம்

**பணிப்பாளர்**
பேராசிரியர் (திருமதி) ஜே.ஏ.லியனகே

3.10 விஞ்ஞானப் பட்டப்பின் நிறுவகம்

**பணிப்பாளர்**
பேராசிரியர் பி.எஸ்.பி. கருணாரட்ண

3.11 நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான தேசிய நிறுவகம்

**பணிப்பாளர்**
திரு. எம்.எஸ்.யு. அமரசிறி

3.12 தொழில்நுட்ப நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

**பணிப்பாளர்**
கலாநிதி ரி.எ.ஜி. குணசேகர

3.13 உயிர் இரசாயன, மூலக்கூற்று உயிரியலும் உயிர் தொழில் நுட்பமும்நிறுவகம்

**பணிப்பாளர்**
பேராசிரியர் கே.எச்.தென்னகோன்

3.14 சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம்

**பணிப்பாளர்**
திருமதி.பீ. ராஜேஸ்வரன்
திருமதி.பீ. ராஜேஸ்வரன் (23.10.2011 முதல்)(பதில்)

3.15 ஆங்கிலப் பட்டப் பின் நிறுவகம்

**பணிப்பாளர்**
பேராசிரியர் றைஹானா றஹீம் (28.02.2011 வரை)
குலாநிதி திருமதி.எச். வி. எம். றத்வத்த (01.03.2011 முதல்)

3.16 மனித நேயம் மற்றும் சமூக விஞ்ஞானங்களின் உயர்கற்கைகளிற்கானதேசிய மையம்

**பணிப்பாளர்**
கலாநிதி ஆர்.எம்.கே. ரத்நாயக்க(பதில்)

3.17 கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞானங்கள் நிறுவகம்

**பணிப்பாளர்**
கலாநிதி நிசாந்த பெரேரா (டிசம்பர்.2011 வரை) (பதில்)

## 4 பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதி

**4.1** விமர்சனைக்குரிய ஆண்டு காலத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2010 ஆகஸ்ட் இல் நடைபெற்ற க.பொ.த. (உ/த) பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 2010/2011ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்காக மாணவர்கள் தெரிவினை பூர்த்திசெய்தது.

**4.2** 2010/2011ஆம் கல்வியாண்டுக்கான அனுமதிக் கொள்கை பின்வருமாறு.

(1) கலைப்பாட கற்கை நெறிகள் விடயத்தில் (கல்வி வசதிகளில் மாவட்டங்களுக்கிடையேயான ஏற்றத்தாழ்வு ஒப்பீட்டளவில் குறைவாக அவதானிக்கப்பட்டது), அனுமதி தீவளாவிய திறமை அடிப்படையில் அதாவது முழு நாட்டிற்கும் தொகுக்கப்பட்ட புள்ளி ஒழுங்கில் தீர்மானிக்கப்பட்டது. எனினும் ஒரு மாவட்டத்திலிருந்து அனுமதிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கை கல்வியாண்டு 1993/94 இல் இருந்ததை விட குறையாதிருப்பது நிச்சயப்படுத்திக் கொள்ளப்பட்டது.

(2) மற்ற எல்லா கற்கைநெறிகள் விடயத்தில் (அதாவது கலை தவிர்ந்த) ஒவ்வொரு கற்கை நெறியிலும் உள்ள இடங்களில் 40% வரை தீவளாவிய திறமை அடிப்படையிலும் மிகுதி 60% கீழே குறிப்பிட்டவாறு மாவட்ட அடிப்படையிலும் நிரப்பப்பட்டன.

(அ) ஒவ்வொரு கற்கை நெறிக்குமுள்ள இடங்களில் 55% நாட்டின் மொத்தச் சனத்தொகைக்கு ஒவ்வொரு மாவட்டத்தின் சனத்தொகையினது விகிதாசாரப்படி 25 நிர்வாக மாவட்டங்களுக்கிடையே குறித்தொதுக்கப்பட்டது.

(ஆ) ஒவ்வொரு கற்கைநெறிக்குமுள்ள இடங்களில் 5% கீழே குறிப்பிடப்பட்டுள்ள கல்வியில் பின் தங்கிய 16மாவட்டங்களுக்கு அப் 16 மாவட்டங்களின் மொத்த சனத்தொகைக்கு அம் மாவட்ட சனத்தொகை எனும் விகிதாசார அடிப்படையில் குறித்தொதுக் கப்பட்டது.

| | |
|---|---|
| நுவரெலியா | மட்டக்களப்பு |
| அம்பாந்தோட்டை | அம்பாறை |
| யாழ்ப்பாணம் | புத்தளம் |
| கிளிநொச்சி | அனுராதபுரம் |
| மன்னார் | பொலென்னறுவை |
| முல்லைத்தீவு | பதுளை |
| வவுனியா | மொனராகலை |
| திருகோணமலை | இரத்தினபுரி |

கலை தவிர்ந்த ஏனைய கற்கை நெறிகளுக்கு மாணவர்களை அனுமதிக்கையிலும், ஏதேனும் ஒரு மாவட்டத்துக்கு குறித்தொதுக்கப்பட்ட மாவட்டப் பங்கு கல்வியாண்டு 1993/94 இல் அம்மாவட்டத்திற்காக குறித்தொதுக்கப்பட்ட மாவட்டப் பங்கிலும் குறையாதவாறு நிச்சயப்படுத்திக் கொள்ளப்பட்டது.

2010/2011ஆம்கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்குரிய தெரிவு மேலே குறிப்பிடப்பட்ட கொள்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

4..3 மொத்தமாக142,516பரீட்சார்த்திகள் 2010/2011கல்வியாண்டுக்கான பல்கலைக் கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதிபெற்றனர். அவர்களுள் 22,016மாணவர்கள் வழமை மற்றும் சிறப்பு ஏற்பாடுகளின் கீழ் உயர் கல்வி நிறுவனங்களுக்கு அனுமதி பெற்றனர். கடந்த வருடத்துடன் ஒப்பிடும் பொழுது இது 469 மானவர்களால் அதிகரித்துள்ளது.உள்ளெடுக்கையை அதிகரிக்கையில் ஆணைக்குழு பல்கலைக்கழக கல்விக்கான அதிகரித்துவரும் கேள்வி, வளங்களினுடைய கிடைப்பனவு, நிதிப்பற்றாக்குறை மற்றும் பட்டதாரிகளினுடைய சந்தைக்கேள்வி மற்றும் வேலைவாய்ப்பின் கிடைப்பனவு போன்ற காரணிகளை நெஞ்சறிந்திருந்தது. அதன்படி கணணி விஞ்ஞானம், தகவல் தொழிநுட்பம், பிரயோக விஞ்ஞானங்கள், பொறியியல் மற்றும் முகாமைத்துவக் கற்கைகளில்பாரியளவிலான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

கல்வியாண்டு 2010/2011இல் வழமையான ஏற்பாட்டின் கீழ் அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர்களின் பகுப்பு பின்வருமாறு.

| **கற்கைநெறி** | **தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை** |
|---|---|
| மருத்துவம் | 1147 |
| பல் அறுவைச் சிகிச்சை | 77 |
| விலங்கு விஞ்ஞானம் | 102 |
| விவசாயம் | 678 |
| உணவு விஞ்ஞானமும் போசாக்கும் | 100 |
| உயிரியல் விஞ்ஞானம் | 1101 |
| பிரயோக விஞ்ஞானம் (உயிரி.) | 176 |
| இயந்திரவியல் | 1247 |
| இயந்திரவியல் (EM) | 50 |
| இயந்திரவியல் (TM) | 50 |
| கணிய அளவையியல் | 100 |
| கணனி விஞ்ஞானம் | 237 |
| பௌதிக விஞ்ஞானம் | 1650 |
| அளவையியல் விஞ்ஞானம் | 62 |
| பிரயோக விஞ்ஞானம் ( பௌதிக.) | 320 |
| முகாமைத்துவ கற்கைகள் | 3287 |
| சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடும் | 61 |
| வணிகவியல் | 468 |
| கலை | 3806 |
| கலை (SP) | 150 |
| கலை (SAB) | 198 |
| முகாமைத்துவக் கற்கைகள் (TV) | 184 |
| கட்டடக்கலை | 54 |
| வடிவமைப்பு ( கட்டடக்கலை) | 49 |
| சட்டம் | 348 |

| கற்கைநெறி | தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை |
|---|---|
| தகவல் தொழில்நுட்பம் | 149 |
| தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் | 49 |
| பொது முகாமைத்துவம் | 75 |
| தொடர்பாடல் கற்கைகள் | 50 |
| பட்டினமும் நாடும் திட்டமிடல் | 51 |
| சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் | 34 |
| ஆயுர்வேத மருத்துவமும் அறுவைச் சிகிச்சையும் | 277 |
| யுனானி மருத்துவமும் அறுவைச் சிகிச்சையும் | 54 |
| நவநாகரீக வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும் | 39 |
| உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | 91 |
| சித்த மருத்துவம் | 71 |
| தாதியியல் | 206 |
| தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும் | 230 |
| விவசாய தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் | 203 |
| சுகாதார விருத்தி | 51 |
| மருந்தகவியல் | 102 |
| மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் | 100 |
| ஊடுகதிர்ப்படமெடுப்பு | 36 |
| இயன் மருத்துவம் | 60 |
| சூழல் பேணலும் முகாமைத்துவமும் | 51 |
| வசதிகள் முகாமைத்துவம் | 51 |
| போக்குவரத்தும் தேவைகள் விநியோக ஒழுங்கமைப்பு முகாமைத்துவமும் | 51 |
| மூலக்கூற்று உயிரியலும் உயிரிரசாயனவியலும் | 60 |
| கைத்தொழில் புள்ளிவிபரவியலும் கணிதவியல் நிதியும் | 60 |
| புள்ளிவிபரவியலும் செயற்பாட்டு ஆராய்ச்சியும் | 51 |
| கணக்கிடலும் முகாமைத்துவமும் | 51 |
| மீன்பிடித்தலும் கடல்சார் விஞ்ஞானங்களும் | 60 |
| இஸ்லாமிய கற்கைகள் | 150 |
| விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | 50 |
| கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | 49 |
| தொழில் முயற்சியும் முகாமைத்துவமும் | 51 |
| விலங்கு விஞ்ஞானம் | 50 |
| சங்கீதம் | 307 |
| நடனம் | 293 |
| சித்திரமும் வடிவமைப்பும் | 29 |
| நாடகமும் அரங்கும் | 68 |
| கட்புலமும் தொழில்நுட்பவியல் கலையும் | 50 |
| ஏற்றுமதி விவசாயம் | 49 |
| தேயிலை தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும் | 50 |

| கற்கைநெறி | தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை |
|---|---|
| கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் | 51 |
| கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும் | 50 |
| வியாபாரத் தகவல் முறைமைகள் (சிறப்பு) | 51 |
| முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (SEUSL) | 81 |
| கணக்கிடலும் தகவல் முறைமைகளும் | 80 |
| உடற்றொழில் கல்வி | 35 |
| விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | 35 |
| பேச்சும் செவி மடுத்தலும் விஞ்ஞானம் | 51 |
| அரபு மொழி | 100 |
| சித்திரமும் சிற்பமும் | 67 |
| விலங்கு விஞ்ஞானமும் மீன்பிடித்தலும் | 51 |
| உணவு உற்பத்தியும் தொழில்நுட்ப முகாமைத்துவமும் | 60 |
| நீர்வாழ் வளங்கள் தொழில்நுட்பம் | 50 |
| பனை இனத்தாவரம் மற்றும் இறப்பர் பால் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும் | 49 |
| விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் | 50 |
| தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் | 51 |
| சுற்றுலா மற்றம் விருந்தோம்பல் முகாமைத்துவமும் | 101 |
| **2010உ/த பரீட்சைக்கான மொத்தம்** | **20, 274** |

4.4 '**சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம்**' என்ற புதிய கற்கை நெறியானது 2010/2011 ம் கல்வியாண்டு காலப்பகுதியில் (இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்களில்) சேர்த்துக் கொள்ளப்பட்ட புதிய கற்கை நெறியாகும்

4.5 **விசேட ஏற்பாடுகளின் கீழ் அனுமதி**

மேற்குறிப்பிடப்பட்ட சாதாரண ஏற்பாடுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக, கடந்த ஆண்டுகளில் செய்யப்பட்டது போல 2010/2011 ஆம் கல்வியாண்டுக்காக செய்யப்பட்ட விசேட ஏற்பாடுகளின் பிரமாணங்களுக்கு அமைவாக பின்வரும் பிரிவுகளின் கீழ் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

(1) **தேசிய / சர்வதேச மட்டத்தில் கல்வியிலும் பார்க்க ஏனைய துறைகளில் தமது திறமையை வெளிப்படுத்திய மாணவர்கள்.**

இவ் ஏற்பாட்டின் கீழ் சகல கற்கை நெறிகள் தொடர்பாகவும் 0.5% மான இடங்கள் அல்லது ஒரு இடம் இதில் எது கூடியதோ அது குறித்தொதுக் கப்பட்டது. ப.மா.ஆ. குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு புள்ளியிடல் திட்டத்தின்படி ப.மா.ஆ வினால் நியமிக்கப்பட்ட ஒரு தெரிவுக்குழுவால் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

| கற்கைநெறி | தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை |
|---|---|
| மருத்துவம் | 06 |
| பல் அறுவைச் சிகிச்சை | 01 |
| விலங்கு விஞ்ஞானம் | 01 |
| விவசாயம் | 03 |
| உணவு விஞ்ஞானமும் போசாக்கும் | 01 |
| உயிரியல்விஞ்ஞானம் | 05 |
| பிரயோக விஞ்ஞானங்கள் (உயிரியல் விஞ்ஞானம்) | 01 |
| இயந்திரவியல் | 06 |
| இயந்திரவியல்(EM) | 01 |
| இயந்திரவியல் (TM) | 01 |
| கணிய அளவையியல் | 01 |
| கணனி விஞ்ஞானம் | 01 |
| பௌதிக விஞ்ஞானம் | 08 |
| அளவையியல் விஞ்ஞானம் | 01 |
| பிரயோக விஞ்ஞானங்கள் (பௌதிக விஞ்ஞானம்) | 02 |
| முகாமைத்துவக் கற்கைகள் | 17 |
| சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடும் | 01 |
| வணிகவியல் | 02 |
| கலை | 19 |
| கலை (SP) | 02 |
| கலை (SAB) | 02 |
| முகாமைத்துவம் (TV) | 02 |
| சட்டம் | 02 |
| தகவல் தொழில்நுட்பம் | 01 |
| முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் | 01 |
| பொது முகாமைத்துவம் (விசேஷ) | 01 |
| தொடர்பாடல் கற்கைகள் | 01 |
| பட்டினமும் நாடும் திட்டமிடல் | 01 |
| சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் | 01 |
| நவ நாகரிக வடிவமைப்பு மற்றும் உற்பத்தி அபிவிருத்தி | 01 |
| உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | 01 |
| தகவலும் தொடர்பாடல் தொழிநுட்பமும் | 01 |
| விவசாயமும் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் | 01 |
| நடனம்(UVPA) | 07 |
| இசை(UVPA) | 06 |
| நாடகமும் அரங்கமும்(UVPA) | 01 |
| மருந்தகவியல் | 01 |
| இயன் மருத்துவம் | 01 |
| சூழல் பேணலும் முகாமைத்துவமும் | 01 |

| கற்கைநெறி | தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை |
|---|---|
| வசதிகள் முகாமைத்துவம் | 01 |
| போக்குவரத்தும் தேவைகள் விநியோகஒழுங்கமைப்பு முகாமைத்துவமும் | 01 |
| மூலக்கூற்று உயிரியலும் உயிரிரசாயனவியலும் | 01 |
| கைத்தொழில் புள்ளிவிபரவியலும் கணிதவியல் நிதியும் | 01 |
| புள்ளிவிபரவியலும் செயற்பாட்டு ஆராய்ச்சியும் | 01 |
| கணக்கிடலும் முகாமைத்துவமும் | 01 |
| விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | 01 |
| தொழில் முயற்சியும் முகாமைத்துவமும் | 01 |
| விலங்கு விஞ்ஞானம் | 01 |
| நாடகமும் அரங்கமும் (SVIAS) | 01 |
| ஏற்றுமதி விவசாயம் | 01 |
| தேயிலை தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும் | 01 |
| கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் | 01 |
| கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும் | 01 |
| வியாபார தகவல் முறைமைகள் (விசேஷ) | 01 |
| முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் (SEUSL) | 01 |
| கணக்கிடலும் தகவல் முறைமைகளும் | 01 |
| உடற்றொழில் கல்வி | 01 |
| விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத்துவமும் | 01 |
| பேச்சும் செவி மடுத்தலும் விஞ்ஞானம் | 01 |
| விலங்கு விஞ்ஞானம் மற்றும் மீன் பிடித்தல் | 01 |
| உணவு உற்பத்தி மற்றும் தொழிநுட்ப முகாமைத்துவம் | 01 |
| விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் | 01 |
| தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் | 01 |
| சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் | 01 |
| **மொத்தம்** | **138** |

(2) **வெளிநாட்டுத் தகைமைகள் கொண்ட மாணவர்கள்**

ஏற்கனவே உள்ள சட்ட விதிகளுக்கு அமைவாக பல்கலைக்கழக அனுமதிக்காக வருடாந்தம் வெளிநாட்டு தகைமைகளுடனான ஒரு குறித்த மாணவர் தொகையினையும் அனுமதிப்பதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதற்கமைவாக இலங்கையின் க.பொ.த (உ/த) பரீட்சைக்கு சமமாக கருதப்படும் இலங்கைக்கு வெளியில் நடாத்தப்படுகின்ற வெளிநாட்டுப் பரீட்சைகளில் திறமையான பெறுபேறுகளையுடைய பரீட்சார்த்திகள் இப்பிரிவின் கீழ் விண்ணப்பிக்க தகுதியுடையவர் ஆவர்.

விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில்வெளிநாட்டு தகைமைகளுடனான பரீட்சார்த்திகளுக்காக அனுமதி கைநூலில் நிர்ணயிக்கப்பட்ட விதிகளுக்கு

அமைவாக வெளிநாட்டு தகைமையுடைய மாணவர்களுக்கு ஒவ்வொரு துறையிலும் உள்ள மொத்த இடங்களில் 0.5%வரை ஒதுக்கப்பட்டுள்ளது.அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் பின்வருமாறு

| **கற்கைநெறி** | **தெரிவானோர் எண்ணிக்கை** |
|---|---|
| மருத்துவம் | 06 |
| இயந்திரவியல் | 01 |
| கணனி விஞ்ஞானம் | 01 |
| உயிரியல் விஞ்ஞானம் | 01 |
| **மொத்தம்** | **09** |

இப் பிரிவின்கீழ் மாணவர்களை தெரிவுசெய்வதில் பின்வரும் ஒழுங்கில் முன்னுரிமை வழங்கப்பட்டது.

(அ) ஏனைய நாடுகளில் இருக்கும், இருந்த இலங்கைத் தூதரக ஆளணியின் பிள்ளைகள், தகைமை பெறுவதற்கு உடன் முன்னுள்ள ஆறு ஆண்டுகாலப் பகுதியில் குறைந்தது மூன்று ஆண்டுகள் வெளிநாட்டில் கற்றிருக்க வேண்டும்.

(ஆ) இலங்கையில் கடமைபுரியும் வெளிநாட்டுத் தூதரக ஆளணியின் பிள்ளைகள்.

(இ) சுயநிதியடிப்படையில் அனுமதி நாடும் சார்க் நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள்.

(ஈ) ஐந்து வருடங்களுக்குக் குறையாது வெளிநாடுகளில் கல்வி பயின்றதன்பின் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமைகளைப் பெற்ற இலங்கை மாணவர்கள்.

(உ) வேறு வெளிநாட்டு மாணவர்கள்.

மேலதிகமாக 2011 ஆண்டில் இருந்து வெளிநாடுகளில் பெற்றுக்கொண்ட தகைமைகளுடைய இலங்கை மாணவர்களுக்கும் வெளிநாட்டு மாணவர்களுக்கும் கட்டண அறவீட்டு அடிப்படையில் ஒவ்வொரு துறையிலும் பிரேரிக்கப்பட்டுள்ள உள்வாங்குதலுக்கு மேலாக 4.5% வரை ஒதுக்கப்பட்டது.

2011இல் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சிகளுக்காக அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மாணவர் தொகையினதும் அதனால் சம்பாதிக்கப்பட்ட வருட வருமான அறிக்கையின் விபரமும் வருமாறு,

பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளுக்காக அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மாணவர்கள் - 2011

| பிரிவு / பல்கலைக்கழகம் | மருத்துவம் | பல் அறுவைச் சிகிச்சை | சட்டம் | கலை | இயந்திரவியல் | கணனி விஞ்ஞானம் | பிரயோக உயிர்: விஞ்ஞானம் | மோத்தகு மாணவர்கள் | வருடாந்த வருமானம் US $ |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொ | 47 | - | - | - | - | - | - | **47** | 224,000 |
| பே | 45 | 8 | 1 | - | - | - | - | **54** | 320,500 |
| ஸ்ரீஜ | 10 | - | - | - | - | - | - | **10** | 72,000 |
| கள | 63 | - | - | 16 | - | - | - | **79** | 468,200 |
| ரொமற | - | - | - | - | 6 | - | - | **6** | 48,000 |
| உறு | 5 | - | - | - | 1 | - | - | **6** | 58,000 |
| ரஜ | - | - | - | - | - | - | 1 | **1** | புலமைப்பரிசில் |
| இதிப | - | - | 1 | 1 | - | - | - | **2** | 1,500 |
| கொபகக | - | - | - | - | - | 1 | - | **1** | 2,500 |
| மொத்தம் | **170** | **8** | **2** | **17** | **7** | **1** | **1** | **206** | **1,194,700** |

பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சிகளுக்காக அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு மாணவர்கள் - 2011

| பிரிவு / பல்கலைக்கழகம் | மருத்துவம் | **Bio Stat & Agri** | கல்வி | கலை | சுற்றாடல் விஞ்ஞு | கணனி விஞ்ஞானம் | மீன்பிடி உயிரியல் | முகாமைத்துவம் | புத்த கற்கைகள் | மொத்தம் | வருடாந்த வருமானம் **US $** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொ | 2 | - | - | 7 | - | - | - | - | - | **9** | 33,497 |
| பே | - | - | - | 13 | - | - | - | - | - | **13** | 16,470 |
| கள | - | - | - | 1 | - | - | - | - | - | **1** | 3,185 |
| ரொமற | - | - | - | - | - | 1 | - | - | - | **1** | 4,308 |
| உறு | - | - | - | - | - | - | 1 | - | | **1** | 1,516 |
| இதிப | - | - | 1 | - | 1 | - | - | - | - | **2** | 2,231 |
| பீஜிஐள | - | 4 | - | - | - | - | - | - | - | **4** | 13,500 |
| பிஜளம் | - | - | - | - | - | - | - | 1 | - | **1** | 7,000 |
| பிஜிஐளம் | 1 | - | - | - | - | - | - | - | - | **1** | 12,500 |
| பிஜிஐபிவிஎஸ் | - | - | - | - | - | - | - | - | 179 | **179** | 103,029 |
| மொத்தம் | **3** | **4** | **1** | **21** | **1** | **1** | **1** | **1** | **179** | **212** | **197,236** |

(3) **ஆயுதப் படைகளின் ஆளணியினர்**

இந்த ஏற்பாட்டின் கீழ் மருத்துவம், பல் அறுவை சிகிச்சை மற்றும் இயந்திரவியல் பேன்ற கற்கைநெறிகள் தொடர்பாக 0.5% மான இடங்களோ அல்லது ஒரு இடமோ இதில் எது கூடியதோ அது குறித்தொதுக்கப்பட்டது. விமர்சனைக்குரிய ஆண்டில் இந்தப் பிரிவின் கீழ் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு,

| **கற்கைநெறி** | **தெரிவானோர் எண்ணிக்கை** |
|---|---|
| மருத்துவம் | 06 |
| பல்அறுவைச் சிகிச்சை | 01 |
| இயந்திரவியல் | 06 |
| **மொத்தம்** | 13 |

(4) **விசேட பாடங்களுக்கான அனுமதி**

பின்வரும் பாடங்களைக் கற்பதை உற்சாகப்படுத்துவதனை நோக்காகக் கொண்டு 2010/2011ஆம் கல்வியாண்டுக்காக மொத்தமாக **847** மாணவர்களை அனுமதிப்பதற்கு விசேட ஏற்பாடுகளை ப.மா.ஆ. குழு செய்தது.

அரபு
தொல்பொருளியல்
பௌத்தம்
பௌத்த நாகரீகம்
சைனீஸ்
கிறிஸ்தவம்
கிறிஸ்தவ நாகரீகம்
ஒப்பீட்டு சமயங்கள்
கலாச்சார மற்றும் அழகியற் கற்கைகள்
நாடகமும் அரங்கியலும்
ஆங்கிலம்
நுண்கலை (கலை)
நுண்கலை (சங்கீதம், நடனம், கலை)
பிரெஞ்சு
ஜெர்மனி
கிரேக்கமும் உரோம நாகரீகமும்
ஹிந்தி
இந்து சமயம்
இந்து நாகரீகம்
இஸ்லாம்
இஸ்லாமிய நாகரீகம்
ஜப்பானியம்
மொழியியல்
இலக்கிய திறனாய்வு
பாளி
ருஷியம்
சமஸ்கிருதம்

(5) **கண் பார்வையற்ற மற்றும் அங்கவீனமுற்ற மாணவர்களுக்கான அனுமதி**

2010/2011கல்வியாண்டுக்காக பின்வரும் பிரிவுகளின் கீழ் மாணவர்களை அனுமதிப் பதற்குரிய ஏற்பாடுகளையும் ஆணைக்குழு செய்தது.

| **பிரிவு** | **தெரிவானோர் எண்ணிக்கை** |
|---|---|
| கண் பார்வையற்ற மாணவர்கள் | 20 |
| அங்கவீனமுற்ற மாணவர்கள் | 44 |

(6) **ஆங்கிலத்தில் சித்தியுடன் அதை ஒரு பாடமாகக் கொண்ட பொ.வி.த. (வெளிவாரி) பரீட்சையில் / பொ.க.த. (வெளிவாரி) பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்கள்.**

இந்தப் பிரிவின் கீழ விமர்சனைக்குரிய ஆண்டு காலத்தில் 2010/2011 ஆம் கல்வியாண்டுக்காக கலைப் பிரிவில் உள்ள கற்கை நெறிகளுக்காக மொத்தமாக 22 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

4.6 மேலதிக உள்ளெடுப்பு

பின்வரும் கற்கை நெறிகளுக்காக சாதாரண மற்றும விஷேட ஏற்பாடுகளின் கீழ்சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களுக்கு மேலதிகமாக மொத்தம் 421 மாணவர்கள் மேலதிக உள்ளெடுப்பின் கீழ் கடந்த வருடம் அனுமதிக்கப்பட்டனர்.

| | |
|---|---|
| முகாமைத்துவ கற்கைகள் | 170 |
| வர்த்தகம் | 21 |
| முகாமைத்துவ கற்கைகள்(TV) | 47 |
| இசை | 23 |
| நடனம் | 72 |
| கலையும் சிற்பமும் | 88 |
| | **421** |

4.7 **பல்கலைக்கழக அனுமதிகள் தொடர்பான மேன்முறையீடுகள்**

ஒவ்வொரு வருடமும் ப.மா.ஆ பல்கலைக்கழக அனுமதி சம்பந்தமான மேன்முறையீடுகளை கவனிக்கவும், கிடைக்கப்பெற்ற குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யவும் ஒரு குழுவினை நியமிக்கும். இவ்வாறாக2010/2011ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடுகளையும், குற்றச்சாட்டுகளையும் விசாரணை செய்து அறிக்கையிட பேராசிரியர் ரஞ்சித் சேனாரத்ன,பேராசிரியர் மோகனதாஸ்,பேராசிரியர் சம்பத் அமரதுங்க,பேராசிரியர் கே.ஏ.நந்தசேன மற்றும் கலாநிதி பிரியந்த பிரேமகுமார போன்றவர்கள்இக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். மொத்தமாக 2010/2011 ஆம் கல்வி ஆண்டிற்காக 1026 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதுடன் அதில் 345 விண்ணப்பதாரிகள் தமது கற்கைநெறி அனுமதிக்கான தகைமைகளை பூர்த்திசெய்கின்ற மற்றைய கற்கைநெறிகளுக்கு மாற்றுவதற்காக விண்ணபித்திருந்தனர். குழு அவ்வாறான கற்கைநெறிகளை மாற்றுவதற்கான 133 மேன்முறையீடுகளையும், சூழ்நிலைகளை கவனத்திற்கொண்டு ஏனைய 79 மேன்முறையீடுகளுக்கும் சிபாரிசு வழங்கியது.

| கற்கைநெறிகள் | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| விவசாயம் | 23 |
| உணவு விஞ்ஞானமும் போசாக்கும் | 01 |
| உயிரியல் விஞ்ஞானம் | 04 |
| பிரயோக உயிரியல் | 01 |
| இயந்திரவியல் | 01 |
| கணிய அளவையியல் | 01 |
| கணனி விஞ்ஞானம் | 02 |
| பௌதிக விஞ்ஞானம் | 04 |
| வணிகவியல் | 01 |
| கலை | 02 |
| முகாமைத்துவ கற்கைகள் (TV) | 01 |
| தொடர்பாடல் கற்கைகள் | 05 |
| ஆயுர்வேத மருத்துவமும் அறுவைச் சிகிச்சையும் | 11 |
| யூனானி மருத்துவமும் அறுவைச்சிகிச்சையும் | 02 |
| சித்த மருத்துவம் | 05 |
| நடனம் (UVPA) | 01 |
| மூலக்கூற்று உயிரியலும் உயிரிரசாயனவியலும் | 02 |
| மீன்பிடித்துலும், கடல்சார் விஞ்ஞானமும் | 02 |
| இஸ்லாமியக் கற்கைகள் | 01 |
| இசை (ராமநாதன்) | 01 |
| கட்புல தொழிநுட்பக் கலைகள் (SVP) | 03 |
| மிருக விஞ்ஞானம் மற்றும் மீன் பிடித்தல் | 01 |
| சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் | 04 |
| **மொத்தம்** | **79** |

## 4.8 பல்கலைக்கழக அனுமதி பற்றிய பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

பமாஆ கூட்டவைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க விமர்சனைக்குரிய ஆண்டில் பிராந்திய வலயமாக பல்கலைக்கழக அனுமதி தொடர்பான பல விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. பல்கலைக்கழக வாய்ப்புகள் மற்றும் அனுமதிக்கான செயல்முறைகள் தொடர்பான விழிப்புணர்வை க.பொ.த. உயர்தர ஆசிரியர்கள், எதிர்பார்க்கக்கூடிய மாணவர்கள் மற்றும் பிற ஆர்வமுடைய குழுவினர்களுக்கு ஏற்படுத்துவதற்காக இச்செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

ஆண்டு முழுவதும் இச்செயலமர்வுகள் கொழும்பு, கம்பஹா, காலி, போன்ற நிர்வாக மாவட்டங்களிலுள்ள முன்னிலை பாடசாலைகளில் நடாத்தப்பட்டன. அத்துடன் பல்கலைக்கழக கல்வியில் அண்மைக்கால அபிவிருத்திகள் பற்றிய பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் அச்சடிக்கப்பட்ட ஊடகங்கள் வாயிலாக நடாத்தப்பட்டன.

பல்கலைக்கழகஅனுமதிகள் தொடர்பாக பின்வரும் புள்ளிவிபர அட்டவணைகள் இந்த அறிக்கைக்கு இணைப்பாக தரப்பட்டுள்ளது.

1. 2010/2011ஆம்கல்வியாண்டுக்கான அனுமதிகளின் மாவட்ட மற்றும் கற்கை நெறிவாரியான பகிர்வு (இணைப்பு-I)
2. வழமையான மற்றும் விசேட உள்ளெடுக்கையின் கீழ் 2010/2011ஆம்கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதி (இணைப்பு II )

## 5. கல்வி அபிவிருத்தி மற்றும் கல்வி தராதரங்களின் பராமரிப்பு

### 5.1 நிலையான குழுக்கள்

நிலையான குழுக்கள், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 4 (2) ஆம் பிரிவின் திருத்தங்களின் பிரமாணங்களுக்கு அமைய ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. உயர் கல்வி தொடர்பாக குறிப்பிட்ட துறைகளில் ஆணைக்குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிப்பது மற்றும் ஆலோசனைகளை வழங்குவதே ஒவ்வொரு நிலையான குழுக்களினதும் பொறுப்பாகும். அதற்கிணங்க, 2011 ஆம் ஆண்டில் 14 நிலையான குழுக்களும் 01 ஏனைய சபைகள்/குழுக்களும் செயற்பட்டுக் கொண்டிருந்ததுடன் ஒவ்வொரு நிலையான குழுக்களும் மேற்கொண்ட சந்திப்பு களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| **நிலையான குழுவினது பெயர்** | **நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| 1. விவசாயம், மிருக வைத்தியம் மற்றும் மிருக விஞ்ஞானங்கள் | 05 |
| 2. நூலகமும் தகவல் விஞ்ஞானமும் | 05 |
| 3. ஆங்கிலம் கற்பித்தல் | 05 |
| 4. பல்கலைக்கழகங்களில் தொழில் வழிகாட்டல் மற்றும் மாணவர் நலன்கள் | 05 |
| 5. விஞ்ஞானங்கள் | 05 |
| 6. பட்டப்பின் படிப்புகளும் ஆராய்ச்சியும் | 04 |
| 7. மனித நேயமும் சமூக விஞ்ஞானங்களும் | 02 |
| 8. முகாமைத்துவ கற்கைகள் | 06 |
| 9. இயந்திரவியலும் கட்டடக்கலையும் | 05 |
| 10. மருத்துவம் மற்றும் பல் விஞ்ஞானங்கள் | 06 |
| 11. தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி | 04 |
| 12. தர உறுதிப்படுத்தல் மற்றும் மதிப்பேற்றல் | 05 |
| 13. சுதேச மருத்துவம் | 06 |
| 14. வெளிவாரி பட்டங்கள் | 03 |

**ஏனைய குழுக்கள்**

| | |
|---|---|
| பெறுபேறுகள்/பட்டம் வழங்கும்நிறுவகங்களை அங்கீகரிப்பதற்கான விண்ணப்பங்களை ஆராயும் குழு | 05 |

### 5.2 புதிதாக ஆரம்பிக்கப்பட்ட / மறுசீரமைக்கப்பட்டஇளமாணிப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

பல்வேறு பீடங்களினால்/பல்கலைக்கழகங்களினால் / உயர்கல்வி நிறுவகங்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளை ஆழ்ந்து ஆராய்ந்த பின்னர் ஆணைக்குழு பின்வரும் இளமாணிப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அனுமதி வழங்கியது.

- வங்கியியல் மற்றும் காப்பீட்டு கற்கை நெறியில் பி.எஸ்.சி(சிறப்பு) பட்டம்,முகாமைத்துவ கற்கைகள் பீடம், இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்
- விருந்தோம்பல் சுற்றுலாத்துறை மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவ இளமானிப்பட்டம்,முகாமைத்துவ பீடம், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
- தரைத்தோற்ற கட்டிடக் கலை இளமானிப் பட்டம் பீ.எல்.ஏ.(சிறப்பு), கட்டிடக்கலைப் பீடம்,மொரட்டுவப் பல்கலைக்கழகம்
- விவசாய வணிக முகாமைத்துவத்தில்பி.எஸ்.சி பட்டம், விவசாய பீடம்,உறுகுணைப் பல்கலைக்கழகம்
- பசுமைத் தொழிநுட்பத்தில் பி.எஸ்.சி பட்டம், விவசாய பீடம்,உறுகுணைப பல்கலைக்கழகம்

**பட்டங்களை மீள ஆரம்பித்தல்**

- வர்த்தக இளமானிப் பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை மீள ஆரம்பித்தல், வர்த்தக முகாமைத்துவ கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### 5.3 பட்டப்பின் கற்கை நெறிகள்

பமாஆ குழு 2011 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் பின்வரும் 23பட்டப்பின் கற்கை நெறிகளுக்கான அனுமதியை வழங்கியது.

- இலக்கியத் திறனாய்வில் எம்.ஏ.- மனித நேயங்கள் பீடம்,களனிப் பல்கலைக் கழகம்
- பசுமைத் தொழிநுட்பத்தில் எம்.எஸ்.சி பட்டம்-விவசாய பீடம்,உறுகுணைப பல்கலைக்கழகம்
- ஆயுர்வேத நிறுவகங்களில் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்தில எம்.எஸ்.சி பட்டத்திற்கு இட்டுச் செல்லும் பட்டப் பின் டிப்ளோமா- கம்பஹா விக்கிரமராய்ச்சி ஆயுர் வேத நிறுவகம், களனிப் பல்கலைக் கழகம்
- ஊடற் பயிற்சி மற்றும் விளையாட்டு விஞ்ஞானங்களில் முதுமானிப் பட்டம் - மருத்துவ பீடம், பேராதனைப் பல்கலைக் கழகம்
- சிகிச்சை மரபியலில் எம்.எஸ்.சி மற்றும் மரபியல் கண்டறிகையில் எம்.எஸ்.சி பட்டம் -மருத்துவ பீடம்,கொழும்பு பல்கலைக்கழகம்

- நிர்மமாணச் சட்டம் மற்றும் முரண்பாடு தீர்த்தலில் எம்.எஸ்.சி பட்டம்- கட்டடக் கலைப்பீடம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

- மனிதவளமுகாமைத்துவத்தில் முதுமானிக்கு இட்டுச் செல்லும் மனிதவளமுகாமைத்துவத்தில் பட்டப் பின் டிப்ளோமா- வர்த்தக முகாமைத்துவ கற்கைகள் பீடம்,களனிப் பல்கலைக்கழகம்

- 'பிரயோக நோய்க்கட்டுப்பாடு மற்றும் பரவுகைக் கற்கை' நெறியில் விஞ்ஞான முதுமானி பட்டப் பின் டிப்ளோமா-விஞ்ஞான பட்டப்பின் நிறுவகம், பேராதனைப் பல்கலைக்கழகம்

- நோய்க்கட்டுப்பாடு மற்றும் பரவுகைக் கற்கை நெறியில் பொதுச் சுகாதார முதுமானி -மருத்துவ பீடம், களனிப் பல்கலைக்கழகம்

- பொது நிர்வாகத்தில்முதுமானிக்கு இட்டுச்செல்லும் பட்டப் பின் டிப்ளோமா - பட்டக் கற்கைகள் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்

- அபிவிருத்தி நடைமுறைக் கற்கையில் முதுமானி-கலைப் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

- குடிசார் எந்திரவியலில் எம்.எஸ்.சி / எந்திரவியல் முதுமானிப் பட்டம்- எந்திரவியல் பீடம்,உறுகுணைப பல்கலைக்கழகம்

- சுகாதாரமுகாமைத்துவத்தில்விஞ்ஞான முதுமானி - பட்டக் கற்கைகள் பீடம்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

- முகாமைத்துவத்தில் பீ.எச்.டி. நிகழ்ச்சித் திட்டம் - பட்டக் கற்கைகள் பீடம்,ஸ்ரீஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்

- இசைத்துறையில் முதுமானி (எம்.ஏ.இசை) மற்றும் இசையில் அரங்கேற்றக் கலை முதுமானி- இசைப்பீடம்,கட்புல அரங்கேற்றக்கலைப் பல்கலைக்கழகம்

- மருத்துவ பூச்சியியல் மற்றும் பிரயோக ஒட்டுண்ணியியலில் விஞ்ஞான முதுமானி- இயற்கை விஞ்ஞானங்கள் பீடம்,இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

- சுரங்கத் தொழில் மற்றும் கனிப் பொருள் ஆராய்ச்சியில் விஞ்ஞான முதுமானி- பட்டப் பின் டிப்ளோமா கற்கை நெறி –நில வள எந்திரவியல் துறை,எந்திரவியல் பீடம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

- ஆங்கிலத்தைஇரண்டாம் மொழியாக கற்பித்தலில் பீ.ஜீ. டிப்ளோமா-பட்டக் கற்கைகள் பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

- சிகிச்சை மருந்தகவியல் மற்றும் குணப்படுத்தலில் சபைச் சான்றிதழுடன் கூடிய வைத்தியக் கலாநிதி (மருத்துவம்)- மருத்துவப் பட்டப் பின் நிறுவகம்

- புவியியல் தகவல் முறைமை மற்றும் தொலை உணர்வில் விஞ்ஞான முதுமானி- மனித நேயங்கள் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம், ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்

- குற்றவியல் நீதி முகாமைத்துவத்தில் சட்ட முதுமானிப் பட்ட நிகழ்ச்சித் திட்டம்- இயற்கை விஞ்ஞானங்கள் பீடம்,இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
- விவசாயத்தில் விஞ்ஞான முதுமானி, விவசாய பீடம்,இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம்

## 5.4 புதிதாக அமைக்கப்பட்ட பீடங்கள் / துறைகள் / பிரிவுகள்

குறித்த பரப்புகளில் கல்விச்செயற்பாடுகளை விரிவுபடுத்தும் நோக்கோடு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பின்வரும் பீடங்களை / துறைகளை / பிரிவுகளை ஸ்தாபிப்பதற்கு அனுமதி வழங்கியது.

- மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

ஒருங்கிணைக்கப்பட்ட வடிவமைப்பு துறை, கட்டிடக் கலை பீடம்

- யாழ்ப்பாண பல்கலைக்ககழகம்

இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பிரிவு,மருத்துவப் பீடம்

## 5.5 பீடங்களைப் பெயர் மாற்றுதல்

ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையைக் கருத்தில் கொண்டு ஆணைக்குழு கலைப் பீடத்தை மனித நேயங்கள் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடமாக மாற்றுவதற்கு அனுமதி வழங்கியது.

## 5.6 (i) வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களை அங்கீகரித்தல்

இலங்கை மாணவர்கள் அவர்களுடைய கல்வி பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட வெளிநாட்டு பல்கலைக்கழகங்களை அங்கீகரிப்பதற்கான 450 க்கும் மேற்பட்ட வேண்டுகோள்களை பமாஆ வின் கல்வி அலுவல்கள் துறை கையாண்டது.

### (ii) பட்டம் வழங்கும் நிறுவகங்களை அங்கீகரித்தல்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25A பிரிவின் கீழ் அமைச்சர் உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு நிறுவகங்களை பட்டம் வழங்கும் நிறுவகங்களாக அங்கீகரிக்கலாம். அதற்காக அமைக்கப்பட்ட சிறப்பு நிறுவகம் என்றவகையில் இயங்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் கௌரவ உயர்கல்வி அமைச்சர் 2011ம் ஆண்டு காலப் பகுதியில் பின்வரும் உயர் கல்வி நிறுவனங்களுக்கு கீழ் குறிப்பிட்டவாறான பட்டங்களை வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கினார்

- மருத்துவ இளமானி மற்றும் அறுவைச் சிகிச்சை இளமானி (MBBS)– வரையறுக்கப்பட்ட தொழிநுட்பம் மற்றும் மருத்துவத்திற்கான தென் ஆசிய நிறுவனம் (SAITM) இது 2011.08.30ஆம் திகதி விசேட அரச வர்த்தமானி இல.1721/19 இல் பிரசுரிக்கப்பட்டது.

- வியாபார நிர்வாக இளமானி (BBA –சிறப்பு) வரையறுக்கப்பட்ட இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவகம் (உத்தரவாதம்) (SLIIT). இது 2011.11.22 ஆம் திகதியிடப்பட்டு விசேட அரச வர்த்தமானி இல.1733/ 18 இல் பிரசுரிக்கப்பட்டது.

## 5.7 நடத்தப்பட்ட செயலமர்வுகள்

**இலங்கையில் சுதேச மருத்துவ பல்கலைக்கழக கல்விக்கான பார்வை மீதான செயலமர்வு**

சுதேச மருத்துவம் மீதான செயலமர்வானது நிலையான குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டு நிலையான குழுவின் உறுப்பினரான கலாநிதி ஜீ.ஜெயவர்த்தன (தனியார் ஆலோசகர்/ஆயுர்வேத மருத்துவம்) என்பவரால் அனுசரணை வழங்கப்பட்டு 2011ஆம் ஆண்டு மே மாதம் 30ஆம் திகதியன்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

**இறுதி எம்.பீ.பீ.எஸ் பரீட்சையை நவீனமயப்படுத்துதல் பற்றிய செயலமர்வு**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிலையான குழுவால் பிரேரிக்கப்பட்டதற்கிணங்க, மருத்துவம் மற்றும் பல் வைத்திய விஞ்ஞானங்கள் சம்பந்தமான செயலமர்வு ஒன்று**இறுதி எம்.பீ.பீ.எஸ் பரீட்சையை நவீனமயப்படுத்துதல்** என்ற தலைப்பில்இறுதி எம்.பீ.பீ.எஸ் பரீட்சையின் நிலமை மற்றும் அதன் சிகிச்சைப் பகுதியில் நிகழும் நீடித்த பிரச்சினைகள், இக்கட்டு நிலமைகள், சிக்கல்கள் ஆகியவை தொடர்பாக கலந்துரையாடும் நோக்கில், 2011 ஜுலை மாதம் 28ஆம் திகதியன்று ஜானகி ஹோட்டலில் நடைபெற்றது. மேற் குறிப்பிட்ட செயலமர்வில் தீர்மானிக்கப்பட்டதற்கிணங்க, சிறந்த ஒற்றை விடை மாதிரி வினாக்களை உள்ளடக்குவது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் மருத்துவம், மகப்பேற்றியல் மற்றும் பெண் பாலுறுப்பியல், சிறுவர் நலமருத்துவம் மற்றும் அறுவைச் சிகிச்சை ஆகிய துறைகளில் ஒவ்வொரு குழுவுக்கும் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடல் தொடர்கள் செப்டம்பர் 08, 23 மற்றம் 29ஆம் திகதிகளில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில் இடம் பெற்றன.

**பல்கலைக்கழகங்களில் வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சித் திட்டம்- பிரேரணை எழுத்தாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்**

குறிப்பிட்ட பல்கலைக்கழகங்களில் வெளிவாரிப் பட்ட அலகுகளை அமைப்பதை நோக்காகக் கொண்டு பிரேரணை எழுத்தாளர்களுக்கான செயலமர்வு ஒன்று HETC (UDG –EDP) செயற்றிட்டத்தின் உதவியுடன் வெளிவாரிப் பட்டங்கள் சம்பந்தமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்நிலையான குழுவால் ஏற்பாடு செய்யப்படடு ஆகஸ்ட் 28 மற்றும் 29ஆம் திகதிகளில்ஜானகி ஹோட்டலில் நடை பெற்றது.

**''சர்வதேச படித்தரங்களுக்கு அமைய கணணிப் பட்டங்களை வகைப் படுத்துதல்'' பற்றிய செயலமர்வு**

சர்வதேச படித்தரங்களுடன் கணணிப் பட்டங்களை கொண்டு வருவதையும் கணணித்தரப்படுத்தலை வகைப்படுத்துவதற்கான ACM/IEEE ஐ

பயன்படுத்துவதனையும் நோக்காகக் கொண்டு தகவல் தொழிநுட்ப அபிவிருத்தி சம்பந்தமான செயலமர்வு ஒன்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டு 2011 ஒக்டோபர் மாதம் 21ந் திகதி கொழும்புப் பல்கலைக்கழக கணணி கற்கைகள் நிறுவக கேட்போர் கூடத்தில் நடை பெற்றது.

## 5.8 பட்டதாரி/ பட்டப்பின் பட்டதாரி வெளியீடு

### பட்டதாரி வெளியீடு

2011இல் மொத்தப்பட்டதாரி வெளியீடு 16,686 ஆக இருந்தது. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 28% அதிகரிப்பாகும். மொத்தப் பட்டதாரி வெளியீட்டில் பெரும்பான்மையாக கலைப்பிரிவிலிருந்தே வெளியாகியுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 41% ஆகும்.2011இல் வெளியான மொத்தப் பட்டதாரிகளின் விபரம் வருமாறு

| கற்கைப் பிரிவு | 2010 | 2011 |
|---|---|---|
| கலை | 4,432 | 6,882 |
| முகாமைத்துவமும் வணிகவியல் | 2,704 | 2,849 |
| சட்டம் | 392 | 348 |
| மருத்துவம் | 797 | 1,061 |
| பல் அறுவைச் சிகிச்சை | 64 | 65 |
| விலங்கு விஞ்ஞானம் | 60 | 58 |
| விவசாயம் | 540 | 595 |
| இயந்திரவியல் | 1,285 | 1,346 |
| கட்டடக்கலையும் கணிய அளவையியல் | 140 | 211 |
| விஞ்ஞானம் | 2,420 | 2,750 |
| இணை மருத்துவம் | - | 340 |
| சுதேசியமருத்துவம் | 208 | 181 |
| **மொத்தம்** | **13,042** | **16,686** |

2011 இல் வெளியான மொத்த பட்டப்பின் கற்கை மாணவர்கள் 5,231ஆகக் காணப்பட்டனர். இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும்பொழுது 1,100 மாணவர்களால் குறைவடைந்தது.

**பட்டப்பின் கற்கை வெளியீடு 2011**

| கற்கைப் பிரிவு | பட்டப்பின் டிப்ளோமா | முதுமாணி / எம் பில் | பீ எச் டீ |
|---|---|---|---|
| கலை | 712 | 1,717 | 15 |
| முகாமைத்துவமும் வணிகவியல் | 207 | 1,020 | - |
| சட்டம் | - | 84 | - |
| மருத்துவம் | 215 | 61 | 251 |
| பல் அறுவைச் சிகிச்சை | 28 | - | 5 |

| | | | |
|---|---|---|---|
| விலங்கு விஞ்ஞானம் | - | 1 | - |
| விவசாயம் | 1 | 109 | 4 |
| இயந்திரவியல் | 30 | 182 | 9 |
| கட்டடக்கலையும் கணிய அளவையியல் | 2 | 18 | 1 |
| விஞ்ஞானம் | 182 | 308 | 8 |
| இணை மருத்துவம் | - | - | - |
| சுதேசிய மருத்துவம் | 60 | - | - |
| **தொகை** | **1,437** | **3,501** | **293** |
| **மொத்த தொகை** | **5,231** | | |

## 6. நிதி நிர்வாகம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மதிப்பீட்டுக்கு அமைவாக2011ஆம்ஆண்டில் ரூபா31,556மில்லியன்வேண்டப்பட்டதுடன் திறைசேரி மீண்டெழும் மற்றும் மூலதன செலவுகளுக்காக மொத்தமாக ரூபா 19,700 மில்லியனை முதலில் அங்கீகரித்தது.மேலும் அதிகரித்த ஆளனி சம்பளங்களை நிதியளிப்பதற்காக அவ் வருட காலப்பகுதியில் மேலதிகமாக ரூபா 561.2 மில்லியன் அங்கீகரிக்கப்பட்டது.

2011ஆம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

| வகை / விடயத்தலைப்பு | | | மில்லியன் ரூபா |
|---|---|---|---|
| **மீண்டெழும் மானியங்கள்** | | | |
| | மீண்டெழும் மானியங்கள் | 12,100.00 | |
| | கல்விமற்றும் ஆய்வுக்கான உதவித் தொகை (பாதீட்டுப் பிரேரணை) | 500.00 | |
| | மேலதிக ஒதுக்கீடு | 561.20 | |
| **மொத்தம்** | | | **13,161.20** |
| **மூலதன மானியங்கள்** | | | |
| | மூலதன மானியங்கள் | 5,500.00 | |
| | புதிய பல்கலைக் கழகங்களின் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி(பாதீட்டுப் பிரேரணை) | 1,000.00 | |
| | ஏழு பல்கலைக்கழகங்களை சர்வதேச மட்டத்துக்கு முன்னேற்றுதல்(பாதீட்டுப் பிரேரணை) | 600.00 | **7,100.00** |
| **மொத்தம்** | | | **19,700.00** |

வருட காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட மொத்தமானியங்களும் விடுவிக்கப்பட்ட / பயன்படுத்தப்பட்ட தொகை கடந்த வருடத்துடன் பின்வருமாறு கீழே தரப்பட்டுள்ளது

பல்கலைக்கழக / உ.க.நி களிற்கு ஒதுக்கப்பட்ட / (ஆல்) பயன்படுத்தப்பட்ட நிதி

| மானியம் | 2010ஆம் ஆண்டு | | | | 2011ஆம் ஆண்டு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஒதுக்கப்பட்ட மொத்த நிதிரூபா. மி | விடுவிக்கப் பட்ட மொத்த நிதிரூபா. மி | ஒதுக்கப்பட்ட நிதியில் விடுவிக்கப்பட்ட /பயன்படுத்தப்பட்ட வீதம் | | ஒதுக்கப்பட்ட மொத்த நிதிரூபா. மி | விடுவிக்கப்பட்ட மொத்த நிதிரூபா. மி | ஒதுக்கப்பட்ட நிதியில் விடுவிக்கப்பட்ட / பயன்படுத்தப் பட்ட வீதம் |
| மீண்டெழும் மானியங்கள் | 11,415.3 | 10,961.9 | 96% | | 13,161.2 | 12,961.1 | 98% |
| மூலதன மானியங்கள் | 3,500.0 | 2,831.9 | 81% | | 7,100.0 | 4,278.7 | 60% |
| **மொத்தம்** | **14,915.3** | **13,793.8** | **92%** | | **20,261.2** | **17,239.8** | **85%** |

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், 2011 ஆம் ஆண்டில் மீண்டெழும் மானியங்கள் 14 % அதிகரிப்பையும் மூலதன மானியங்கள்103 %(ரூபா. 3,500மிரூபா. 7,100மி) அதிகரிப்பையும் கொண்டிருந்தது. நாட்டினது உயர் கல்வி முறைமையின்உட்கட்டுமானம் மற்றும் தரம் போன்றவற்றை அபிவிருத்திசெய்யும் நோக்குடன் இவ் அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

மேலே அட்டவணையில் காட்டப்பட்டபடி,ஒதுக்கப்பட்ட ரூபா. 7,100 மி நிதியில் விடுவிக்கப்பட்ட / பயன்படுத்தப்பட்ட மூலதன மானியவீதம் 60 % ஆகும். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 21 % குறைப்பாகும். செலவிடுதலைப் பொறுத்தளவில் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 51 % அதிகரிப்பாகும். (2010 – ரூபா. 2,831.9 மி, 2011 – ரூபா. 4,278.7மி,).

தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் மனிதவள பற்றாக்குறை போன்றவை 2011 ம் ஆண்டில் மூலதன மானியங்கள் குறைவாக பயன்படுத்தப்பட்டமைக்கான காரனங்னளாகும்

**நிதியீட்டல் கொள்கை**

(1) **மீண்டெழும் மானியங்கள்**

**(i) ஆளனி சம்பளங்கள்**

(அ) ஆளணி சம்பளங்களுக்கான ஒதுக்கீடு 2010 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களுக்கான சராசரி உண்மையான செலவினத்தடன் வருடாந்த சம்பள அதிகரிப்புகளுக்காக 05% த்தை சேர்த்து அமைந்தது.

(ஆ) அறக்கொடை ஏற்பாடுகளுக்கான ஒதுக்கீடுகள் பல்கலைக்கழகங்கள்/ உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றினால் மதிப்பிடப்பட்ட அறக்கொடைக் கொடுப்பனவுகளின் அடிப்படையில் அமைந்தது.

(இ) 2011ஆம் பாதீட்டினால் பிரேரிக்கப்பட்டவாறு வேதனம் மற்றும் வாழ்க்கை முற்கொடுப்பனவுகளுக்காக மேலதிக ஒதுக்கீடுகள் மேற் கொள்ளப்படவில்லை.பல்கலைக்கழகங்கள்மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள்பிரேரிக்கப்பட்டமுற்கொடுப்பனவுகளுக்காக வேண்டப்பட்ட மேலதிக நிதியை கையளிக்குமாறு வேண்டப்படுகின்றன.

(ஈ) 2011ஆம் ஆண்டுக்காக புதிய பதவி அணி நிலைகளுக்கான ஒதுக்கீடுகள் மேற் கொள்ளப்படவில்லை. பல்கலைக்கழகங்கள்மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் தமது நிறுவனங்களில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முன்னர்புதிய பதவி அணி நிலைகளுக்கான மதிப்பீடு ஒன்றை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர்

### (ii) ஏனைய மீண்டெழுபவை(OR)

பயணம், விநியோகம், பராமரிப்பு, ஒப்பந்த சேவைகள் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவுகளுக்கான நிதி பின்வரும் சூத்திரத்தின் அடிப்டையில் ஒதுக்கப்பட்டது.

| |
|---|
| ஏனைய மீண்டெழுபவை =மாணவர் சேர்க்கை(மா.சே)x ஒரு மாணவருக்கான திருத்தப்பட்ட செலவினம்(ஒ.மா.தி.செ) |

மேற்குறிப்பிட்ட நிதி வழங்கல் சூத்திரத்தின் பகுதிகளாக மாணவர் சேர்க்கை (மா.சே), பாடகற்கை நெறிக்கான செலவு (பாக.செ), முழுநேரமாணவர் மாற்று விகிதம்(மு.மா.மா.வி)மற்றும் கொள்கைக் காரணி ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருந்தது.

### (iii) மகாபொல மற்றும்உதவு தொகை மானியங்கள்

உதவு தொகைமற்றும் மகாபொல கொடுப்பனவுகளுக்கான நிதிகள் உத்தேசிக்கப்பட்ட மகாபொல/உதவு தொகை பெறுனர்களை மையமாகக் கொண்டு ஏற்கனவேயுள்ள தவணை கொடுப்பனவுகளுடன் சேர்த்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

## (2) மூலதன மானியங்கள்

### (i) நிலையான சொத்துக்களின் மறுசீரமைப்பும் கொள்வனவும்

எல்லா பீடங்களும் அதன் பாட பிரிவுகளுக்குரிய சார்பு கிரயம் மற்றும் பல்கலைக்கழக/உகநி களின் சராசரி நிறையளிக்கப்பட்ட சுமைகளுக்கமைய நிறையளிக்கப்பட்டுள்ளது. அதன்படி நிலையான சொத்துக்களின் மறுசீரமைப்பு மற்றும் கொள்வனவுகளுக்கான மானியம் பல்கலைக்கழகத்தினுடைய சராசரி நிறையளிக்கப்பட்ட சுமைகளுக்கமைய ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### (ii) கட்டுமான செயல்திட்டங்கள்

கட்டுமான செயல்திட்டங்களுக்கான ஒதுக்கீடு பின்வரும் பிரமாணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

(i) செயல்திட்ட முன்னுரிமை
(ii) பல்கலைக்கழக முன்னுரிமை
(iii) ஒரு மாணவருக்கான மூலதன செலவு (CCPS)

### (iii) அறிவுத்திறன் அபிவிருத்தி செயற்றிட்டங்கள்

பல்கலைக்கழகங்கள்மற்றும்உயர் கல்வி நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை அடிப்படையாகக் கொண்டு மேற்படிசெயற்றிட்டத்தின் கீழ் ருபா 500 மில்லியன் நிதியானது பல்கலைக்கழகங்கள்மற்றும்உயர் கல்வி நிறுவனங்களுக்கிடையே ஒதுக்கீடு செய்யப் பட்டது.

விளையாட்டுத் திறன் விருத்தி
மொழித் திறன் விருத்தி
1000 வெளிநாட்டு மாணவர்கள்
தகுதிஅபிவிருத்தி திட்டங்கள்
பல்கலைக்கழக மாணவர் உள்ளகப் பயிற்சி
பல்கலைக்கழக மாணவர்களுக்கான தொழில்ரீதியான திறன்
சிறுவர்களுக்கான தாபனம்
தகவல் தொழிநுட்பம் ஆங்கில திறன்கள்
தொழில் முயற்சியான்மைவிருத்தி
பல்கலைக்கழக பதவியணி விருத்தி

**(iv) செயற்பாட்டு அடிப்படை நிதியீட்டல்**

அரசாங்கம் உயர் கல்விக்காக மேற்கொள்கின்ற முதலீட்டுக்கு மேலதிகமாக சிறந்தபாடசாலைக் கல்வி, சுகாதார பராமரிப்பு, போக்குவரத்து மற்றும் விவாசாயம்போன்றவற்றையும் வழங்கவேண்டியுள்ளதால் அன்மைய தசாப்தங்களில் அரசநிதிக்கு அதிகமான தேவை காணப்படுகின்றது.ஆகையால் பொது திறைசேரி போன்ற நிதியளிக்கும் முகவர் நிறுவனங்களால் பல்கலைக்கழகம் /உகநி களுக்கு நிதியளிக்க புதுமையான நிதியீட்டல் நுட்பங்களை அறிமுகப்படுத்தவேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டன.

இதனால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முலதனமானியங்களுக்குரிய ஒதுக்கீட்டுக்காக செயற்பாட்டு அடிப்படை நிதியீட்டலை ஊக்குவிக்க தீர்மானித்தது. இதன்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் உயர்கல்வி நிறுவனங்களின் செயற்பாட்டை அடிப்படையாக் கொண்டு ரூபா 1960.00 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டது.

| செயற்பாட்டு பீரேரணை அடிப்படையிலான செயற்றிட்டங்கள் | ரூபா. மி |
|---|---|
| பட்டப் பின் ஆய்வு மானியங்கள் | 100 |
| கல்வி சார் வெளியீடுகள் | 60 |
| தரம் மற்றும் புதுமை மானியங்கள்(QIG) | 200 |
| புதிய பல்கலைக் கழகங்களின் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி(பாதீட்டுப் பிரேரணை) | 1,000 |
| சர்வதேச மட்டத்துக்கு ஏழு பல்கலைக் கழகங்களை முன்னேற்றுதல்(பாதீட்டுப் பிரேரணை) | 600 |
| மொத்தம் | **1,960** |

**(2) பட்டப்பின் நிறுவகங்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கடைப்பிடிக்கின்ற நிதியீட்டல் கொள்கையின் அடிப்படையில் பட்டப்பின் நிறுவகங்கள் தமது மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களுக்கான நிதிகளை தாமாகவே தோற்றுவிக்க ஊக்குவிக்கப்படுகின்றனர். அதன்படி பற்றாக்குறைகளை முகாமைசெய்வதற்காக மட்டுப்படுத்தப்பட்ட மீண்டெழும் மானியங்கள் பட்டப்பின்நிறுவகங்களுக்கு ஒதுக்கப்பட்டது.

நிதி நிர்வாகம் - தலைப்பு 214

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் - 2008ம் ஆண்டு முதல் 2011 வரை**

ரூபா. மி

| | | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| 1. | அரசாங்க ஒதுக்கீடு | | | | |
| | மீண்டெழும் | 10,940 | 11,107 | 11,415 | 13,161 |
| | மூலதனம் | 4,929 | 4,520 | 3,500 | 7,100 |
| 2. | செலவு | | | | |
| | மீண்டெழும் | 9,901 | 10,227 | 10,962 | 12,961 |
| | மூலதனம் | 2,996 | 2,726 | 2,832 | 4,279 |
| 3. | மாணவர் நிதியுதவி | | | | |
| | மகாபொல | 106 | 92 | 93 | 127 |
| | உதவு தொகை | 251 | 297 | 328 | 357 |
| | சுனாமி மற்றும் அறக்கொடை புலமைப் பரிசில் | 1 | 1 | 2 | 1 |

**நிதி நிர்வாகம் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு**
2008ம் ஆண்டு முதல் 2011 வரை

| | | **2008** | **2009** | **2010** | **2011** |
|---|---|---|---|---|---|
| **1.** | **அரசாங்க மானியங்கள்** | | | | |
| | மீண்டெழும் மானியங்கள் | 875 | 544 | 586 | 1,120 |
| | மூலதன மானியங்கள் | 216 | 93 | 122 | 817 |
| | **மொத்தம்** | 791 | 636 | 708 | 1,937 |
| **2.** | **ஊள் வாரி வருமானங்கள்** | 3 | 5 | 28 | 12 |
| **3.** | **செலவு** | | | | |
| | மீண்டெழும் | 574 | 549 | 604 | 1,131 |
| | ஆளணி வேதனங்கள் | 81 | 82 | 88 | 96 |
| | மேற்பார்வை மற்றும் சேவைகள் | 493 | 467 | 515 | 1,035 |
| | மூலதனம் | 146 | 44 | 95 | 598 |
| | புனரமைப்பு மற்றும் மூலதன சொத்து அபிவிருத்தி | 12 | 8 | 2 | 11 |
| | நிலையான சொத்துக் கொள்வனவு | 16 | 9 | 4 | 7 |
| | தரம் மற்றும் அபிவிருத்தி மானியங்கள் | - | - | 74 | 199 |
| | வினைத்திறன் கட்டமைப்பு | - | - | - | 371 |
| | பட்டப்பின் ஆய்வு மானியம் | - | - | - | 7 |
| | தகவல் தொழிநுட்ப அபிவிருத்தி நிதி | 118 | 29 | 15 | - |
| | கல்வி வெளியீடு | - | - | - | 3 |
| | நிர்மாண செயற்றிட்டங்கள் | - | - | - | - |

நிதி நிர்வாகம் - தலைப்பு **214**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள்

மீண்டெழும் / மூலதன மானியத்திற்குரிய ஒதுக்கீடு- **2009** முதல் **2011** ஆம்ஆண்டு வரை

| பல்கலைக்கழகங்கள் / நிறுவனங்கள் | மீண்டெழும் மானியம் | | | மூலதன மானியம் | | |
|---|---|---|---|---|---|---|
| | **2009** | **2010** | **2011** | **2009** | **2010** | **2011** |
| பே. | 1,801 | 1,830 | 1,975 | 297 | 290 | 340 |
| கோ | 1,072 | 1,070 | 1,100 | 250 | 238 | 287 |
| ஶ்ரீஜ | 891 | 980 | 1,000 | 279 | 180 | 275 |
| கள | 890 | 975 | 1,000 | 231 | 171 | 256 |
| மோற | 752 | 785 | 820 | 251 | 199 | 250 |
| உறு | 952 | 1,025 | 1,060 | 216 | 230 | 315 |
| யாழ் | 669 | 690 | 740 | 243 | 229 | 339 |
| இதிப | 511 | 530 | 550 | 51 | 34 | 40 |
| இகிப | 335 | 346 | 355 | 179 | 160 | 230 |
| ரஜ | 363 | 391 | 450 | 532 | 353 | 423 |
| சப | 348 | 385 | 413 | 410 | 257 | 237 |
| இதெகிப | 227 | 242 | 285 | 162 | 130 | 131 |
| வய | 281 | 305 | 339 | 291 | 164 | 247 |
| கஅப | 233 | 284 | 285 | 320 | 149 | 215 |
| ஊவெப | 122 | 155 | 175 | 427 | 200 | 210 |
| விபபிநி | 15 | 18 | 22 | 3 | 2 | 2 |
| மபபி | 81 | 82 | 80 | 7 | 4 | 1 |
| தொபபிநி | 30 | 34 | 41 | 2 | 8 | 2 |
| முபபிநி | - | - | - | - | 10 | 15 |
| விபபிநி | 10 | 14 | 19 | 15 | 5 | 3 |
| பாபுபபிநி | 16 | 16 | 11 | 0 | 1 | 1 |
| பபிகநி | 5 | 4 | 4 | 0 | 1 | 1 |
| சுமநி | 120 | 112 | 135 | 5 | 15 | 20 |
| மஅமுநி | 19 | 19 | 22 | 2 | 4 | 4 |
| கொககநி | 74 | 72 | 80 | 4 | 5 | 28 |
| கவிஆநி | 103 | 93 | 108 | 69 | 50 | 64 |
| மொதொநி | 57 | 62 | 74 | 15 | 51 | 5 |
| நுதகேநி | 7 | 8 | 7 | 1 | 2 | 2 |
| உமூஉநி | 30 | 30 | 34 | 3 | 5 | 6 |
| சுவநி | 22 | 31 | 45 | 8 | 6 | 11 |
| உகதேம | 12 | 46 | 10 | 1 | 2 | 62 |
| திருகோணமலை | 55 | 58 | 61 | 118 | 68 | 79 |
| IATRS | - | 5 | 7 | - | 10 | 21 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பமாஆ | 143 | 162 | 163 | 68 | 72 | 81 |
| தென் ஆசிய ப.கழகங்கள் | - | 7 | - | - | - | - |
| **மொத்தம்** | **10,241** | **10,866** | **11,469** | **4,459** | **3,300** | **4,200** |
| | | | | | | |
| செயற்பாட்டு மானியங்கள் | 865 | 549 | 1,131 | 61 | 200 | 2,900 |
| சம்பளத்துக்கான மேலதிக ஒதுக்கீடு | - | - | 561 | - | - | - |
| | | | | | | |
| **தேறிய மொத்தம்** | **11,107** | **11,415** | **13,161** | **4,520** | **3,500** | **7,100** |

## (7) ப.மா.ஆ நிர்வாக காரியாலயத்தின் நிரந்தர சேனை

2011 ஆம் வருடத்திற்கான பமாஆ வின் நிர்வாக காரியாலயத்திற்குரிய **261** ஊழியர்களில் நிரந்தர சேனை நிர்வாக தரங்களில் **52,** எழுதுவினைஞர் மற்றும் இவ்வகையைச் சேர்ந்த தரங்களில் **156** மற்றும் தாழ்ந்த பதவி தரங்களில் **53** இனையும் கொண்டிருக்கிறது. முதலாவது வர்க்கத்தில் **42** பேரும்,**119** பேர் இரண்டாவது வர்க்கத்திலும் மற்றும் மூன்றாவது வர்க்கத்தில் **45** பேரும் 2011 டிசம்பர் 31 இல் பதவியில் இருந்தனர்.

### 7.1 (அ) விமர்சனைக்குரிய ஆண்டுகாலத்தில் ப.மா.ஆ வின் நிர்வாக காரியாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள்

| பெயர் | பதவி | நியமன திகதி |
|---|---|---|
| திரு.எச்.டி.ஆர் கருணாரத்ன | சிரேஷ்ட உதவி செயலாளர் | 03.01.2011 |
| திருமதி பீ.வீ. தமயந்தி | புள்ளிவிபரவியலாளர் | 06.01.2011 |
| திரு.என்.எஸ்.மனோஜ் | கணக்கேடு பேணுபவர் ் தரம் II Seg “B” | 15.02.2011 |
| திருமதி பீ.கெ. சாகரிகா | சிரேஷ்ட உதவி கணக்காளர் | 01.03.2011 |
| திருமதி எஸ்.ஏ.ஐ.சுபாசிங்க | சுருக்கெழுத்தாளர் தரம்I ஆங்கிலம் | 10.03.2011 |
| திரு யூ.டப்ளீயு.டி.எஸ்.என். பியவர்தன | தொழிலாளர் தரம்III | 15.03.2011 |
| திரு. பீ.எஸ்.பிரியங்கர | தொழிலாளர் தரம்III | 15.03.2011 |
| செல்வி ஆர்.எம்.எஸ்.பீ.கே்.ரத்நாயக்க | தொழிலாளர் தரம்III | 15.03.2011 |
| திரு.ஆர். சி.எம். கீரத்திதிலக்க | தொழிலாளர் தரம்III | 15.03.2011 |
| திருமதி.எம்.எஸ்.பீ.பீரிஸ் | சிரேஷ்ட உதவி கணக்காளர் | 01.04.2011 |
| செல்வி சீ.எம்.எச்.கே.கே.சந்திரசேகர | கணணி பிரயோக உதவியாளர் தரம் III | 02.05.2011 |
| திரு.டி.பீ.பீ.கே.ஹேமந்த | கணணி பிரயோக உதவியாளர் தரம் III | 02.05.2011 |
| செல்வி ஐ.ஏ.ஆர். மாரசிங்க | கணணி பிரயோக உதவியாளர் தரம் III | 02.05.2011 |
| திரு.எச். எம்.ஜீ.எல். செனவிரத்ன | கணணி பிரயோக உதவியாளர் - பயிற்சி | 02.05.2011 |
| திருமதி எச்.எம்.சீ.பீ.கே. விஜேரத்ன | கணணி பிரயோக உதவியாளர் தரம் III | 04.05.2011 |

| | | |
|---|---|---|
| திருமதி பீ.எம்.ஏ.பஸ்நாயக்க | சிரேஷ்ட உதவி செயலாளர் | 01.08.2011 |
| திரு.ஆர்.ஆர்.எம்.கே.ஆர்.பண்டா | தொழிலாளர் தரம்III | 15.08.2011 |
| திரு.பீ.ஜீ.ஹேமபால | தொழிலாளர் தரம்III | 15.08.2011 |
| திரு.கே.எம்.ஏ.பீ. குலதுங்க | தொழிலாளர் தரம்III | 15.08.2011 |
| செல்வி எஸ..ஏ.ஜீஇடி.கே.பெரேரா | கணனி பிரயோக உதவியாளர் தரம் III | 22.08.2011 |
| செல்வி வீ.ஆர். யோகநாதன் | கணனி பிரயோக உதவியாளர் - பயிற்சி | 22.08.2011 |
| திரு்.எச்.ஏ.டி.சி.குமார | கணனி பிரயோக உதவியாளர் தரம் III | 22.08.2011 |
| செல்வி ஜீ.ஜீ. கனிஷ்கா | கணனி பிரயோக உதவியாளர் - பயிற்சி | 22.08.2011 |
| திருமதி.ஆர்.எம்.கே.எச்.கே.ரத்நாயக்க | கணனி பிரயோக உதவியாளர் - பயிற்சி | 22.08.2011 |
| துிரமதி.எச்.டப்ளியு.எம்.ஜே.டி.ஜே. விஜேகோன் | கணனி பிரயோக உதவியாளர் தரம் III | 22.09.2011 |
| செல்வி வீ.ஆர்.எம்.விஜேவர்த்தன. | சுருக்கெழுத்தாளர் தரம II(ஆங்கிலம்) | 17.10.2011 |

**(ஆ) ஒப்பந்த / கொடுக்கப்பட்ட வேலை அடிப்படையில் நியமனங்கள்**

| **பெயர்** | **பதவி** | **ஒப்பந்த/கொடுகப்பட்ட வேலையினது திகதி** |
|---|---|---|
| திரு.ஜீ.குணசேன பெரேரா | சிரேஷ்ட உதவி செயலாளர் (கொடுக்கப்பட்ட வேலை அடிப்படையில்) | 18.04.2011 முதல்07.11.2011 வரை 08.11.2011 முதல் 07.02.2012 வரை |
| திருமதி கே.ஜே.ஆர்.ஆர்.டப்ளியு.எம். எதிபொல | இலிகிதர் (கொடுக்கப்பட்ட வேலை அடிப்படையில்) | 15.08.201 முதல் 14.02.2012வரை |
| திரு.பீ.ஜீ. ஹேமபால | தொழிலாளர் (கொடுக்கப்பட்ட வேலை அடிப்படையில்) | 06.06.2011 முதல் 14.08.2011 வரை |
| செல்வி நீ.ஜீ.டி.என். குமாரி | தொழிலாளர்(ஒப்பந்த அடிப்படையில்) | 15.08.2011 முதல் 14.02.2012 வரை |
| செல்வி டப்ளியு.ஜீ. உதயங்கனி செல்டன் | இலிகிதர் (கொடுக்கப்பட்ட வேலை அடிப்படையில்) | 03.01.2011 முதல்03.07.2011 வரை 03.07.2011 முதல் 31.07.2011 வரை |
| திரு.டி.பீ.எஸ்.எஸ். பத்மசிறி | சிரேஷ்ட பதவி நிலை உதவி/ கணக்கேடு பேணுதல் | 06.07.2011 முதல் 01.08.2011 வரை 10.02.2011 முதல் 08.06.2011 வரை |

## 7.2 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பதவி உயர்வுகள்

| பெயர் | பதவி | வலுவுக்கு வரும் திகதி |
|---|---|---|
| திருந் கே.எம்.ஜீ குணசேகர | தொழிலாளர் தரம்II | 01.07.2009 |
| திரு. எச்.டி.டி.ஹேவகே | தொழிலாளர் தரம்II | 01.07.2009 |
| திரு.டி.எம்.யு.கே.ஜீ. பண்டார | தொழிலாளர் தரம்II | 01.07.2009 |
| திரு.எம்.என். பிரேமலால் | தொழிலாளர் தரம்II | 01.07.2009 |
| செல்வி ஜே.எம்.டீ.என். ஜயசிங்க | தரவுப் பதிவு இயக்குனர் தரம்II Seg “A” | 01.08.2009 |
| திரு.ஐ.டி.குமுது குமார | சாரதிதரம்I | 02.05.2010 |
| திருமதி பபாசரா ஜயவர்தன | கணணி பிரயோக உதவியாளர் தரம் II | 01.11.2010 |
| திருமதி டி.விஜேசிங்க | சிரேஷ்ட பதவி நிலை உதவி/ தட்டெழுத்து /(ஆங்கிலம்) | 01.01.2011 |
| திருமதி எச்.என். பீ டி.சில்வா | சிரேஷ்ட பதவி நிலை உதவி/ தட்டெழுத்து /(ஆங்கிலம) | 01.01.2011 |
| திரு.எஸ்.ஏ. பேமாரத்ன | பதவி நிலை உதவி/இலிகிதர் சேவைகள் | 01.01.2011 |
| திருமதி டப்ளியு.எம் வீ.வணசிங்க | பிரதி செயலாளர்/ எல் மற்றும் டி. | 11.04.2011 |
| திருமதி எல்.கே. பீ.எஸ் ரஜகீய | சிரேஷ்ட உதவி செயலாளர்/ எல் மற்றும் டி. | 11.04.2011 |

## 7.3 நீண்ட கால சேவை விருதுகள்

ஆணைக்குழு சுற்றுநிருப இல.893இன் ஏற்பாட்டின் கீழ் நீண்ட கால சேவை விருதுகள் பெறுவதற்கு தகுதி பெற்ற அதன் காரியாலயத்தின் பின்வரும் உத்தியோக அங்கத்தினருக்கு அவர்களால் பல்கலைக்கழக முறைமைக்கு வழங்கப்பட்ட நீண்டகால திருப்திகரமான சேவைக்கான பண விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

| பெயர் | பதவி | சேவைக் காலம் | திகதி |
|---|---|---|---|
| திருமதி.பீ.வீ.ஆர்.சீ.பெரேரா | சிரேஷ்ட பதவிநிலை உதவி CS | 35 வருடங்கள் | 01.07.2011 |
| திரு.எச்.எல்.வீரசிங்க | தொழிலாளி (விசேஷ தரம்) | 30 வருடங்கள் | 11.02.2011 |
| திருமதிகே.எம.ஆர். வலகெதர | சிரேஷ்ட பதவிநிலை உதவி /தோலை பேசி இயக்குனர்/ வரவேற்பாளர் | 30 வருடங்கள | 05.05.2011 |
| திருமதி டப்ளியு.கருணாரத்ன | மேலதிக செயலாளர் | 30 வருடங்கள் | 25.05.2011 |
| திருமதி. ஏம்.ஏ.ஆர்..பி.பி.குணதிலக்க | சிரேஷ்ட பதவிநிலை உதவி/ CS | 30 வருடங்கள் | 01.06.2011 |
| திருமதி பி.எல்.எஸ்.டயஸ் | சிரேஷ்ட பதவிநிலை உதவி/ CS | 30 வருடங்கள் | 01.06.2011 |
| திருடி.எம்.பீ ரொட்றிகோ | தொழிலாளி (விசேஷ தரம்) | 30 வருடங்கள் | 01.06.2011 |
| திருமதி கே.எல்.குசுமாவதி | சிரேஷ்ட பதவிநிலை உதவி/ ஏடு | 30 வருடங்கள் | 01.06.2011 |
| திரு.ஜீ.என்.பீ. பெர்னாண்டோ | சிரேஷ்ட பதவிநிலை உதவி/ CS | 30 வருடங்கள் | 01.072011 |
| திருமதி.என். கே.விக்கிரமசிங்க | தரவு முகாமையாளர் தரம்I | 30 வருடங்கள் | 08.09.2011 |

| | | | |
|---|---|---|---|
| திரு.எஸ்.ஸ்ரீஸ்கந்தா | சிரேஷ்ட உதவி கணக்காளர் | 30 வருடங்கள் | 21.09.2011 |
| திரு.கேஏ. பத்மசிறி | தொழிலாளி (விசேஷ தரம்) | 25 வருடங்கள் | 15.01.2011 |
| திரு.எம்ஏ.டி.ஷேர்லி | சிரேஷ்ட பதவிநிலை உதவி/ CS | 25 வருடங்கள் | 03.03.2011 |
| திருமதி.எம்டப்னியு.ஜி. சமன்மல | சிரேஷ்ட பதவிநிலை உதவி/ CS | 25 வருடங்கள் | 04.04.2011 |
| திரு.கே.ஜீ.றீ.எல். நந்தசேன | செயலாளர்/ ப.மா.ஆ. | 25 வருடங்கள் | 15.05.2011 |
| திருமதி.ஏ.ஆர். பஸ்நாயக்க | சிரேஷ்ட பதவிநிலை உதவி/ தட்டெழுத்து(E) | 25 வருடங்கள் | 01.07.2011 |
| திருமதி.கே.டப்ளியு.டி.எஸ். லிலியட் | சிரேஷ்ட பதவிநிலை உதவி/ தட்டெழுத்து(E) | 25 வருடங்கள் | 01.07.2011 |

## 7.4 பதவியிலிருந்து ஓய்வு

விமர்சனைக்குரிய ஆண்டுகாலத்தில் பமாஆ காரியாலயத்தின்பதவியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள்பின்வருமாறு.

| பெயர் | பதவி | வலுவுக்கு வரும் திகதி |
|---|---|---|
| திரு. ஜீ.குணசேன பெரேரா | சிரேஷ்ட உதவி செயலாளர் | 11.04.2011 |
| திருமதி. ஆர்.பீ.விஜேசூரிய | பிரதி செயலாளர் | 28.12.2011 |
| திருமதி.எஸ்.ரமணீசன் | சிரேஷ்ட பதவிநிலை உதவி/ சுருக்கெழுத்தாளர் | 09.10.2011 |
| திருமதிஎம.ஏ.ஆர்.பி.பி. குணதிலக | சிரேஷ்ட பதவிநிலை உதவி/CS | 06.09.2011 |
| திருமதி டப்ளியு.ஏ.எச்இசி. விஜேகோன் | சிரேஷ்ட பதவிநிலை உதவி/CS | 28.02.2011 |
| திருமதி ஏ.எச்.ஏ.எல்.ஏ.ஹெட்டியாராய்ச்சி | சிரேஷ்ட பதவிநிலை உதவி/ சுருக்கெழுத்தாளர் (S) | 28.01.2011 |
| திரு.டி.பீ.எஸ்.எஸ். பத்மசிறி | சிரேஷ்ட பதவிநிலை உதவி/ கணக்கேடு பேணுதல் | 09.02.2011 |
| திரு.எம்.பீ.எம்.பெரேரா | தொழிலாளி (விசேஷ தரம்) | 20.06.2011 |

## 7.5 பதவி ராஜினாமா செய்தல்

விமர்சனைக்குரிய ஆண்டுகாலத்தில் ப.மா.ஆ காரியாலயத்திலிருந்து பதவி விலகியவர்கள் பின்வருமாறு

| பெயர் | பதவி | வலுவுக்கு வரும் திகதி |
|---|---|---|
| திரு.எஸ்.எம்.சுமனதிஸ்ஸ | சிரேஷ்ட உதவி செயலாளர் | 23.03.2011 |
| செல்வி பீ.பி.பீ.தலுவத்த | சிரேஷ்ட உதவி செயலாளர் | 30.04.2011 |
| திருமதி றீ.எஸ்.தமயந்தி | சிரேஷ்ட பதவிநிலை உதவி/ சுருக்கெழுத்தாளர் (E) | 01.02.2011 |

| | | |
|---|---|---|
| திருமதி டப்ளியு.எம்.பீ.ஜீ இட்டவல | பதவிநிலை உதவி/CS | 10.01.2011 |
| செல்வி யு.ஜி.பி.ரஞ்சனி | கணணி பிரயோக உதவியாளர் தரம் III | 17.12.2011 |

## 7.6 பதவியில் இருந்து நீங்குதல்

விமர்சனைக்குரிய ஆண்டுகாலத்தில் பின்வரும் உத்தியோகத்தர்கள் பதவியிலிருந்து நீங்கியவர்களாக கருதப்பட்டனர்.

| பெயர் | பதவி | வலுவுக்கு வரும் திகதி |
|---|---|---|
| திரு.கே.எம்.ஏ.பி.குலதுங்க | தொழிலாளிதரம் III | 21.09.2011 |

**பதவியை முடிவுறுத்துதல்**

| பெயர் | பதவி | வலுவுக்கு வரும் திகதி |
|---|---|---|
| திரு.பி.ஜி.எஸ்.ஏ.விஜேரத்ன | தொழிலாளிதரம் III | 01.08.2011 |

## 7.7 உத்தியோகத்தர் பயிற்சியும் அபிவிருத்தியும்

பமாஆ ஒவ்வொரு வருடமும் காரியாலய ஆளனி உறுப்பினர்களின் திறமைகளையும், வேலை அறிவினையும் உயர்த்துவதற்கு அவர்களுக்குரிய கடமைகளுடன் தொடர்புடைய செயலமர்வுகள்/பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்குகிறது. இச்செயலமர்வுகள்/பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் SLIDA, IPM, ICTAD, NIBM, SLFI, IHRA, ISMM, ASASL,ACTAமற்றும் British Council போன்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களால் நடாத்தப்படுகின்றன. அத்துடன்உத்தியோகத்தர்களின் பயிற்சிகளுக்காக நிதியளிக்கும் நோக்கத்திற்காக பமாஆ வினால் ஒரு தனியான உத்தியோகத்தர் பயிற்சி நிதியும் பராமரிக்கப்படுகிறது.

இவ்வசதிக்கு மேலதிகமாக, பல்கலைக்கழக முறைமையில் உள்ள உயர் கல்வி நிறுவகங்களால் நடாத்தப்படும் தொழில் விருத்திக்கு வலு சேர்க்கும் கற்கைநெறிகளை தொடரவிரும்பும் உத்தியோக அங்கத்தவர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கும் ஏற்பாடுகள் உள்ளது.

விமர்சனைக்குரிய ஆண்டுகாலத்தில் பமாஆ வால் தெரிவு செய்யப்பட்ட 10நிர்வாக உத்தியோகத்தினரும் 17நிர்வாகம் சாரா உத்தியோக உறுப்பினர்களும் பின்வரும் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றினர்.

## நிர்வாக உத்தியோகஸ்தர்

| பெயர் மற்றும் பதவி | நிகழ்ச்சி | நிறுவகம் |
|---|---|---|
| திரு. டப்ளியு.கருணாரத்ன<br>மெலதிக செயலாளர் | தேசிய மனித வள மாநாடு | IPM |
| திரு.ரசிகா கருணாரதன<br>சிரேஷ்ட உதவிசெயலாளர் | "பொது ஆவணங்கள் மற்றும் தரவுகள் சட்ட நிர்வாகம்"பற்றிய செயலமர்வு | DNA |
| திரு.ரசிகா கருணாரத்ன<br>சிரேஷ்ட உதவிசெயலாளர் | "தீர்மானம் எடுத்தல் செயன் முறையில் மகளிர்களுடைய பற்கேற்றலை விருத்தி செய்தல்˙"பற்றிய செயலமர்வு | SLFI |
| திருமதி எல்.கே. பீ.எஸ் றஜகீய<br>சிரேஷ்ட உதவிசெயலாளர் | "ஒரு பதில் முரண்பாட்டு தீர்வு நுட்பமாக உள்ள நடுத் தீர்ப்பு" பற்றிய கருத்தரங்கு | ICPL |
| திருமதி நிசாந்தி. பலங்கசிங்ஹ,<br>உதவி செயலாளர் | மனித வள முகாமைத்துவத்தில் பட்டப் பின் டிப்ளோமா | IHRA |
| திரு.ஜி.டி.டி.பெரேரா<br>பணிகள் எந்திரவியலாளர்(குடிசார்)<br>தரம் III | உயர் தர எழுத்தாண்மை | SLIDA |
| திரு. டி.எல்.சி. டில்ரோசன்,<br>உதவி செயலாளர் | "பொது முகாமைத்துவ முதுமானி"<br>(எம்.பீ.எம். பட்டம்) | SLIDA |
| திருமதி பீ.வீ.தமயந்தி<br>புள்ளிவிபரவியலாளர் | 4வது சர்வதேச புள்ளிவிபரவியல் மாநாடு-2011 | ASASL |
| திருமதி.ஜி.எம.எஸ்.ரணவீர<br>மக்கள் தொடர்பு அதிகாரி | வளர்ந்தோருக்கான பொது ஆங்கில பாடநெறி | British Council |
| திருமதி எஸ்.விஜயகுல சூரிய<br>உதவி உள்ளக கணக்காய்வாளர் | "தீர்மானம் எடுத்தல் செயன் முறையில் மகளிர்களுடைய பற்கேற்றலை விருத்தி செய்தல்˙"பற்றிய செயலமர்வு | SLFI |
| திரு.ஐ.எஸ்.சேனநாயக்க<br>சிரேஷ்ட பதவிநிலை உதவி/CS | பதிவு முகாமைத்துவப் பாடநெறி | DNA |
| திருமதி டீ.விஜேசிங்க<br>சிரேஷ்ட பதவிநிலை உதவி/ தட்டெழுத்து | செயலக பயிற்சிகள் பற்றிய செயலமர்வு | NIBM |
| திருமதி டீ.விஜேசிங்க<br>சிரேஷ்ட பதவிநிலை உதவி/தட்டெழுத்து | செயலக பயிற்சிகளில் உயர் தர சான்றிதழ் பாடநெறி | NIBM |
| திரு.என். கல்லகே<br>பதவிநிலை உதவி/CS | எழுதுவினையாண்மை அபிவிருத்தி பற்றிய செயலமர்வு | NIBM |
| திரு. எஸ்.ஏ.பிரேமரத்ன<br>பதவிநிலை உதவி/CS | எழுதுவினையாண்மை அபிவிருத்தி பற்றிய செயலமர்வு | NIBM |
| திருமதி ஆர்.எல்.எஸ்.என்.ரணசிங்க<br>இலிகிதர் தரம் I | எழுதுவினையாண்மை அபிவிருத்தி பற்றிய செயலமர்வு | NIBM |
| திரு.டப்ளியு.டி.ஐ.அருணகுமார<br>**கபிஉ**, தரம்II | எழுதுவினையாண்மை அபிவிருத்தி பற்றிய செயலமர்வு | NIBM |
| செல்வி.. எச்.டி.பி.ரங்கனி<br>தட்டெழுத்தாளர், தரம்II | எழுதுவினையாண்மை அபிவிருத்தி பற்றிய செயலமர்வு | NIBM |
| திருமதி டப்ளியு..ஜீ.சி.எஸ் ஜயரத்ன<br>**கபிஉ**, தரம்III | எழுதுவினையாண்மை அபிவிருத்தி பற்றிய செயலமர்வு | NIBM |
| திருமதி டப்ளியு.ஏ.சி.பி வெத்தசிங்க<br>**கபிஉ**, தரம்III | எழுதுவினையாண்மை அபிவிருத்தி | NIBM |

| | | |
|---|---|---|
| செல்வி யு.ஜி.பி ரஞ்சனி **கபிஉ,** தரம்III | செயலக பயிற்சிகளில் உயர் தரசான்றிதழ் பாடநெறி | NIBM |
| திரு. கே.டப்ளியு. நந்தகுமார களஞ்சியக் காப்பாளர் தரம்III | களஞ்சிய முகாமைத்துவம் -2011 | ISMM |
| திரு. கே.டப்ளியு. நந்தகுமார களஞ்சியக் காப்பாளர் தரம்III | களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் விநியோக சங்கிலி முகாமைத்துவம் | ICTAD |
| திரு.என்.எச்.யு.என். பெரேரா கனிஷ்ட பணிகள் மேற்பார்வையாளர் | தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சி கட்டுமான மேற்பார்வையாளர் | ACTA |
| திரு.கே.எம்.ஜி.ஞானரத்ன சாரதி(விஷேட)தரம் | விஞ்ஞான பாதுகாப்பு மற்றும் பொருளியல் ரிதியாக மோட்டார் வாகனங்களை செலுத்ததுதல் பற்றிய செயலமர்வு | ICTAD |
| திரு.எம்.எஸ்.சந்திரசேன சாரதி தரம் II | விஞ்ஞான பாதுகாப்பு மற்றும் பொருளியல் ரிதியாக மோட்டார் வாகனங்களை செலுத்ததுதல் பற்றிய செயலமர்வு | ICTAD |

ப.மா.ஆ வின் பதவிநிலை உத்தியோகத்தர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்யும் நோக்குடன ப.மா.ஆ செயலகத்தில் 41 ஊழியர்களுக்கான ஆங்கில பாடநெறி ஒன்று இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

### 7.8 பாராட்டும் வரவேற்பும்

விமர்சனைக்குரிய காலப்பகுதியில் ஆணைக்குழு அதன் ஊழியர்களாயிருந்து விலகிச் சென்றவர்கள் ஆற்றிய சேவைகளுக்கு அதன் பாராட்டுதல்களை பதவியில் வைக்க விரும்பியதுடன், அந்த காலப்பகுதியில் சேவையில் இணைந்து கொண்டவர்களை வரவேற்றது.

அத்துடன் ஆணைக்குழு 2011 ஆம் ஆண்டு டிசம்பர் 03ஆம் திகதி உயிர்இழந்த ஆணைக்குழுவின் செயலகத்தில் 30 வருடங்களுக்கு மேலாக பணியாற்றிய திரு.டி.எம்.பி.ரொட்றிகோதொழிலாளி (விசேஷ தரம்) என்பவரின் மறைவு தொடர்பாக தனது ஆழ்ந்த அனுதாபங்களை பதிந்தது.

## 8. மனித வள முன்னேற்றங்கள்

### 8.1 சேனை மீள்நோக்கு

முகாமைத்துவ சேவைகள் திணைக்களமானது ப.மா.ஆவினால் மேற் கொள்ளப் பட்ட பரிந்துரைகளை கவனத்தில் கொண்டு 2011ஆம்ஆண்டுக்காக உயர் கல்வி நிறுவனங்களுக்கான பின்வரும் புதியசேனை பதவிகளை அங்கிகரித்தது. .

| | **பல்கலைக்கழகங்கள்** |
|---|---|
| கல்விசார் | 470 |
| நிர்வாகம் சார் | 20 |
| கல்விசாரா நிர்வாகம் சாரா | 20 |
| **மொத்தம்** | **510** |

## 8.2 நிர்வாக தரங்களுக்கான நியமனங்கள் / பதவி உயர்வுகள்

1978ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 71(2) இன் மற்றும் பிரிவு 8(1) இன் பந்தி(ii) மற்றும் (iiiற்கும் அமைவாக நிர்வாக தரங்களுக்கான நியமனங்கள்/பதவி உயர்வுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் செய்யப்படல்வேண்டும். அதன்படி 2011 ஆம் வருடத்தில் பின்வரும் நியமனங்களும் பதவி உயர்வுகளும் செய்யப்பட்டன.

**நியமனங்கள் / பதவி உயர்வுகள்**

**(அ) சிரேஷ்ட உதவி செயலாளர்/ சிரேஷ்ட உதவி பதிவாளர் பதவி**

| நிறுவகம் | எண்ணிக்கை |
|---|---|
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 02 |
| கொழும்புப் பல்கலைக்கழகம் | 03 |
| களனி பல்கலைக்கழகம் | 03 |
| மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 02 |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 02 |
| உறுகுணைப் பல்கலைக்கழகம் | 02 |
| கிழக்கு பல்கலைக்கழகம் | 01 |
| இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகம் | 02 |
| இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம் | 01 |
| இலங்கை வயம்பப் பல்கலைக்கழகம் | 02 |
| கட்புல அரங்கேற்றக் கலைப் பல்கலைக்கழகம் | 02 |
| திருகோணமலை வளாகம் | 01 |
| ஆங்கிலப் பட்டப்பின் நிறுவகம் | 01 |

**(ஆ) சிரேஷ்ட உதவி கணக்காளர் /சிரேஷ்ட உதவி நிதியாளர் /சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் பதவி**

| நிறுவகம் | எண்ணிக்கை |
|---|---|
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 02 |
| கொழும்புப் பல்கலைக்கழகம் | 01 |
| களனி பல்கலைக்கழகம் | 01 |
| இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் | 02 |
| கட்புல அரங்கேற்றக் கலைப் பல்கலைக்கழகம் | 01 |
| மனித வள அபிவிருத்தி நிறுவகம் | 01 |
| தொழில்நுட்ப நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 01 |
| உயிர் இரசாயன, மூலக்கூற்று உயிரியலும் உயிர் தொழில் நுட்பமும்நிறுவகம் | 01 |
| மனித நேயம் மற்றும் சமூக விஞ்ஞானங்களின் உயர்கற்கைகளிற்கானதேசிய மையம் | 01 |

**பதவி உயர்வுகள்**

**(இ)வருடாந்த செயல்திறன் மதிப்பீட்டு அறிக்கையின் (APER) அடிப்படையில் செய்யப்பட்ட சிரேஷ்ட உதவி பதிவாளர் பதவிக்குரிய பதவி உயர்வு(ஆணைக்குழுச்சுற்றறிக்கை இல.668ஐ அடிப்படையாகக் கொண்டு)**

| நிறுவகம் | எண்ணிக்கை |
|---|---|
| ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் (SAR) | 01 |
| மொறட்டுவைப் பல்கலைக்கழகம்(SAB) | 02 |
| உறுகுணைபபல்கலைக்கழகம்(SAR) | 02 |
| உறுகுணைபபல்கலைக்கழகம்(SAB) | 01 |
| ஸ்ரீ பாளி வளாகம்(SAR) | 01 |
| மருத்துவப் பட்டப்பின் நிறுவகம்(SAB) | 01 |
| கொழும்புப் பல்கலைக்கழக கணணி கற்கைகள் நிறுவகம்(SAB) | 01 |

**8.3** 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 71(2) (iii) இணங்க,நிர்வாகம் சாரா ,கல்வி சாரா தர உத்தியோகத்தர்களுக்கான பின்வரும் நியமனங்களும் பதவி உயர்வுகளும் 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் செய்யப்பட்டன.

(1) **நியமனங்கள்**

| பதவி | பல்கலைக்கழகம் | நியமன எண்ணிக்கை |
|---|---|---|
| மருத்துவ அதிகாரி | பே<br>கோ<br>ஊவெ<br>கஅப | 01<br>01<br>01<br>01 |
| பணிகள் எந்திரவியலாளர்(குடிசார்) தரம் III | சப<br>திப<br>உறு<br>கிப | 01<br>02<br>02<br>01 |
| பல்கலைக்கழக உதவி அச்சாளர் | சப<br>ரஜ | 01<br>01 |
| பிரத்தியேக செயலாளர் | திப | 01 |

(2) பதவியுயர்வுகள்

| பதவி | பல்கலைக்கழகம் | நியமன எண்ணிக்கை |
|---|---|---|
| தலைமைமருத்துவ அதிகாரி | கொ<br>மொர<br>ஸ்ரீஜ | 01<br>01<br>01 |
| பணிகள் எந்திரவியலாளர் (குடிசார்) தரம் II | உறு | 01 |
| தலைமை பாதுகாப்பு அதிகாரி | திப | 01 |
| உடற்றொழில கல்விப் பணிப்பாளர் (உயர் கல்வி) | மொற | 01 |
| தலைமை தொழில்நுட்ப அதிகாரி | கொ | 04 |
| சிரேஷ்ட பதவிநிலை தொழில்நுட்ப அதிகாரி | கொ<br>பே<br>யாப<br>உறு<br>திப<br>கிப<br>வய | 01<br>05<br>01<br>02<br>01<br>01<br>01 |

**8.4** 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 71 (2) (iii) இற்கு இணங்க 2011ஆம் ஆண்டு காலத்தில் பமாஆ வினால் கல்விசாரா, நிர்வாகம் சாரா உத்தியோகத்தரது தரத்திலிருந்து தரத்திற்கான பின்வரும் பதவி உயர்வுகள் செய்யப்பட்டது.

| பதவி | உயர் தொழிநுட்ப நிறுவனங்கள் | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பமாஆ | கொ | பே | ஸ்ரீஜ | களை | மொற | யாப | உறு | திற | கிப | தெகி | சப | சுஊப | மொத்தம் |
| பதவிநிலை தொழில்நுட்ப அதிகாரி தரம் I | | 08 | | | | 01 | | 04 | 01 | | | | | **14** |
| பதவிநிலை தொழில்நுட்ப அதிகாரி தரம் II | | 04 | 02 | | 06 | 01 | | 06 | | 01 | | | | **20** |
| தொழில்நுட்ப அதிகாரி தரம்I | | 02 | 03 | | | 05 | 02 | 05 | 02 | 02 | | | | **21** |
| தொழில்நுட்பஅதிகாரிதரம் II Seg "A" | | | | | | | | | 02 | | | | | **02** |
| சி. பதவி நிலை உதவி. (லிகிதர் சேவை) | | 03 | 01 | 03 | 05 | 02 | 01 | 04 | 04 | | | | | **23** |
| பதவிநிலை உதவி (லிகிதர் சேவை) | 01 | 07 | 03 | | 05 | 02 | 02 | 01 | 03 | 01 | | 02 | 01 | **28** |
| லிகிதர் தரம் I | | 01 | 16 | | 04 | | 04 | 05 | 02 | 03 | | 09 | 01 | **45** |
| லிகிதர் தரம்II | | 02 | 02 | 02 | 05 | 01 | 01 | 01 | 02 | 03 | 02 | 02 | 02 | **25** |
| பதவி நிலை உதவி (பண்டகசாலைகாப்பாளர்) | | | 01 | | | | | | | | | | | **01** |
| பண்டகசாலை காப்பாளர் தரம்I | | | 02 | | | | | | | | | | 01 | **03** |
| பண்டகசாலை காப்பாளர் தரம்II | | 02 | 01 | | | | | | 02 | | | | | **05** |
| காசாளர் தரம் I | | | 01 | | 01 | | | | | | | | | **02** |
| காசாளர் தரம் II | | 01 | | | | | | | | | | | | **01** |
| சிரேஷ்ட பதவி நிலைஉதவி (நூலக சேவைகள்) | | | 06 | | 01 | | | | | | | | | **07** |
| பதவிநிலை உதவி (நூலக சேவைகள்) | | 01 | 02 | | 02 | 01 | 02 | | | | | | | **08** |
| நூலக உதவியாளர் தரம் I | | | | | 02 | | | | | 01 | 01 | | | **04** |
| நூலக உதவியாளர் தரம் II | | | | | 02 | | 02 | 01 | | 01 | 01 | | | **07** |
| புதவி நிலை உதவி காசாளர் | | | | | 01 | | | | | | | | | **01** |

## 8.5 பல்கலைக்கழகங்களுக்கிடையிலான இடமாற்றங்கள்

பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 78 இன் நிபந்தனைகளின் படி 2011 ஆம் ஆண்டு காலத்தில் பமாஆ வினால் பின்வரும் இடமாற்றங்கள் அமுல்படுத்தப்பட்டது.

| | |
|---|---|
| **நிர்வாக அதிகாரிகள்** | 07 |
| **கல்விசாரா நிர்வாகம் சாரா உத்தியோகத்தர்கள்** | |
| லிகிதர்களும் இவ்வகையைச் சேர்ந்த தரங்களும் | 32 |
| தொழில்நுட்ப தரங்கள் | 13 |
| சிறு பணியாளர் தரங்கள் | 04 |
| திறமை வாய்ந்த தரங்கள் | 02 |
| கல்வி உதவி சேவைகள் | 01 |
| **மொத்தம்** | **59** |
| பரஸ்பர தன்மையிலான இடமாற்றங்கள் | 09 |

## 8.6 உத்தியோகத்தர் அபிவிருத்திசெயற்பாடுகள்

உத்தியோகத்தர் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கு ப.மா.ஆ மனித வள அபிவிருத்தி பிரிவுளைத் தாபித்தது. ப.மா.ஆ வானது மனித வள அபிவிருத்தி பிரிவின் செயற்பாட்டு நடவடிக்கைகளை வலுவாக்குவதற்கும் வேண்டப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவுவதற்கும் சட்ட வரம்புறுகளை உருவாக்கும் செயன்முறையில் உள்ளது.மனித வள அபிவிருத்தி பிரிவானது உத்தியோகத்தர் அபிவிருத்தி மையங்கள் மற்றும் வேறு அரச, அரச சார்பற்ற பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து தேசிய மட்ட பயிற்சிகளை வழி நடாத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல் செயற்பாட்டின் மத்திய நிலையமாக செயற்படும்.

ப.மா.ஆ வானது 2011ஆம் ஆண்டில் உத்தியோகத்தர் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக அண்ணளவாக 70 மில்லியன் ருபாவை ஒதுக்கியதுடன் பௌதீக வளங்கள் மற்றும் வசதிகள் ஏற்றாடுத்துதல் அத்துடன் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதில் பயன் படுத்துவதற்காக நிதிகளை விடுவித்தது. மனித வள அபிவிருத்தி பிரிவு ப.மா.ஆ மற்றும் உத்தியோகத்தர் அபிவிருத்தி மையங்கள் ஆகியவை HETC செயற்றிட்டத்துடன் இணைந்து பயிற்சிக் கற்கை நெறிகள் அத்துடன் கற்பித்தல் உபகரணங்கள் ஆகியவற்றை விருத்தி செய்வதற்கு நட்வடிக்கை எடுத்தது.

## 8.7 பல்கலைக்கழக கல்வியாளர்களுக்கு புலமைப்பரிசில்களும், தோழமைகளும், ஆய்வு மானியங்கள் மற்றும் ஏனைய நிதி உதவிகளை வழங்கல்

பல்கலைக்கழக முறைமையிலுள்ள ஆராய்ச்சி பாரம்பரியத்தை உறுதிமிக்கதாக கட்டியெழுப்பவும் கல்விசார் ஊழியர்களின் குறிப்பாக இளைய கல்விசார்ந்தோரின் உயர்கல்வியை உள்ளுர் மற்றும் வெளிநாட்டில் தொடர்வதற்கு தேவையான உதவி மற்றும் ஊக்குவிப்பினை வழங்குவதை கொள்கையாகக் கொண்டு பமாஆ இதற்காக கடந்த காலங்களில் அதிக நிதியினை ஒதுக்குவதற்கு முயற்சித்தது. விமர்சனைக்குரிய ஆண்டில் பின்வரும் மானிங்கள் வழங்கப்பட்டுள்ளது.

**(1) கலாநிதி ஆய்வுப் பட்டங்களுக்கான உள்ளூர் ஆய்வு மானியங்கள்**

விமர்சனைக்குரிய ஆண்டு காலத்தில் பட்டப்பின் தகைமைகளைப் பெறுவதற்கு வாய்ப்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 27 கல்விசார் ஊழிய அங்கத்தவர்களுக்கு ரூபா 6,661,882/- ஐ கலாநிதி ஆய்வுப் பட்டங்களுக்கான உள்ளூர் ஆய்வு நிதியின் கீழ் மானியமாக வழங்கியது.

| ஒதுக்கீடு | | வழங்குனர்களின் மொத்த எண்ணிக்கை | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|---|
| | | | தொகை ரூபா | தொகை ரூபா | தொகை ரூபா | தொகை ரூபா |
| | குழு2008 | 28 | 5,950,000 | 1,075,000 | 500,000 | 2,750,182 |
| | குழு2009 | 41 | | 5,350,125 | 7,273,900 | 1,381,700 |
| ரூபா .40,000,000 | குழு2011 | 29 | | | | 2,530,000 |
| | மொத்தம் | | 5,950,000 | 6,425,125 | 7,773,900 | 6,661,882 |

**(2) ஐக்கிய இராச்சியத்தில் வழங்கப்படக்கூடிய பொதுநலவாய கல்விசார் புலமைப்பரிசில்கள் மற்றும் தோழமைகள் 2011**

பமாஆ கடந்த வருடம் பொதுநலவாய தோழமைகளுக்காக 20 கல்வியாளர்களை நியமித்தது. அதில் பின்வரும் 11 கல்வியாளர்கள் பொதுநலவாய சங்கத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| **பெயர்** | **பல்கலைக்கழம்** |
|---|---|
| கலாநிதிபீ.சி.எல். அத்தபத்து | திறந்த பல்கலைக்கழகம் |
| கலாநிதி டி.ஏ.எம்.டி.சில்வா | சபரகமுவ |
| கலாநிதி கே.எஸ்.கே.டி.சில்வா | உறுகுணை |
| கலாநிதி பி.கே.திஸ்ஸாநாயக்க | சபரகமுவ |
| பேராசிரியர் சி.டி.ஏ.குணசேகர | பேராதனை |
| கலாநிதி பண்டுக ஜீ.எஸ்.டி. சில்வா குணவர்த்தன | பேராதனை |
| கலாநிதி சித்தி இக்பால் | திறந்த பல்கலைக்கழகம் |
| கலாநிதிஉபாலி ஜயவர்த்தன. | பேராதனை |
| கலாநிதி ஆஷா எஸ் கருணாரத்ன | சபரகமுவ |
| கலாநிதி நிஸ்ஹா கொட்டியாராய்ச்சி | வயம்ப |
| பேராசிரியர் (திருமதி) ஆர்.டி.சேரசிங்க | உறுகுணை |

**(3) வெளியக வள திணைக்களத்தினால் ஒருங்கிணைக்கப்பட்ட வேலைகள்**

| **விபரம்** | **நாடு** | **பெயர்& பல்கலைக்கழகம்** |
|---|---|---|
| ஐயுஸ் புலமைப்பரிசில் 2010 -2011 | இந்தியா | செல்வி. ஜே. குமாரி சிரேஸ்ட விரிவுரையாளர் (IIM) |

## 8.8 பல்கலைக்கழகங்களில் கல்விசார் உத்தியோகத்தர்களுக்கு விமானப் பிரயாண நிதி உதவிகள்

விமர்சனைக்குரிய காலப்பகுதியில்பல்கலைக்கழகங்கள் மற்றும்உயர் கல்வி நிறுவனங்களில் உள்ள கல்விசார் உத்தியோகத்தர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று உயர்கல்வியை மேற்கொள்வதற்காக விமானப் பிரயாண நிதியுதவியாக ரூபா 8,248,180.38/- வழங்கப்பட்டது. பல்கலைக்கழக ரீதியான பகுப்பு பின்வருமாறு;

| பல்கலைக்கழகம் | வழங்கப்பட்டவைகளின் எண்ணிக்கை | | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| | உள்வரும் | வெளிச்செல்லும் | |
| கொழும்புப் பல்கலைக்கழகம் | - | 6 | 190,010.00 |
| பேராதனைப் பல்கலைக்கழகம் | 7 | 11 | 2,319,470.88 |
| யாழ்ப்பாணப் பல்கலைக்ழகம் | - | 3 | 110,678.00 |
| ஶ்ரீஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம் | - | 9 | 558,841.00 |
| உறுகுணைப் பல்கலைக்கழகம் | 3 | 9 | 1,174,002.50 |
| மொறட்டுவைப் பல்கலைக்கழகம | 1 | 8 | 561,709.00 |
| சபரகமுவ பல்கலைக்கழகம் | 3 | 2 | 395,510.00 |
| களனி பல்கலைக்கழகம் | 5 | 10 | 1,443,143.00 |
| தென்கிழக்குப் பல்கலைக்கழகம் | - | 1 | 22,000.00 |
| ரஜரட்ட பல்கலைக்கழகம் | - | 5 | 473,710.00 |
| வயம்பப் பல்கலைக்கழகம் | 2 | 4 | 341,480.00 |
| சுதேச மருத்துவ நிறுவகம் | | 1 | 34,100.00 |
| திறந்த பல்கலைக்கழகம் | - | 5 | 420,154.00 |
| கிழக்குப் பல்கலைக்கழகம் | - | 1 | 68,000.00 |
| ஶ்ரீபாளி வளாகம் | 1 | 1 | 135,372.00 |
| **மொத்தம்** | 22 | 77 | **8,248,180.38** |

## 8.9 நடைமுறைப் பயிற்சி வழங்கல் - 2010

29/03/2007 ஆம் திகதி ஸ்தாபன சுற்றறிக்கை இலக்கம் 03/2007 இனால் திருத்தப்பட்டவாறு ஸ்தாபன சுற்றறிக்கை 10/2002 ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்ட 19/07/2000 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 12/2000 இன் நிபந்தனையின்படி 2011 ஆம் ஆண்டில் உயர் கல்வி நிறுவகங்களில்730 பயிற்சியாளர்களுக்கு நடைமுறைப் பயிற்சி வழங்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியது.

| பல்கலைக்கழகம்/நிறுவகம் | பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| கொழும்புப் பல்கலைக்கழகம் | 68 |
| பேராதனைப் பல்கலைக்கழகம் | 175 |
| ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம் | 52 |
| களனிப் பல்கலைக்கழகம் | 30 |
| மொறட்டுவைப் பல்கலைக்கழகம் | 65 |

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 125 |
| கிழக்குப் பல்கலைக்கழகம் | 71 |
| தென்கிழக்குப் பல்கலைக்கழகம் | 7 |
| சபரகமுவப் பல்கலைக்கழகம் | 8 |
| வயம்பப் பல்கலைக்கழகம் | 49 |
| திறந்த பல்கலைக்கழகம் | 8 |
| கட்புல அரங்கேற்றக்கலைப் பல்கலைக்கழகம் | 4 |
| கம்பஹா விக்ரமாராச்சி ஆயுர்வேத நிறுவகம் | 9 |
| கொழும்புப் பல்கலைக்கழக கணனி கற்கைகள் நிறுவகம் | 13 |
| மனிதவள மேம்பாட்டு நிறுவகம் | 1 |
| சுதேச மருத்துவ நிறுவகம் | 8 |
| விஞ்ஞான பட்டப்பின் நிறுவகம் | 6 |
| தொல்பொருளியல் பட்டப்பின் நிறுவகம் | 12 |
| பாளி - பௌத்த கற்கைகள் பட்டப்பின் நிறுவகம் | 2 |
| மருத்துவ பட்டப்பின் நிறுவகம் | 13 |
| விவசாய பட்டப்பின் நிறுவகம் | 4 |
| **மொத்தம்** | **730** |

## 9. உட்கட்டமைப்பு அபிவிருத்தி

2011ம் ஆண்டில் மொத்தமாக ரூபா 7100 மில்லியன் தொகையானது, புதிய கட்டுமானம் மற்றும் தொடர்ச்சியான செயற்றிட்டங்கள், புனரமைப்பு செயற்றிட்டங்கள், கொள்வனவுகள், புதிதாக அமைக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு செயற்றிட்டங்கள் அத்துடன் மாணவர்களுக்கான அறிவுத் திறன் உருவாக்க செயற்பாடுகள் ஆகியவற்றுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. திறைசேரிரூபா 6161 மில்லியன் தொகையை மட்டுமே சிபாரிசு செய்தது.எவ்வாறாயினும் திறைசேரியினால் விதிக்கப்பட்ட பல்வேறு கட்டுப்பாடுகளின் காரணமாக பல்கலைக்கழகங்களும் உயர் கல்வி நிறுவகங்களும் 2011ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 4,290மி. ஐ மாத்திரமே செலவு செய்யக்கூடியதாக இருந்தது.

கடந்த வருடத்தில் பல்கலைக்கழகங்களில் இருந்தும் உயர் கல்வி நிறுவகங்களிலிருந்தும் 31 செயற்திட்ட பிரேரணைகள் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றை ஆழ்ந்து ஆராய்ந்து மற்றும் மதிப்பிட்ட பின்னர் ஆணைக்குழு கடந்த வருட இறுதியளவில் 24 பிரேரணைகளுக்கு அனுமதி வழங்கியிருந்தது. தேசிய திட்டமிடல் திணைக்களம் 2011 ஆம் ஆண்டின் புதிய பிரேரணைகளில் இருந்து 15 ஐ அங்கீகரித்ததுடன்(புதியசெயற்றிட்டங்கள் தவிர்ந்த) முந்திய வருடத்தில் பெற்றுக்கொண்ட பிரேரணைகள் உள்ளடங்கலாக மொத்தமாக 12 பிரேரணைகளுக்கு அமைச்சரவை 2011 ஆம் ஆண்டில் அனுமதியளித்தது. இந்த 12 பிரேரணைகளினதும் மொத்த மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 1,317.47 மில்லியனாகும்.2011 ஆம்ஆண்டு 17 செயற்றிட்டங்கள் பௌதீக ரீதியாக ஆரம்பிக்கப்பட்டதுடன் பட வரைவு மற்றும் நிர்மாணித்தல் செய்முறையின் பல கட்டங்களில் ரூபா 14,662.55 மி பெறுமதியான 41 செயற்திட்டங்கள் 2011 ஆம் ஆண்டில் இடம்பெற்றுக்கொண்டிருந்தது. மொத்த செலவினமாக ரூபா 2,223.45 மில்லியனை கொண்ட 12 செயற்திட்டங்கள் 2011 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டு பல்கலைக்கழகங்களுக்கு கையளிக்கப்பட்டது. விபரங்கள் முந்திய வருடத்துடன் ஒப்பிட்டு, பின்வருமாறு;

| | 2010 | | 2011 | |
|---|---|---|---|---|
| | செயற் திட்டங்களின் எண்ணிக்கை | மொத்த பெறுமதி | செயற் திட்டங்களின் எண்ணிக்கை | மொத்த பெறுமதி |
| ஆணைக்குழுவினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளின் எண்ணிக்கை | 39 | 12,671.06 | 31 | 5,535.40 |
| ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட பிரேரணைகளின் எண்ணிக்கை | 11 | 3,744.61 | 24 | 8069.00 |
| தேசிய திட்டமிடலுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளின் எண்ணிக்கை | 12 | 5,913.36 | 24 | 7,762.02 |
| தேசிய திட்டமிடலினால் அனுமதிக்கப்பட்ட பிரேரணைகளின் எண்ணிக்கை | 10 | 1499.64 | 15 | 4,351.8 |
| அமைச்சரவையால்அனுமதிக்கப்பட்டபிரேரணகளின் எண்ணிக்கை | 12 | 1583.8 | 12 | 1,317.47 |
| வருடத்தினுள் ஆரம்பித்து வைக்கப்பட்ட பிரேரணைகளின் எண்ணிக்கை | 14 | 2799.4 | 17 | 2,496.9 |
| வருடத்தில்நடைபெற்றுக்கொண்டு இருந்தவை (தொடர்ச்சி) | 60 | 13637.95 | 41 | 14,662.55 |
| முடிவடைந்தசெயற்திட்டங்கள் | 22 | 2780.6 | 12 | 2,223.45 |

*முந்திய வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகள் உள்ளடங்கலாக.
.செயற்றிட்டத்தின் பௌதீக நிலமையை மட்டும் கருத்திற் கொண்டு

## 10. தகவல் தொழிநுட்ப அபிவிருத்தி

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களில் தகவல் தொழிநுட்ப அபிவிருத்திக்கான விஷேட செயற்றிட்டத்தின் கீழ் பின்வரும் பல்கலைக்கழகங்களுக்கு மேலதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**கொழும்பு பல்கலைக்கழகம் -ரூபா 10 மில்லியன்**

அமுல்படுத்தப்பட்ட வலையமைப்பு தீர்வு மற்றும் வேறு தகவல் தொழிநுட்ப வசதிகளைக் கண்காணிப்பதற்காக வலைப்பின்னல் செயற்பாட்டு நிலையம்/ தகவல் தொழிநுட்ப வசதிகளுடன் கூடிய சேவைகள் நிலையத்தை நிறுவுதல்.

பல்கலைக்கழகத்தின் தற்போதையதும் எதிர்கால கேள்விகளையும் சந்திப்பதற்கு வலைப்பின்னல் வடிவமைப்பு மற்றும் அமுலாக்கல்

**இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் -ரூபா 3.7 மில்லியன்**

புதிய FAPM கட்டடத்துக்கான வலைப் பின்னல் விநியோகம் பொருத்துதல் மற்றும் செயற்படுத்துதல்

**இலங்கைரஜரட்ட பல்கலைக்கழகம்**

உள்ளக தொடர் பாடல் சேவை மற்றும் இணைய வசதிகளை விரிவாக்குதல் அத்துடன் கணணி நிலையத்தின் தகவல் தொடர்பாடல் வசதிகளை அதிகரித்தல்

**கட்புல அரங்கேற்றக்கலைப் பல்கலைக்கழகம்**

மத்திய மயப்படுத்தப்பட்ட தகவல் தொழிநுட்ப நிலையம் ஒன்றை நிறுவுதல்

## 11. உயர் கல்வியில் தர உறுதிப்படுத்தல்

2009 ஆம் ஆண்டில் ப.ம.ஆ.வின் தனிப்பட்ட பிரிவாக தாபிக்கப்பட்ட தர உறுதிப்பாடு மற்றும் மதிப்பேற்றல் சபையானது நிலையான குழுவின் வழிகாட்டுதல் மற்றம் சிபாரிசின் கீழ் தர உறுதிப்பாடு மற்றும் மதிப்பேற்றல் சம்பந்தமாக பொதுவான பல்கலைக்கழகங்களில் செயற்பாடுகளை நடத்தியது.

உயர்கல்வி நிறுவனங்களின் படித்தரங்கள் மற்றும் தரங்கள் அத்துடன் அதன் கற்கைப் பாடத்திட்டங்கள் என்பவற்றை மீள் நோக்குவதுடன் விளைவுகளை சகல தரப்பினருக்கும் வெளியிடுதல் என்பவையானது தர உறுதிப்பாடு மற்றும் மதிப்பேற்றல் சபையின் பிரதான தொழிற்பாடுகளில் ஒன்றாகும். இந்நோக்கத்திற்காக தர உறுதிப்பாடு மற்றும் மதிப்பேற்றல் சபையானது நிறுவக மீள் நோக்கு,பாட /நிகழ்ச்சி மீள் நோக்கு, மற்றும்நூலக மீள் நோக்கு போன்றவற்றிற்காக வெளியக தர மதிப்பீடுகளை நடத்துகின்றது.

வெளியக தர மதிப்பீட்டுத் திட்டத்தின் கீழ் விமர்சனைக்குரிய ஆண்டு காலத்தில் தர உறுதிப்பாடு மற்றும் மதிப்பேற்றல் சபையால் 06 நிறுவக மீளாய்வு, 13 பாட /நிகழ்ச்சி மீளாய்வு மற்றும் 01 நூலக மீளாய்வு ஆகியவை நடத்தப்பட்டன.

இதற்கு மேலாக பல்கலைக்கழகங்களில் பின்வரும் இளமானி,பட்டப்பின்,வெளிவாரிப் பட்டநிகழ்ச்சித் திட்டங்களின் மேசை மதிப்பீடுகள் நடத்தப்பட்டது.

| பல்கலைக்கழகம் | இளமானி | பட்டப்பின் | வெளிவாரி |
|---|---|---|---|
| கொழும்பு | - | 05 | 01 |
| பேராதெனிய | - | 08 | 01 |
| ஸ்ரீ ஜயவர்த்தன புர | - | 04 | - |
| களனி | - | 03 | 01 |
| மொரட்டுவ | 01 | 04 | 01 |
| யாழ்ப்பாணம் | - | 02 | - |
| றுஹுணு | ` | 02 | - |
| கிழக்கு | 01 | 02 | - |
| தென்கிழக்கு | - | 01 | - |
| ரஜரட்ட | - | 01 | - |
| வயம்ப | - | - | 01 |
| திறந்த பல்கலைக் கழகம் | 01 | 02 | - |
| கட்புல அரங்கேற்றக்கலை | - | 01 | - |
| மபபி | - | 02 | - |
| சுமநி | - | 01 | - |
| கவிஆநி | - | 01 | - |
| **மொத்தம்** | **03** | **39** | **05** |

- 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் தர உறுதிப்படுத்தல் சபையால் உயர் கல்வி நிறுவனங்களின் தரத்தை விருத்தி செய்வதற்கு தேசிய பல்கலைக்கழக/பீட மட்டங்களில் மேலும் 265 செயலமர்வுகள் நடத்தப்பட்டன..இவைபாடப்பரப்புக்களில்

பல்வேறு வகையீடுகளைக் உள்ளடக்கியிருந்தது.உதாரணமாக, உயர் கல்வியில் தர உறுதிப்பாடு,பணிச்சட்டகம்,திறமை மற்றும் தரங்கள் பணிச்சட்டகம், பல்கலைக்கழகங்களில் உள்வாரி தர உறுதிப்பாடு, விடய மீளாய்வாளர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், பல்கலைக்கழகங்களில் பாட மீளாய்வுச் செயன்முறை, பாடத் திட்ட மீள் நோக்கு மற்றும் சீர்திருத்தங்கள் மாணவர் **கருத்துக்கள்** அத்துடன் ஆழ்ந்த அவதானிப்பு புதுமை ஆகியவற்றுடன் கற்பித்தல் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் ஆகியன அவையாகும்

- தர உறுதிப்பாட்டு நுட்பங்கள் ஒத்த நிறுவனங்களில் உள்ள தமது உத்தியோக உறுப்பினர்களை ஒருவரிலிருந்து ஒருவர் கற்றல் எல்லோரும் சேர்ந்து பங்கிடல், சிறந்த பயிற்சிகளை சகல தரப்பினருக்கும் தெரியப்படுத்துதல் அத்துடன் ஒருவருக்கிடையேயான பங்களிப்புக்கள் மற்றும் அடைவுகள் ஆகியவற்றை வரவேற்றல் போன்றவற்றைக் கொண்டுவரக்கூடியதாக இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. மேலும் உறுதியான தர உறுதிப்பாட்டு நுட்பங்களின் அமுலாக்கமானது முழு நிறுவனத்திலும் கடமை உணர்வு மற்றும் செயன்முறை அணுகு முறையின் புதிய விழிப்புணர்வு ஆகியவற்றையும் உருவாக்கும்

  உள்வாரி தர உறுதிப்பாடு செயற்பாடுகளை வலுப்படுத்துவது சம்பந்தமாக பல்கலைக்கழகங்களில் நடைபெற்ற தேசிய செயலமர்வுகளின் விளைவாகஉள்வாரி தர உறுதிப்பாட்டுக்காக கையேடு ஒன்று தயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

- தர உறுதிப்பாட்டு சபையின் பிரதான கடமைகளுள் ஒன்றாக இலங்கையில் உள்ள எல்லா உயர் கல்வி (அரச மற்றும் தனியார்) நிறுவனங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் மதிப்பேற்றலாகும்.

- உயர்கல்வியில் மதிப்பேற்றலானது, பொது மக்களுக்கு பொறுப்புக்கூறுவதற்காகவும் கல்வித் தரத்தை விருத்தி செய்வதற்காகவும் சுய மற்றும் ஆழ்ந்த மதிப்பீட்டின் அடிப்படையில் ஒரு செயற்படும் ஒரு கல்லூரியியல் செயன் முறையாகும்

  இந்நோக்கத்திற்காக வரையப்பட்ட கையேடு ஒன்று தயாரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதுடன் அது 2012ம் ஆண்டு நடுப்பகுதியில் மதிப்பேற்றல் நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிப்பதற்காக விரைவில் முற்றுப் பெறும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது

- **முதல் மீள் நோக்கு வட்டம் சம்பந்தமான அபிவிருத்தி மீள்நோக்கு:**இரண்டாவது மீள் நோக்கு வட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் நிகழ்ச்சித்திட்டங்கள், பாட நெறிகள் மற்றம் அவை தொடர்பான பிற செயற்பாடுகள் ஆகியவற்றின் தரம் சம்பந்தமாக நடத்தப்பட்ட வெளிவாரி கணிப்பிடுகளின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கு இது விரும்பத்தக்கது. இது சம்பந்தமாக பின்தொடர் மீள் நோக்கு வட்டம், செயல் முறை மீள்நோக்கானது முதலாவது மீள் நோக்கின் 2இலிருந்து 3 வருடங்களுக்கு பிறகு மிகவும் எளிதாக்கப்பட்ட வடிவில் பரிந்துரைக்கப்படுகிறது.

  அதன்படி வெளிவாரி தர மதிப்பீட்டிற்காக வலை அடிப்படைக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைகளை விருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## 12. மாணவர்கள் தொடர்பான விடயங்கள்

### 12.1 எல்லாப்பல்கலைக்கழகங்களுக்கும் பொதுவான கலண்டர் முறையை அமுலாக்குதல்

ப.மா.ஆ.வானது எல்லாப் பல்கலைக்கழகங்களின் கல்வியியல் நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்பதற்கும் நிறைவு செய்வதற்குமான பொதுவான தினங்களை அமைப்பதற்கு தீர்மானித்தது. அதன்படி, 2008 ஆகஸ்ட் 14ஆம் திகதியின் ஆணைக்குழுச் சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்டது.ஆனால் அவ்விடயத்தை அமுலாக்குவதில் சில நடைமுறைப்பிரச்சினைகள் இருந்தனப.மா.ஆ.வானது மீண்டும் ஒரு முறை மேற்படி விடயத்தை கவனத்தில் எடுத்ததுடன் (2010/2011)ம். கல்வியாண்டிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் (அச் செயற்பாடானது அதற்குப் பின்வரும் ஆண்டுகளுக்கும் மீளச் செயற்படக்கூடிய வகையில்)கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான பொது தினங்களை ஏற்படுத்த தீர்மானித்தது.அதன்படி எல்லாப் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன் பெரும்பான்மையான பதில்கள் சாதகமானதாக இருந்தன.

### 12.2 மாணவர் ஒழுக்கம் தொடர்பான பொதுவான வழிகாட்டுகள்

ப.மா.ஆ வானது பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் மாணவர் ஒழுக்கவியல் விடயங்கள் சார்பாக வித்தியாசமான நடைமுறைகளை கொண்டிருப்பதனை அவதானித்து மாணவர் ஒழுக்கவியல் விடயங்கள் சம்பந்தமான பொது வழிமுறைகள் அடங்கிய தொகுதி ஒன்றை வழங்குவதற்கும் ஒவ்வொரு பல்கலைக்கழகங்கள்/ மற்றும் உயர் கல்வி நிறுவனங்களினால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய தண்டனைகளை விதிப்பதற்கும் தீர்மானித்தது. அதன்படி 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதியின் 946ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

## 13. பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதி சம்பந்தமான உதவி

### 13.1 அறிமுகம்

பல்கலைக்கழக மாணவர்களுக்கு 03 பிரதான திட்டங்களின் கீழ் நிதி சம்பந்தப்பட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. அவையாவன;

- மகாபொல புலமைப் பரிசில் திட்டம்
- பல்கலைக்கழக பண உதவித்திட்டம்
- அறக்கொடை புலமைப் பரிசில் திட்டம்

இந்த மூன்று திட்டங்களில் மகாபொல புலமைப் பரிசில் மற்றும் அறக்கொடை புலமைப் பரிசில்கள் போன்றவற்றிற்கு மணவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆண்டுதோறும் தெரிவு செய்யப்படுபவர். பல்கலைக்கழக உதவு தொகைக்கான தெரிவு பல்கலைக்கழகங்களால் மேற்கொள்ளப்படுகிறது.

#### (1) மகாபொல புலமைப் பரிசில்கள்

மகாபொல புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ், மகாபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியம் இரண்டு வகையான புலமைப் பரிசில்களை வழங்குகின்றது. அதாவது, மகாபொல உயர் கல்வி திறமைப் புலமைப்பரிசில்கள் மற்றும் மகாபொல உயர் கல்வி சாதாரண புலமைப்

பரிசில்கள் போன்றவற்றை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் இணைந்து வழங்குகின்றது. 2010/2011 ஆம் கல்வியாண்டுக்காக அனுமதிக்கப்பட்ட மாணவர்களுள் மொத்தமாக 10,229 மாணவர்கள் மகாபொல புலமைப்பரிசில்களுக்காக பமாஆ வினால் விமர்சனைக்குரிய ஆண்டுகாலத்தில் தெரிவுசெய்யப்பட்டனர்.

2009/2010 ஆம் கல்வியாண்டுக்கான மகாபொல புலமை பரிசில்களுக்கான மாவட்ட மற்றும் கற்கைநெறி ரீதியான தெரிவுகள் இணைப்பு - III இல் தரப்பட்டுள்ளது.

**(2) உதவு தொகை, மகாபொல மற்றும் உரிமையாக்கப்பட்ட புலமைப் பரிசில்களின் கொடுப்பனவுகள்**

2011 ஆம் வருடத்தில் அறக்கொடைப்புலமைப்பரிசில் அரசாங்க கொடுப்பனவுகளான மகாபொல புலமைப்பரிசில் மற்றும் உதவு தொகைகளுக்காக பின்வரும் தொகைகள் வழங்கப்பட்டன.

| மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உதவிகளின் வகை | மாணவர்களின் எண்ணிக்கை | மொத்த கொடுப்பனவு ரூபா (மி) |
|---|---|---|
| மகாபொல புலமைப் பரிசு – (TC) | 32,272 | 126.80 |
| உதவு தொகை | 17,996 | 357.10 |
| அறக்கொடை புலமைப் பரிசு | 66 | 0.96 |

(3) **அறக்கொடை புலமைப் பரிசில்**

**(அ) மிட்சுபிஷி கோர்பரேசன் சர்வதேச புலமைப் பரிசில்கள்**

மிட்சுபிஷி கோர்பரேசன் நிறுவனத்தால் நிதியளிக்கப்படுகின்ற ஒரு புலமைப் பரிசில் திட்டத்துக்காக பமாஆ க்கும் மிட்சுபிசி கோர்பரேசனுக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் முகாமைத்துவ பிரிவில் கல்விகற்கின்ற 20 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டது. கொழும்புப் பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் நிதிப் பீடத்தின் மாணவர்கள் மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது. ஒரு வருடத்துக்கு ரூபா 48,000.00 பெறுமதியான இந்த புலமைப் பரிசில் ஒரு மாதத்துக்கு ரூபா. 4,000.00 ஆக 12 தவணைகளில் செலுத்தப்படவுள்ளது. இது ஒரு வருடகால புலமைப் பரிசில் திட்டமாக இருப்பினும் இரண்டாம் வருடத்திற்கு நீடிக்கப்படக்கூடிய சாத்தியங்களைக் கொண்டுள்ளது. மாண்புமிகு பிரதி உயர் கல்வி அமைச்சர்,மிட்சுபிஷி கோர்பரேசன் கொழும்புக் கிளை பொது முகாமையாளர் மற்றும் பமாஆ தலைவர் கலந்துகொண்ட புலமைப் பரிசில்கள் வழங்கும் விழா மிட்சுபிஷி கோர்பரேசனின் ஆதரவுடன் நவம்பர் 30 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

**(ஆ) பொலீஸ் சி.டப்ளியு.சி. நன்மைகள் திட்டம்**

பொலிஸ் சி.டப்ளியு.சி. நன்மைகள் திட்டத்தால் நிதியளிக்கப்படும் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 3 புலமைப்பரிசில்கள்பேராதனைப்பல்கலைக்கழகம் மற்றும் உறுகுணைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு பொறியியல் மருத்துவம் மற்றம் விவசாய துறைகளில் 2009 /2010 கல்வியாண்டில் அனுமதி பெற்ற மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.கற்கை நெறிக்கான முழுக்காலப்பகுதி உள்ளடங்கலாக மாதத்துக்கு ரூபா. 2,000.00 ஆக 10 தவணைகளில் செலுத்தப்படக்கூடிய குறித்தபுலமைப்பரிசிலின் வருடாந்த தொகை ரூபா 20,000/= ஆகும்.

(4) **சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டம்**

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நலன் விரும்பிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற நன்கொடைகளைப் பயன்படுத்தி பமாஆ வில் 2005ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட புலமைப் பரிசில் திட்டத்தின்கீழ் 2011ஆம் ஆண்டு காலப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ரூபா. 66,000.00 வழங்கப்பட்டது.

## 14. நிதி முகாமைத்துவத்தை முன்னேற்றல்

கணக்காய்வு அதிபதி மற்றும் பாராளுமன்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) வினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளைக் கவனத்தில் கொண்டு, உகநி களின் நிதி முகாமைத்துவத்தை ஒழுங்காக பரிசீலனை செய்வதற்கு பமாஆ வினால் கணக்காய்வு நடவடிக்கை மற்றும் கண்காணிப்பு குழு உருவாக்கப்பட்டது. இந்த குழுவானது குறித்த அமைச்சின் செயலாளரின் தலைமையில் வழக்கமாக சந்திப்பதுடன் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையிலுள்ள சகல தவறுகள், பலவீனங்கள் மற்றும் குறைபாடுகளை பல்கலைக்கழகங்கள் மற்றும் உகநி களுக்கு அடையாளம் காட்டுவதில் உதவி புரிவதுடன் சிறந்த ஆட்சி மற்றும் திறைசேரியால் அறிமுகப்படுத்தப்பட்ட நிதி வரையறைகளுக்கு அமைய முகாமைத்துவ நடைமுறை போன்றவற்றை உறுதிப்படுத்துகின்றது.

விமர்சனைக்குரிய ஆண்டு காலத்தில் பமாஆ, பல்கலைக்கழகங்கள் மற்றும் உகநி ங்களுடன் தொடர்பான விடயங்களை ஆராய்வதற்கு இக் குழு 19 தடவைகள் சந்தித்தது. அவை;

பேராதனைப் பல்கலைக்கழகம்
களனிப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
உறுகுணைப் பல்கலைக்கழகம்
கிழக்குப் பல்கலைக்கழகம
இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகம்
இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்
இலங்கை சபரகமுவப் பல்கலைக்கழகம்
இலங்கை வயம்பப் பல்கலைக்கழகம்
இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
விவசாயப் பட்டப்பின் நிறுவகம்

பாளி - பௌத்த கற்கைகள் பட்டப்பின் நிறுவகம்
மனிதவள மேம்பாட்டு நிறுவகம்
விஞ்ஞானப் பட்டப்பின் நிறுவகம்
நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான தேசிய நிறுவகம்
தொழில்நுட்ப நிறுவகம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம்
மனித நேயம் மற்றும் சமூக விஞ்ஞானங்களின் உயர்கற்கைகளிற்கான தேசியமையம்

## 15. மாண்புமிகு உயர் கல்வி அமைச்சருடன் முன்னேற்றம் தொடர்பான சந்திப்புகள்

மாண்புமிகு உயர் கல்வி அமைச்சர் பல்கலைக்கழக கல்வி முறைமையினை சீராக்குவதற்கு மற்றும் செயற்பாடுகளின் முன்னேற்றங்களை கண்காணிக்கவும் கல்வியாளர்கள், நிர்வாகிகள் மற்றும் பிறர் உள்ளடங்கிய பல்கலைக்கழக சமுகத்துடன் பல சந்திப்புகளை மேற்கொண்டார். விமர்சனைக்குரிய ஆண்டில் பின்வரும் சந்திப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**சகல பல்கலைக்கழகங்களினதும் உப வேந்தர்களுடனான சந்திப்பு**

பல்கலைக்கழக உப வேந்தர்களுடன் 7 சந்திப்புகள் இடம்பெற்றது. அச்சந்திப்புகளின் நோக்கங்கள் வருமாறு;

1. பல்கலைக்கழகங்களில் வருமானம் மற்றும் செலவு ஆகியவற்றை மீள் நோக்குவதற்கு 2011.04.21 ஆம் திகதி பல்கலைக்கழக உப வேந்தர்கள் மற்றும் நிதியாளர்களுடன்

2. பல்கலைக்கழகங்களினால் நிதிப் பாவனை மற்றும் முலதனச் செயற்றிட்டம் ஆகியவை தொடர்பான முன்னேற்றத்தை மீள் நோக்குவதற்கு 2011.08.17 ஆம் திகதி உப வேந்தர்கள் பணிப்பாளர்கள் பதிவாளர்கள் நிதியாளர்கள் மற்றும் வேறு உயர் அதிகாரிகளுடன்

3. ப.மா.ஆ மற்றும் வேந்தர்கள்உப வேந்தர்கள் பணிப்பாளர்கள் ஆகியோருக்கிடையேயான இணைந்த கூட்டம் 2011.08.18 ஆம் திகதி

4. 2012 ஆம் ஆண்டுக்குரிய பாதிட்டுக் கலந்துரையாடல் -2011.08.22 ஆம் திகதி அன்று

5. பல்கலைக்கழகங்களில்பாதுகாப்பு சேவைகளை மறுசீரமைத்தலின் முன்னேற்றங்களை கலந்தாலோசிப்பதற்காக உப வேந்தர்கள் மற்றும் பதிவாளர்கள் ஆகியோருடனான சந்திப்பு -2011.10.07 ஆம் திகதி

6. பல்கலைக்கழக அனுமதி தொடர்பான பிரச்சினைகளைக் கலந்துரையாடுவதற்கு தலைவர், ஆணைக்குழுவின் சில உறுப்பினர்கள், சில பல்கலைக்கழகங்கள் மற்றும் ப.மா.ஆ நிர்வாகிகளுடனான சந்திப்பு 2011.11.08 ஆம் திகதியன்று

7. உப வேந்தர்களுடன் 2011.12.01 அம் திகதியன்று

## 16. தேசிய அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட உதவிகள்

- உள்ளகப் பயிற்சி நியமனங்களுக்காக 2003/04 (மறுபடி செய்) மற்றும் 2004/05 (பிரதான) எம்.பீ.பீ.எஸ் பரீட்சையை அடிப்படையாகக்கொண்டு திறமை வரிசைப் பட்டியலானது தொகுக்கப்பட்டு சுகாதார அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது.
- ஆயுர் வேத மாணவர்களுக்கான நியமனங்களுக்காக, இரண்டு ஆயுர் வேத பரிட்சைப் பெறுபேற்றுப் பட்டியல்கள் ஆகஸ்ட் மாதமளவில் தயாரிக்கப்பட்டு ஆயுர்வேத திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்பட்டது.ஒப்படைக்கப்படபட்டியல்கள் வருமாறு.

  - 2001/ 2002 (பிரதான)
  - 2001/ 2002 (மறுபடி செய்)

- மத்திய வங்கி தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களம், தொழில் திணைக்களம் மற்றும் வேறு அரச நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு அவர்களின் வெளியீடுகளில் உயர் கல்வி தொடர்பான தகவல்களைத் தொகுப்பதற்கு ப.மா.ஆ வின் MIS பிரிவு உதவி வழங்கியது.
- ப.மா.ஆ வின் MIS பிரிவானது யுனெஸ்கோ புள்ளிவிபரவியல் நிறுவனத்துக்குபல்கலைக்கழக கல்வி தொடர்பான தகவல்களை வழங்கியது .

## 17. சட்ட விவகாரங்கள்

### 17.1 புதிய சட்டம்

விமர்சனைக்குரிய ஆண்டில் ஆணைக்குழுவின் சட்டப் பிரிவு 12 கட்டளைகளையும் [05 கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு தகுதி வாய்ந்த அதிகாரியை நியமிப்பதந்காக ,03 புதிய துறைகளை ஸ்தாபிப்பதற்கு, 02 இருக்கும் துறையை பெயர் மாற்றம் செய்வதற்கு, மற்றும் 02 நிறுவகங்களின் அங்கிகாரத்திற்கு] மற்றும் 02 உத்தரவையும் பிரசுரித்தது.

#### (1) வருட காலத்தில் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகள்

(அ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20(4) ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட கட்டளை,இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக ஆலோசனை சபைக்குப் பதிலாக திரு.நிமால் ரஞ்சித் அத்தநாயக்க அவர்களை 2011.01.21ஆம் திகதியிலிருந்து அமுலாகும் வண்ணம் தகுதி வாய்ந்த அதிகாரியாக நியமிப்பதற்கும்.இது 2011.01.24ஆம் திகதி விசேட அரசாங்க வர்த்தமானி இல.1690/1ல் பிரசுரிக்கப்பட்டது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட கட்டளையின் பின்னரான உப கட்டளைகள்.இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக ஆலோசனை சபைக்குப் பதிலாக திரு.நிமால் ரஞ்சித் அத்தநாயக்க அவர்களது நியமனத்தை பின்வரும் அடிப்படையில் நீடிக்கப்பட்ட தற்கானகட்டளையாகும்

(i) 2011.ஏப்ரல் 21ஆம் திகதியிலிருந்து 3 மாத காலத்துக்காக. இது 2011.06.24 ஆம் அன்று விசேட அரசாங்க வர்த்தமானி இல.1711/24ல் பிரசுரிக்கப்பட்டது

(ii) 2011.ஜுலை 21 ஆம் திகதியிலிருந்து 3 மாத காலத்துக்காக. இது 2011.08.03 ஆம் அன்று விசேட அரசாங்க வர்த்தமானி இல.1711/15ல் பிரசுரிக்கப்பட்டது.

(iii) 2011 ஒக்டோபர் 21 ஆம் திகதியிலிருந்து 3 மாத காலத்துக்காக. இது 2011.11.08 ஆம் அன்று விசேட அரசாங்க வர்த்தமானி இல.1731/3ல் பிரசுரிக்கப்பட்டது.

(ஆ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட கட்டளை. இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தில் கணணி மற்றும் தகவல் முறைமைகளுக்கான துறையையும், விளையாட்டு விஞ்ஞானங்கள் மற்றும் உடற்றொழில் கல்வி ஆகியவற்றுக்கான துறைகளையும் பிரயோக விஞ்ஞான பீடத்தின் தாபிப்பதற்கும் இது 2011.02.01 ஆம் திகதியன்று விசேட அரசாங்க வர்த்தமானி இல.1691/13ல் பிரசுரிக்கப்பட்டது.

(இ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட கட்டளை,இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாச்சாரப்பீடத்தின் புவியியல் துறையை தாபிப்பதற்காக. இது2011.06.24 ஆம் திகதியன்று விசேட அரசாங்க வர்த்தமானி இல.1711/24ல் பிரசுரிக்கப்பட்டது.

(ஈ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட கட்டளை, களனிப்பல்கலைக்கழகத்தில் வர்த்தக முகாமைத்துவ பிடத்தில் நிதித்துறையை ஸ்தாபிப்பதற்காக.இது2011.06.24 ஆம் திகதியன்று விசேட அரசாங்க வர்த்தமானி இல.1711/24ல் பிரசுரிக்கப்பட்டது

(உ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்27(1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட கட்டளை, ஸ்ரீ ஜயவர்த்தனபர பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தைமனித நேயம் மற்றும் சமூக விஞ்ஞான பீடமாக பெயர் மாற்றம் செய்வதற்காக. இது2011.06.24 ஆம் திகதியன்று விசேட அரசாங்க வர்த்தமானி இல.1711/24ல் பிரசுரிக்கப்பட்டது

(ஊ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட கட்டளை, இலங்கை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தில் உள்ள சமூக மருத்துவ துறையை சமூகம் மற்றும் குடும்ப மருத்துவ துறையாக பெயர் மாற்றம் செய்வதற்கான கட்டளையாகும்.இது2011.06.24 ஆம் திகதியன்று விசேட அரசாங்க வர்த்தமானி இல.1711/24ல் பிரசுரிக்கப்பட்டது.

(எ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25(A) ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட கட்டளை, வரையறுக்கப்பட்ட தொழிநுட்பம் மற்றும் மருத்துவத்திற்கான தெற்காசிய நிறுவனத்தை (SAITM), உரிய நிபந்தனைகளுக்குட்பட்டு, மருத்துவ இளமானி மற்றும் அறுவைச் சிகிச்சை இளமானி பட்டத்தை(MBBS) அளிப்பதற்காக பட்டம் வழங்கும் நிறுவகமாக அங்கிகரிப்பதற்குரிய கட்டளையாகும். இது2011.08.30 ஆம் திகதியன்று விசேட அரசாங்க வர்த்தமானி இல.1721/19ல் பிரசுரிக்கப்பட்டது.

(ஏ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட கட்டளை, வரையறுக்கப்பட்ட SLIITநிறுவனம் சார்பாக முன்னைய வேளைகளில் பட்டம் வழங்குவதற்காக வழங்கப்பட்ட அங்கீகாரம் தவிர, வியாபார முகாமைத்துவத்திலும் தகவல் தொழிநுட்பத்திலும் இளமானிப் பட்டங்களை வழங்குவதற்காக வரையறுக்கப்பட்ட SLIIT நிறுவனத்தை அங்கீகரிப்பதற்கான கட்டளையாகும். இது 2011.11.22 ஆம் திகதி யின்விசேட அரசாங்க வர்த்தமானி இல.1733/18ல் பிரசுரிக்கப்பட்டது.

**(2) வருட காலத்தில் பிறப்பிக்கப்பட்ட கட்டளைச் சட்டம்**

(அ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 24A ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட கொழும்பு பல்கலைக்கழக கணணி கற்கைகள் நிறுவன (திருத்தம்) 2011 ஆம் ஆண்டின் கட்டளைச்சட்ட இல – 1, இது 22.07.2011 ஆம் திகதியிடப்பட்ட விஷேட அரசாங்க வர்த்தமானி இல. 1715/32 இல் பிரசுரிக்கப்பட்டது.

(ஆ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும்71 ஆம் பிரிவின் உப பிரிவு (2) (iii) இன் கீழ் ப.மா.ஆ வால் செய்யப்பட்ட பதவி உயர்வு நியமன உத்தரவு, 1979 ஆம் ஆண்டைய சட்ட இல.6 இன் படி, 1979.11.21 ஆம் திகதியின் விஷேட அரசாங்க வர்த்தமானி இல.63/8இல் பிரசுரிக்கப்பட்டது.இவ் உத்தரவை இத்தால் ரத்துச் செய்வது சம்பந்தமான உத்தரவானது 2011.07.22ஆம் திகதியிடப்பட்ட விஷேட அரசாங்க வர்த்தமானி இல. 1715/32 இல் பிரசுரிக்கப்பட்டது.

**17.2 நீதிமன்ற வழக்குகள்**

விமர்சனைக்குரிய ஆண்டில் பமாஆ வுக்கு எதிராக சட்ட நீதிமன்றம் மற்றும் நியாயாதிக்க சபைகளில் தாக்கல் செய்யப்பட்ட 41 வழக்குகளை ஆணைக்குழு காரியாலத்தினது சட்டப் பிரிவு கையாண்டது.

| | |
|---|---|
| உச்ச நீதி மன்றம் | - 06 வழக்குகள் |
| மேன் முறையீட்டு நீதி மன்றம் | - 16 வழக்குகள் |
| மனித உரிமைகள் ஆணைக்குழு | - 02 வழக்கு |
| நீதவான் நீதி மன்றம் | - 01 வழக்கு |
| மாவட்ட நீதி மன்றம் | - 01 வழக்கு |
| நடுவர் தீர்ப்பு | - 01 வழக்கு |
| ஊழியர் நியாயாதிக்க சபை | - 01 வழக்கு |
| பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீடுள் சபை | - 13 வழக்குகள் |

## 18. மத்திய உள்ளக கணக்காய்வுப் பிரிவு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணைகள் ஆகிய பணிகள் மத்திய உள்ளக கணக்காய்வு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது கடந்த வருடங்களைப் போன்று உள்ளக கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் படிமுறைகள் ஆகியவற்றின் போதுமானதன்மை பற்றி மதிப்பிடல், சுற்று நிருப அறிவுறுத்தல்கள், பல்கலைக்கழக சட்டம் மற்றும் வேறு ஏதாவது பொருத்தமான விதிகள், ஒழுங்கு முறைகள் என்பன பின்பற்றப்படு கின்றமையினை உறுதி செய்தல் போன்ற அதன் வேலை நிகழ்ச்சித் திட்டம் தொடரப்படுகின்றது. கண்காணிப்பு செய்முறை, புதிய கொள்கைகள் அல்லது மாற்றங்களை கொள்கையில் பிரேரிப்பது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணக்காய்வு குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. சகல தவறுகள், பலவீனங்கள், குறைபாடுகள் மற்றும் அவற்றை தீர்ப்பதற்கான பரிந்துரைகளுடன் உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. மேலதிகமாக பின்வரும் நடவடிக்கைகளும் கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

(1) விமர்சனைக்குரிய ஆண்டில் சாதாரண கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்துக்கு மேலதிகமாக குறிப்பிட்ட பரப்புகளில் (பின்வரும் உயர் கல்வி நிறுவகங்களில்)விஷேட விசாரணைகள் நடத்தப்பட்டதுடன் மேலதிக நடவடிக்கைகளுக்காக உரிய அதிகாரிகளுக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப் பட்டன.

- பேராதனைப் பல்கலைக்கழகம்
- கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
- தென் கிழக்கு பல்கலைக்கழகம்
- சபரகமுவ பல்கலைக்கழகம்
- பாளி - பௌத்த கற்கைகள் பட்டப்பின் நிறுவகம்
- மனித நேயம் மற்றும் சமூக விஞ்ஞானங்களின் உயர்கற்கைகளிற்கானதேசிய மையம்

(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உள்ளடங்கலாக 19 பல்கலைக் கழகங்கள் /உகநி தொடர்பாக பாராளுமன்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழுவின் சந்திப்புகள் சம்பந்தமான விடயங்களை ஒருங்கிணைத்ததுடன் கேட்டுக்கொள்ளப்பட்ட தகவல்களையும் சமர்ப்பித்தது.

(3) விமர்சனைக்குரிய ஆண்டில் கணக்காய்வு குழு 30.06.2011, 22.07.2011, 04.11.2011 30.11.2011 மற்றும் 27.12.2011 திகதி போன்ற ஐந்து சந்தர்ப்பங்களில் சந்தித்துள்ளது.

## 19. பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீடுகள் சபை (ப.சே.மே.ச)

விமர்சனைக்குரிய ஆண்டு காலத்தில் ப.சே.மே.ச 48 அமர்வுகளை நடாத்தியது. 2011 ஆம் ஆண்டில் பதினைந்து (15) மேன்முறையீடுகள் பதிவு செய்யப்பட்டன. அவ்வாண்டில் நிலுவையிலுள்ள மொத்த மேன்முறையீடுகள் 38. 15 மேன்முறையீடுகள் மீதான கட்டளைகள் வழங்கப்பட்டது. அவற்றில் தள்ளுபடியாகிய மேன்முறையீடுகள் 06 மற்றும் அனுமதிக்கப்பட்டவை 02 ஆகும்.07 வழக்குகள் சம்பந்தமான பூர்வாங்க சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.ஒரு வழக்கு தீர்த்து வைக்கப்பட்டதுடன். மற்றொரு வழக்கு விலகிக்கொண்டது.ஆண்டின் இறுதியில் 22 மேன்முறையீடுகள் நிலுவையிலிருந்தன.

பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீடு சபை வழங்கிய 02 கட்டளைகளுக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 02 வழக்குகள் நிலவையில் இருந்தன.

## 20. வெளியீடுகளும் ஆராய்ச்சிப் படிப்புகளும்

1. "இலங்கை பல்கலைக்கழக புள்ளி விபரங்கள் 2010" என்ற அத் தொடரின் ஒன்பதாவது தொகுதி வெளியீடு 2011 ஜுன் மாதத்தில் பிரசுரிக்கப்பட்டது.

2. 2009 மற்றும் 2010 ஆம் நிதியாண்டிற்கான பல்கலைக்கழகங்களின் அலகு மீண்டெழும் செலவானது பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன் "இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பல்கலைக்கழக மாணவர் கல்வியின் அலகு மீண்டெழும் செலவுப் பகுப்பாய்வு2009 மற்றும் 2010" அறிக்கையும் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

3. பல்கலைக்கழக முறைமையில் பல்கலைக்கழக மாணவர்களுக்காக உள்ள விடுதி வசதிகளை இனங்காண்பதற்கான அளவீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

4. தேசிய விஞ்ஞான அமைப்பு மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஆகியவற்றுக்கிடையே 2008.01.25 ஆம் திகதி செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் "தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (தே.ஆ.அ) – 2010" அளவீடானது மேற்கொள்ளப்பட்டது.
5. பல்கலைக்கழக முறைமையின் நிர்வாக உத்தியோகத்தர்களின் தேர்ச்சிக் கட்டுமானம் மற்றும்வினைத்திறன் விருத்தி தேவைப்பாடுகள் ஆகியவற்றை இனங்காண்பதற்கான அளவீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டது

6. பல்கலைக்கழக முறைமையில் உள்ள மானிட மற்றும் பௌதீக வளங்கள் சார்பான எல்லா வளங்களையும் உள்ளடக்கிய ஒரு தகவல் தளத்தை உருவாக்குவதற்காக பல்கலைக்கழகங்களில் பெறக்கூடிய அறிவு பூர்வமானதும் தொழிநுட்ப மற்றும் உட்கட்டமைப்பு ரீதியானதுமான வசதிகளை இனங்காண்பதற்கான அளவீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டது

## 21. பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம்

பல்கலைக்கழக ஓய்வூதியத் திட்டம் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 97 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக சேமலாப நிதியப் பங்களிப்பின் ஒரு பகுதியினை உபயோகித்து, ஆயுள்காப்பீட்டு நிபுணரால் செய்யப்பட்ட சிபார்சுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு மற்றும் பமாஆ வினால் இந்நோக்கத்திற்காக அனுமதிக்கப்பட்டது. அமைச்சரவை 1999 மார்ச் 24 ஆம் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் பல்கலைக்கழக சேமலாப நிதியத்தக்கு மேலதிகமாக பல்கலைக்கழக ஊழியர்களுக்கான ஒரு ஓய்வூதிய நிதியத்தினை ஸ்தாபித்தலுக்கு அப்போதைய மாண்புமிகு கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர் காலஞ்சென்ற திரு. ரிச்சர்ட் பத்திரன அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவினை அனுமதித்தது.

அவ்வாறே, பமாஆ வினால் 1999 ஜுலை 10 ஆம் திகதி வெளியிடப்பட்ட ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 747 இன் பிரமாணங்களுக்கு அமைவாக 1999 செப்டெம்பர் 1 ஆம் திகதியில் இருந்து பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம் ஸ்தாபிக்கப்பட்டது.

**அங்கத்துவம்**

- 1999 செப்டெம்பர் 01 ஆம் திகதி அன்றில் சேவையில் இருந்த சகல நிரந்தர ஊழியர்களுக்கும் ஓய்வூதிய திட்டத்தில் அங்கத்தவராவதற்கு சந்தர்ப்பம்வழங்கப்பட்ட அதேவேளை 1999 செப்டம்பர் 01ம் திகதியின் பின்பு பல்கலைக்கழக சேவையில் இணையும் புதிய ஊழியர்களுக்கு அங்கத்துவம் கட்டாயமானதாகும்.

- 1999 செப்டம்பர் 01இல் சேவையிலிருந்த ஊழியர்களினது கடந்த கால சேவையின் பொறுப்புக்களை எதிர்கொள்வதற்காக அவர்களது வரவிலுள்ள மொத்த சேமலாபநிதி மீதியில் இருந்து 40% ஓய்வூதிய நிதியத்திற்கு மாற்றப்பட்டது. பல்கலைக்கழக சேவையில் 1999 செப்டம்பர் 01 இன் பின்பு இணைந்துகொண்ட ஊழியர்களைப் பொறுத்த மட்டில் எதிர்வரும் சேவைக்கால பொறுப்புக்களை எதிர்கொள்வதற்காக வேலைகொள்வோர் பல்கலைக்கழக சேமலாப நிதியத்துக்கு பங்களிப்பு செய்யப்படும் சம்பளத்தின் 15% த்தில் இருந்து சம்பளத்தின் 8% ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்யப்படுகிறது.

**நன்மைகள்**

- 20 வருடம் அல்லது அதிகமாக மற்றும் ஓய்வுபெறும் வயது வரை சேவையாற்றிய நிதியின் அங்கத்தவர்களுக்கு மரணிக்கும் வரை மாதாந்த ஓய்வூதியம் வழங்கப்படும்.

  (கல்விசார் ஊழியர்கள் 65 வயது வரை, கல்விசாரா ஊழியர்கள் 55 அல்லது 60 வயது அல்லது அவற்றிற்கிடையில் சேவை நீடிப்பின் பிறகு)

- ஓய்வூதியத்தொகை ஒவ்வொரு வருட சேவைக்கும் இறுதியாகப் பெறப்பட்ட மாதாந்த சம்பளத்தின் ஒரு குறித்த வீதத்தில் கணிக்கப்படும். உபயோகிக்கப்படும் வீதங்களாவன ஓய்வூதிய வயதுகளாக 55,60 மற்றும் 65 வயதுகளுக்கு முறையே 1.0%,1.2% மற்றும் 1.4% மும் ஆகும். கல்விசாரா ஊழியர்கள் 55 வயதில் ஓய்வு பெற முடியும் எனினும் 60 வயது வரை சேவை நீடிப்பு பெற முடியும் அல்லது இடையே ஓய்வு பெறவும் முடியும். இவர்களுக்கு தகவுக்கேற்ற அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படும்.

- ஓய்வூதியர் மரணமடைந்தால் ஓய்வூதியத்தின் 50% கணவன் அல்லது மனைவிக்கு கொடுக்கப்படுவதுடன் மற்றும் மீதி 50% பிள்ளைகளுக்கிடையே சமமாக பிரிக்கப்பட்டு 18 வயதினை அடையும் வரை கொடுக்கப்படும்.

- 20 வருட சேவையினை பூரணப்படுத்தாத ஊழியர்களது வரவில் இருக்கும் தொகையும் வட்டியும் ஓய்வு பெறும் நிலையில் திருப்பிச் செலுத்தப்படும்.

- சேவையில் இருக்கும் காலத்தில் மரணமடையும் திருமணம் செய்யாத ஊழியர்களின் அல்லது 20 வருட சேவையினை பூரணப்படுத்தாமல் மரணமடைந்த ஊழியர்களின் வரவில் இருக்கும் தொகையும் வட்டியும் அவர்களது சட்பூர்வ உரிமைக்காரர்களுக்கு கொடுக்கப்படும்.

**ஆளுகை மற்றும் முகாமைத்துவம்**

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் ஆலுகையினையும் முகாமைத்துவத்தினையும் மேம்படுத்தவும்மற்றும் பலப்படுத்தவும் பிரேரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பல்கலைக்கழக ஓய்வூதிய திட்டத்தின் ஒழுங்குபடுத்தல் நிர்வகித்தல் மற்றும் முகாமைப்படுத்தல் தொடர்பாக ஒரு கட்டளைச் சட்டத்தினை வரைவதற்கு,பல்கலைக்கழக ஓய்வூதிய திட்டத்தினைஅவ்வப்பொழுது மதிப்பிடுவதற்காக ஒரு ஆலோசனை /மேற்பார்வை குழுவை அமைக்க ஆனைக்குழு தீர்மானித்தது. நிதியினுடைய வருடாந்த கணக்குகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்காக கணக்காய்வு தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. முதலீடுகள் அரச விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக மேற்கொள்ளப்படுகிறது.

## ஓய்வூதிய நிதியத்தின் தற்போதைய நிலை ஒரு கண்ணோட்டத்தில்

| | | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|---|
| 1 | அங்கத்துவம் | | | | | |
| | செயற்படு உறுப்பினர்கள் | 5,467 | 6,073 | 6,883 | 7,282 | 7,588 |
| | வேறு செயற்படா உறுப்பினர்கள் | 844 | 968 | 1,080 | 1,363 | 1,503 |
| | உறுப்பினர்களின் எண்ணிக்கை | 6,311 | 7,041 | 7,963 | 8,645 | 9,091 |
| 2 | ஓய்வூதியம் பெறுகின்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 56 | 67 | 82 | 89 | 113 |
| 3 | நிதியத்தின் மீதி | | | | | |
| | பங்களிப்பாளர்கள் நிதி | 826.0 | 1,052.2 | 1,329.8 | 1,632.5 | 1957.7 |
| | ஓய்வு பெற்றோர் நிதி மற்றும் ஒதுக்கீடு | 87.7 | 116.5 | 164.2 | 200.7 | 278.0 |
| 4 | மொத்த முதலீடு (ரூபா மில்லியன்) | 883.7 | 1,116.8 | 1,392.0 | 1,679.3 | 2,000.5 |
| 5 | மொ. முதலீட்டுவருமானம் (ரூபா மில்லியன்) | 90.5 | 145.8 | 208.0 | 213.4 | 224.1 |
| 6 | வருமான வரி (மில்லியன்) | 9.1 | 14.7 | 21.0 | 21.3 | 18.7 |
| 7 | முதலீட்டுக்கு இலாப வீதம் (%) | 10.24% | 13.06% | 14.94% | 12.71% | 11.20% |
| 8 | அங்கத்தினருக்கு வெளிவிடப்பட்ட வட்டி | 9.5% | 12% | 13% | 11.5% | 8% |
| 9 | ஓய்வூதிய கொடுப்பனவுகள் (ரூபா.மி.) | 6.1 | 8.3 | 11.5 | 12.4 | 16.9 |












## 22. பல்கலைக்கழக சேமலாப நிதி

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க

பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 89- 96 வரையிலான பிரிவுகளுக்கிணங்க தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக சேமலாப நிதி பல்கலைக்கழக முறைமையிலுள்ள ஊழியர்களுக்கு இளைப்பாற்று காலத்தில் தமது வாழ்வாதாரத்தினை உறுதிப்படுத்துகின்ற திட்டமாகும். நிதியினை மிகவும் திறமையாக முகாமை செய்வதன் மூலம் ஊழியர்கள் இளைப்பாறி செல்லுகின்றபோது அல்லது சேவையை விட்டு விலகுகின்றபோது உறுப்பினர்களுக்கு நல்ல வருவாயை பெற்றுக்கொடுக்கின்ற நோக்கத்தினை பல்கலைக்கழக சேமலாபநிதி கொண்டுள்ளது.

நிதியத்தின் உறுப்பினர்கள் தங்களது சம்பளத்தில் 10% த்தினையும் உறுப்பினர்கள் சேவையாற்றுகின்ற நிறுவனங்கள் உறுப்பினர்களின் சம்பளத்தில் 15% த்தினையும் பல்கலைக்கழக சேமலாப நிதியத்தக்கு செலுத்துதல் வேண்டும்.

**நன்மைகள்**

- ஊழியர்கள் இளைப்பாறி செல்லுகின்றபோது ஊழியர்களின் கணக்கில் வரவில் இருக்கும் சேமலாபநிதியின் மீதி இளைப்பாற்று நன்மையாக வழங்கப்படும்.
- பல்கலைக்கழக ஊழியர்களுக்கு நடைமுறைப் படுத்தப்படுகின்ற இடர் கடன், வாகனக் கடன் மற்றும் கணனிக் கடன் போன்றவற்றிற்கு நிதியின் மிகுதித்தொகையினை பிணையாக உபயோகப்படுத்த முடியும்.
- அங்கத்தவர்களுடைய கணக்கிலுள்ள மிகுதி தொகையில் 65% வரைக்கும் கடன்களை வழங்கமுடியம்.
- சேமலாப நிதி மிகுதி உயர் கல்விக்காக வெளிநாடு செல்கின்ற அல்லது நிதி தேவைப்படுகின்ற ஊழியர்களால் உயர் கல்வி நிறுவனங்களுடன் மேற்கொள்ளும் முறிகளுக்கு பிணையாக பயன்படுத்தப்பட முடியும்.

**பல்கலைக்கழக சேமலாபநிதியத்தின் தற்போதைய நிலமை ஒரு பார்வை**

| | | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|---|
| 1. | அங்கத்துவம் | | | | | |
| | செயற்படு அங்கத்தவர்கள் | 26,111 | 26,143 | 27,450 | 27,368 | 27,892 |
| | செயற்படா அங்கத்தவர்கள் | 5,404 | 5,385 | 5,348 | 5,321 | 5,288 |
| 2. | மீளளிப்புகள் | | | | | |
| | மீளளிப்பு எண்ணிக்கை | 2,071 | 2,544 | 2,302 | 2,847 | 2,663 |
| | மீளளிப்பு பெறுமதி (ரூபா மில்லியன்) | 604.4 | 866.9 | 961.3 | 1,002.0 | 997.2 |
| 3. | நிதியத்தின் மீதி (ரூபா மில்லியன்) | 12,433.2 | 13,761.3 | 15,515.1 | 16,906.6 | 18,502.0 |
| 4. | பொது ஒதுக்கம் (ரூபா மில்லியன்) | 156.5 | 162.5 | 49.4 | 74.8 | 123.7 |
| 5. | வட்டி வீகித சமப்படுத்தும் ஒதுக்கீடு (ரூபா மில்லியன்) | - | - | - | 136.9 | 281.6 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6. | வருடத்தில் வழங்கப்பட்ட கடன் (ரூபா மில்லியன்) | 1,139.9 | 695.1 | 640.1 | 708.8 | 858.8 |
| 7. | மொத்த முதலீடு (ரூபா மில்லியன்) | 9,028.9 | 9,955.6 | 11,350.5 | 12,547.0 | 13,582.0 |
| 8. | முதலீட்டு வருமானம் (ரூபா மில்லியன்) | 978.3 | 1,189.0 | 1,627.4 | 1,553.8 | 1,560.6 |
| 9. | செலுத்தப்பட்ட வரி (ரூபா மில்லியன்) | 97.8 | 120.7 | 162.7 | 155.3 | 124.8 |
| 10. | முதலீட்டுக்கு இலாப வீதம் | 10.84% | 12.12% | 14.34% | 12.38% | 11.50% |
| 11. | முன்கொண்டுவரப்பட்ட மீதியின் வெளியிடப்பட்ட வட்டி | 10.5% | 12% | 15.5% | 10.5% | 11.0% |













23. 2011ஆம் ஆண்டளவில் பின்வரும் ஆணைக்குழு சுற்றறிக்கைகள் மற்றும் ஸ்தாபன சுற்றறிக்கை கடிதங்கள் வெளியிடப்பட்டன

(1) ஆணைக்குழு சுற்றறிக்கைகள்

| ஆணைக்குழுச் சுற்றறிக்கைத் தலைப்புக்கள் | சுற்றறிக்கை இல |
|---|---|
| ஆழகியற் கற்கைகளில் செயன்முறைப்பரீட்சை மற்றும் செயன்முறைக்கான வருகை நிலை உத்தியோகத்தர் ஆகியோருக்கான கொடுப்பனவு | 941 |
| நிதியாளர்களுக்குரிய கொடுப்பனவிற்காக வருடாந்த வருமான உச்ச வரம்புத் திருத்தம் | 942 |

| | |
|---|---|
| 2011ஆம் ஆண்டைய பாதீட்டுப் பிரேரணைக்கமைய அரச கூட்டுத்தாபனங்கள் சட்ட அமைப்புக்கள் மற்றும் முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பனிகளில் உள்ள ஊழியர்கள் மற்றும் செயற்றிட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர்களின் சம்பளம் மற்றும் உதவித்தொகைஆகியவற்றின் திருத்ததம் | 943 |
| மாணவர் ஒழுங்கீனங்கள் மற்றும் பரீட்சைக் குற்றங்களுக்கான விசாரணைக்குழு உறுப்பினர்களின் கொடுப்பனவ்பு | 944 |
| 2011 ஆம் ஆண்டைய பாதீட்டுப் பிரேரணையின் படியான கல்வி உதவித்தொகையின் சீர் திருத்தம் | 945 |
| மாணவர ஒழுக்காறு தொடர்பான பொதுவான வழிகாட்டுதல்கள் | 946 |
| எழுது வினைஞர் மற்றும் இணைந்த தரங்களில் உள்ள சிரேஷ்ட ஊழியர்களுக்கு அலுவலக பைகளை வழங்குதல் | 947 |
| ஆட்சேர்ப்பு திட்ட திருத்தங்கள்- 2010.06.23 ஆம் திகதிய ஆணைக்குழுச் சுற்றறிக்கை இல.922 | 948 |
| கல்விசார், தொழில்சார் தகைமைகளின் அங்கீகாரத்திற்கேற்ப கல்வி சாரா,நிர்வாகம் சாரா உத்தியோகத்தர்களுக்கான ஊதிய உயர்வுக் கொடுப்பனவு | 949 |
| கல்வி சாரா பதவிகளுக்குரிய உத்தியோகத்தர்களுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகளுக்கான வினைத்திறன் மதிப்பீடு மற்றும் எழுத்துப் பரீட்சைகள் ஆகியவற்றை நடாத்தும் உத்தியோகத்ததரகளுக்கான கொடுப்பனவு வீதம் | 950 |
| விஞ்ஞான ரீதியான /தொழில் ரீதியான நிறுவனங்களுக்கு கொடுக்கவேண்டிய பங்களிப்பு தொகையை ஈடுசெய்தல் | 951 |
| அரச கூட்டுத்தாபனங்கள், சட்ட அமைப்புக்கள் மற்றும் முழுமையாக அரசுக்கு சொந்தமான கம்பனிகளில் உள்ள ஊழியர்களுக்கான சம்பள(வாழ்க்கைச் செலவு உதவித்தொகையின்) திருத்தம் | 952 |
| உடற் பயிற்சி நிலைய மேற்பார்வையாளர் தரம் (III), நீச்சல் தடாக மேற்பார்வையாளர் மற்றும் நீச்சல் தடாக பணியாளர் தரம்(III) ஆகிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டங்கள் | 953 |
| தேர்வுக்குழு உறுப்பினர்களுக்கான கட்டணக் கொடுப்பனவு | 954 |
| அறக்கொடைக் கொடுப்பனவு UPF,ETF ஆகியவற்றைக் கணிப்பீடுவதற்காக முற்கொடுப்பனவை மதிப்பிடல் | 955 |
| பல்கலைககழகங்கள், வளாகங்கள் ஆகியவற்றின் கற்கைத்துறைத் தலைவர்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் துறைத் தலைவர்கள் ஆகியோர்களது பதவி நிலை சம்பந்தமான தெளிவாக்கல்கள் | 956 |
| ஆட்சேர்ப்பு திட்டம்- முறைமைகள் பொறியியலாளர் பதவி தரம்II மற்றும்தரம் I | 957 |
| தகுதிகாண் விரிவுரையாளர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்குரிய, வெளிநாடுகளில் பட்டப்பின் கற்கையை தொடர்வதற்கான நிதி உதவி- நேரடி ஆட்சேர்ப்பு | 958 |
| ஆசிரியர்களுக்கு கற்கை விடுமுறை வழங்கல் | 959 |

| | |
|---|---|
| பேராசிரியர்களுக்கு கௌரவமாக ஓய்வு பெறும் அந்தஸ்தை வழங்குவதற்கான வழிகாட்டுதல்கள் | 960 |
| பல்கலைக்கழக கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான கல்வி முற்கொடுப்பனவு வீத மாற்றம் | 961 |
| ஆட்சேர்ப்பு திட்டம் / பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தலைவர் மற்றும் பல்கலைக்கழக உப வேந்தர்கள் ஆகியோர்களுக்கான பிரத்தியேக செயலாளர் பதவி | 962 |
| ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கான விடுமுறை | 963 |
| சம்பளக்கோவை U-EX-I(IV) மற்றும் அதற்கு மேற்பட்டவைகளை கொண்டு செல்லும் பதவியில் உள்ளவர்களுக்கு ஆவணப் பெட்டிகளை வழங்குதல் | 964 |
| 1978ஆம் ஆண்டின் 16 ம் இலக்க பல்கலைக்கழக திருத்தச் சட்டத்தின் 46 (2) ம் பிரிவிற்கான உரை பெயர்ப்பு | 965 |
| ஆட்சேர்ப்பு திட்டம் -முறைமைகள் நிர்வாகி பதவி(IT) | 966 |
| பல்கலைக்கழகங்களுக்கிடையேயான உப விடுதிப்பொறுப்பாளர் சங்கத்துக்கும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கும் இடையிலான கைத்தொழில் பிணக்கு சம்பந்தமான தீர்ப்பினை அமுல்படுத்துதல் | 967 |
| பல்கலைக்கழக முறைமையில் உள்ள எழுது வினைஞர்கள், களஞ்சியக் காப்பாளர்கள், காசாளர்கள்,நூலக உதவியாளர்கள் மற்றம் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர்களின் ஒரு தரத்திலிருந்து இன்னொரு தரத்துக்கான பதவியுயர்வுகள் | 968 |
| பிராந்திய கல்விச்சேவைகள் தொடர்பான பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத்திட்டம்- இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | 969 |
| ஆட்சேர்ப்பு திட்டம் - சுருக்கெழுத்தாளர் பதவி தரம் II (சிங்களம்/ தமிழ் /ஆங்கிலம்) | 970 |
| கணக்காளர்,காசாளர், உள்ளக கணக்காய்வாளர்ஆகிய பதவி ஆட் சேர்ப்புத் திட்ட திருத்தங்கள் மற்றும் கல்வி உதவி உத்தியோகத்தர் {U-AS 2(1) மற்றும் நிரவாக தரம் {U-EXI (IV) & U-EX 2(III) ஆகியவற்றுக்கு விண்ணப்பிக்கக் கூடியசம்பள ஏற்ற திறன் தடை தாண்டல் பரீட்சை ஆட்சேர்ப்புக்கள் | 971 |
| பிணைகள் மற்றும் உடன்படிக்கைகளுக்குரிய உத்தரவாதம் | 972 |

## (2) தாபனச் சுற்றறிக்கைக் கடிதங்கள்

| | |
|---|---|
| குறைவிலை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிகளை வழங்குதல் | 01/2011 |
| இணைப்பேராசிரியர்கள் /பேராசிரியர்கள் பதவிகளுக்குரிய நியமனத்துக்கான தெரிவு நடைமுறை | 02/2011 |
| ஆராய்ச்சி உதவித்தொகை - 2011 ஆம் ஆண்டிற்குரிய பாதீட்டுப் பிரேரணை | 03/2011 |
| பல்கலைக்கழகங்கள், நிறுவகங்களின் பதவியணி மற்றும்ப.மா.ஆ பதவியணியின் இடமாற்றம் ஆகியவற்றினது திருத்தம் | 04/2011 |

| | |
|---|---|
| 2011 ஆம் ஆண்டு ஜனவரியில் ஏற்ப்பட்டமண்சரிவு மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான விஷேட முற் கொடுப்பனவு | 05/2011 |
| நாட்டிற்குள் கடைமை சார் பயணங்கள் அங்கம் XIV அரச தாபனக் கோவை | 06/2011 |
| மொழிபெயர்ப்புக்கள் மற்றும் உரை பெயர்ப்புக்கான கட்டணத் திருத்தம் | 07/2011 |
| பணிகள் மேற்பார்வையாளர்களுக்கான (விஷேட தரம்) ஆட்சேர்ப்புத் திட்ட திருத்தம் | 08/2011 |
| ஆராய்ச்சி உதவித்தொகை - 2011 ஆம் ஆண்டிற்குரிய பாதீட்டுப் பிரேரணை | 09/2011 |
| உயர் கல்வி நிறுவனங்களின் துறைத் தலைமைப்பதவி தொடர்பான தெளிவாக்கல்கள் | 10/2011 |
| ஆராய்ச்சி உதவித்தொகை - 2011 ஆம் ஆண்டிற்குரிய பாதீட்டுப் பிரேரணை | 11/2011 |
| விரிவுரையாளர்களை (நியமன உறுதி பெற்ற)சிரேஷ்ட விரிவுரையாளர் தரத்துக்கு பதவி உயர்வு செய்தல் | 12/2011 |
| பல்கலைக்கழகங்கள் /உயர் கல்வி நிறுவனங்களில் உத்தியோகத்தர் அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபடும் வளவாளர்களுக்கான கொடுப்பனவு | 13/2011 |
| அறக்கொடைக் கொடுப்பனவு பல்கலைக்கழக சேமலாப நிதியம்,ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றைக் கணிப்பிடுவதற்காக வாழ்க்கைச் செலவு முற்கொடுப்பனவை மதிப்பிடல் | 14/2011 |
| வெள்ளம் புயல் மற்றும் மண்சரிவு காரணமாக கடமைக்கு சமூகமளிக்காத அரச உத்தியோகத்தர்களுக்கான விஷேட விடுமுறை | 15/2011 |
| குறைவிலை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிகளை வழங்குதல் | 16/2011 |
| செய்முறைப் பயிற்சிக்காக பொது நிறுவனங்களுக்கு பயிற்சியாளர்களை இணைத்தல் | 17/2011 |
| காலியில் இருந்து இந்துருவ வரையான ரயில்வே பாதையை புதுப்பிப்பதன் காரணமாக அசௌகரியங்களை எதிர் கொள்ளும் அரச அலுவலர்களுக்கு நிவாரணங்களை வழங்குதல் | 18/2011 |
| U-MN 4(I) மற்றும் U-AS (2(I)) சம்பள அளவுகளுக்குரிய திருத்தம் | 19/2011 |
| நிர்வாக உத்தியோகத்தர்கள் / சார் நிதி சார் உத்தியோகத்தர்கள், கல்விசாரா நிர்வாகம் சாரா /நிர்வாகம் சாரா உத்தியோகத்தர்களின் இட மாற்றங்கள் | 20/2011 |

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை

| சொத்துக்கள | குறிப்பு | *பக்கம்* | 2011 ரூபா | 2010 ரூபா |
|---|---|---|---|---|
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | | |
| பொறி மற்றும் உபகரணங்கள் | 1 | *9* | 561,402,047 | 543,304,973 |
| முதலீடுகள் | 2 | *10* | 35,039,813 | 32,703,064 |
| | | | 596,441,860 | 576,008,038 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| பொருளிருப்புகள் | 3 | *10* | 4,209,635 | 1,858,673 |
| வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் | 4 | *10* | 37,341,873 | 44,097,348 |
| முற்கொடுப்பனவுகளும் வைப்புக்களும் | 5 | *11* | 2,239,413 | 1,860,172 |
| காசு மற்றும் காசிற்கு சமமானவைகள் | 6 | *11* | 14,755,811 | 17,336,628 |
| | | | 58,546,732 | 65,152,821 |
| **மொத்த சொத்துக்கள்** | | | **654,988,592** | **641,160,859** |
| **பொறுப்புகள்** | | | | |
| **திரட்டு நிதியம்** | | | | |
| பிற்போட்ட மூலதன மானியம் | 7 | *12* | 41,006,818 | 26,771,465 |
| மூலதன மானியங்கள்- செலவழிக்காதவை | 8 | *12* | 6,493,386 | 18,932,586 |
| நிலையான சொத்துக்களின் பிற்போட்ட புனரமைப்பு மற்றும் முன்னேற்றம் | 9 | *12* | 2,616,135 | 10,434,076 |
| மீள்மதிப்'பு மிகை | | | 509,313,767 | 515,365,273 |
| இருந்த மிகைள்/ (பற்றாக்குறை) | | | (29,455,544) | (40,384,588) |
| | | | 529,974,562 | 531,118,812 |
| **விசேட நிதிகள்** | | | | |
| ஒதுக்க நிதிகள் | 10 | *12* | 17,976,407 | 17,434,741 |
| வெளிநாட்டு நிதியிடப்பட்ட செயற்திட்டங்கள் | 11 | *12* | 2,344,720 | 2,226,257 |
| விசேட நிதியம் | 12 | *12* | 8,222,781 | 7,178,417 |
| பல்கலைக்கழக புலமைப்பரிசில் நிதியம் | 13 | *13* | 18,334,472 | 16,092,577 |
| | | | 46,878,380 | 42,931,992 |
| **நடைமுறையல்லாப் பொறுப்பு** | | | | |
| ஓய்வூதிய நன்மைகள் மீறல் | 14 | *15* | 38,014,686 | 34,079,393 |
| | | | 38,014,686 | 34,079,393 |

| | | | | |
|---|---|---|---|---|
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | | |
| பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கு செலுத்த வேண்டியவைகள் | **15** | *19* | 22,166,423 | 20,053,024 |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | **16** | *19* | 8,684,565 | 12,690,622 |
| குத்தகை கடன்கொடுத்தோர் - இலங்கை வரையறுத்த வர்த்தக் வங்கி | **17** | *19* | 8,773,332 | 0 |
| வெப்புக்கள் | **18** | *19* | 496,645 | 287,015 |
| | | | 40,120,965 | 33,030,662 |
| **மொத்த உரிமையாண்மையும் பொறுப்புகளும்** | | | **654,988,592** | **641,160,859** |

(பேராசிரியர் எஸ்.வீ.டி.ஜீ. சமரநாயக்கே)
தலைவர்

(ஆர்.ஏ.யூ. ரணவீர
கணக்காளர்

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## வருமானக் கூற்று

| திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | பக்கம் | 2011 ரூபா | 2010 ரூபா |
|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | |
| **அரசாங்க மானியங்கள்** | | | | |
| மீண்டெழும் மானியங்கள் | **19** | *20* | 640,903,460 | 570,337,259 |
| நிலையான சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் முன்னேற்றம் | **20** | *20* | 11,317,941 | 3,934,318 |
| திரட்டிய மூலதன மானியங்கள் | **21** | *20* | 9,221,251 | 11,257,944 |
| இயலளவை கட்டியெழுப்புதல் மீதான மூலதன மானியங்கள் | | | 469,175,624 | - |
| | | | **1,130,618,276** | **585,529,522** |
| **ஏனைய வருமானம்** | | | | |
| சாதாரண நடவடிக்கைகள் | **22** | *20* | 11,102,538 | 28,336,114 |
| அதிவிசேட நடவடிக்கைகள் | **22.1** | *20* | 900,467 | |
| **மொத்த வருமானம்** | | | **1,142,621,282** | **613,865,636** |
| **கழி செலவினம்** | | | | |
| ஆளணி வேதனங்கள் | **23** | *21* | 104,030,831 | 87,771,984 |
| பிரயாணச் செலவினம் | **24** | *21* | 789,776 | 665,071 |
| வழங்கல்கள் | **25** | *21* | 8,422,527 | 7,624,396 |
| பராமரிப்பு | **26** | *21* | 4,133,947 | 2,534,963 |
| ஒப்பந்த செலவினம் | **27** | *21* | 19,607,399 | 17,319,495 |
| ஏனைய மீண்டெழும் செலவினம் | **28** | *22* | 26,191,382 | 33,992,912 |
| புனரமைப்புச் செலவினம் | **29** | *22* | 11,317,941 | 3,934,318 |
| நிலையான சொத்தின் பெறுமானத்தேய்வு | **30** | *22* | 19,279,652 | 14,905,396 |
| மாணவர் நிதி உதவிகள் | **31** | *22* | 483,898,368 | 420,389,952 |
| இயலளவை கட்டியொழுப்பல் | **32** | *22* | 469,175,624 | 14,756,505 |
| | | | 1,146,847,447 | 603,894,992 |
| மிகைள்/ (பற்றாக்குறை) | | | (4,226,165) | 9,970,643 |

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## காசுப்பாய்ச்சல் கூற்று

| திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2011 | 2010 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| செயற்பாட்டு மிகைகள் /(பற்றாக்குறை) | (4,226,165) | - |
| **சீராக்கலிற்கானது** | | |
| பெறுமானத்தேய்வு | 19,279,652 | 14,905,396 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 11,440,386 | 3,995,403 |
| சொத்து விறங்பனை இலாபம் வள | (900,466) | |
| வட்டிச் செலவினம் | 912,773 | 170,369 |
| மூலதன மானியத் திரட்டு | (20,539,192) | (11,485,129) |
| செயற்பாட்டு மிகைகள் /(பற்றாக்குறை) | **5,966,988** | **7,586,039** |
| **தொழிற்படு மூலதன மாற்றங்கள்** | | |
| பொருளிருப்பு அதிகரிப்பு | (2,350,962) | (11,644) |
| பெறவேண்டியவைகளில் வீழ்ச்சி | 6,755,474 | (10,567,116) |
| முற்கொடுப்பனவுகளில் அதிகரிப்பு | (379,241) | 137,751 |
| உயர்கல்வி நிறுவனங்களிற்கு செலுத்த வேண்டியவைகளில் அதிகரிப்ப | 2,113,399 | (23,620,565) |
| வியாபார கடன்கொடுத்தோரில் வீழ்ச்சி | (4,006,058) | 7,221,131 |
| வைப்புக்களில் அதிகரிப்பு | 209,630 | 60,536 |
| செயற்பாட்டு நடவடிக்கைளில் உருவாக்கப்பட்ட காசு | 8,309,230 | (19,193,868) |
| பணிக்கொடைக் கொடுப்பனவுகள் | (7,505,093) | (1,970,515) |
| வட்டிக் கொடுப்பனவுகள் | (912,773) | (170,369) |
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | **(108,637)** | **(21,334,752)** |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரண சுவீகரிப்பு | (7,298,950) | (10,506,704) |
| நிலையான சொத்துக்கள் கைதவிர்ப்பு | 2,103,800 | - |
| வைப்புக்களில் முதலீடு | (2,336,749) | (1,549,287) |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | **(7,531,899)** | **(12,055,991)** |

| | | |
|---|---|---|
| **நிதியிடல் நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| பெறப்பட்ட மூலதன மானியங்கள் | 2,000,000 | 20,795,910 |
| புனரமைப்பு மானியங்கள் | 3,500,000 | 4,000,000 |
| ஆராய்ச்சி நிதிகளில் அதிகரிப்பு | 541,666 | 2,280,548 |
| நிதிக் குத்தகை கொடுப்பனவு | (4,386,668) | (2,482,728) |
| நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களிடமிருந்தான பெறுவனவுகள்/ (கொடுப்பனவுகள்) | 118,463 | 51,038 |
| விசேட நடவடிக்கைகளிற்காக பெறப்பட்ட நிதிகள் | 1,044,364 | 334,940 |
| புலமைப்பரிசில் நிதியத்திடம் இருந்து பெறுவனவுகள்/ (கொடுப்பனவுகள்) | 2,241,895 | 1,443,445 |
| **நிதியிடல் நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **5,059,720** | **26,423,153** |
| **தேறிய காசுப்பாய்ச்சல்** | **(2,580,817)** | **(6,967,590)** |
| 2011-12-31 இல் உள்ளவாறான காசு | 17,336,628 | 24,364,445 |
| **2011-12-31 இல் உள்ளவாறான காசு** குறிப்பு 1 | **14,755,811** | **17,396,855** |

**குறிப்பு 1**

| | | |
|---|---|---|
| இலங்கை வங்கி -2323284 | 8,879,569 | (7,456,436) |
| இலங்கை வங்கி- வெளிநாட்டுச் செயற்திட்டங்கள் | 277,940 | 277,940 |
| இலங்கை வங்கி –பல்கலைக்கழக புலமைப்பரிசில் நிதியம் | 5,598,302 | 4,677,814 |
| குறுகிய கால வைப்புக்களில் முதலீடுகள் | - | 19,837,310 |
| | **14,755,811** | **17,336,628** |

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## உரிமை மூலதனத்திலுள்ள மாற்றங்கள் கூற்று

**2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது**

| | மீள்மதிப்பு மிகை | இருந்த மிகைகள்/ (பற்றாக்குறை) | ரூபா மொத்தம் |
|---|---|---|---|
| 2011 சனரி 31 இல் உள்ளவாறான மீதி | 515,365,273 | (30,413,947) | 484,951,326 |
| பெறுமானத் தேய்விற்கான சீராக்கல் | (5,184,568) | 5,184,568 | - |
| தொடர்புபட்ட சொத்துக்களின் கைதவிர்ப்பு மீதான கழிவு | (866,938) | - | (866,938) |
| ஆண்டிற்கான மிகைகள் / (பற்றாக்குறை) | - | (4,226,165) | (4,226,165) |
| 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 509,313,767 | (29,455,544) | 479,858,223 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனதுஇல / MyNo. சீஈ/பீ/யூஜீசீ/எப்ஏ/2011

ඔබේ අංකය / உமது இல / No.

දිනය / திகதி / Date 2012 செப்தெம்பர் 05

தலைவர்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12(5) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும், ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12(1) ஆம் பிரிவு, மற்றும் (4) மற்றும் (7) ஆம் உபபிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
දුරකථනය / தொலைபேசி / Telephone. 0112887028 -34

இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223

No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

உரிமை ஒப்படைக்கப்படாத காணிகளும் கட்டிடங்களும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால முறையே ரூபா 450 மில்லியன் மற்றும் ரூபா 51.3 மில்லியனுக்கு மீள்மதிப்புச் செய்யப்பட்டு கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன.

#### 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் முதலியவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 89 ஆம் பிரிவு, 1958 இன் 15 ஆம் இலக்க சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 47 ஆம் பிரிவு, 1988 இன் 47 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் திருத்திய அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு | 2004 ஆம் ஆண்டிலிருந்து 2011 மே 11 ஆந் திகதி வரை பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களினால் செலுத்தப்பட்ட ரூபா 2,783.70 மில்லியன் தொகையான கல்விசார் படிகளிலிருந்து அண்ணளவாக சேமலாபநிதியத்திற்கும் ஓய்வூதிய நிதியத்திற்கும் ரூபா 466.07 மில்லியன் தொகையும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 93.22 மில்லியனும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் |

| | |
|---|---|
| | அப்பணத்தினை அறவீடு செய்வதற்கு அல்லது எதிரீடு செய்வதற்கு 2012 யூலை 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக பொது முயற்சிகள் தொடர்பான குழு தெரியப்படுத்தியுள்ளது என தலைவர் தெரிவித்திருந்தார். |
| (ஆ) 1998 மார்ச் 06 ஆந் திகதிய அரசாங்க முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் பீஈ/1/174/11(பீ) ஆம் இலக்க மற்றும் 2002 ஒக்டோபர் 25 ஆந் திகதிய பீடீ/பீஈ1/174/11 ஆம் இலக்க சுற்றுநிருப கடிதம் | சுற்றுநிருப அறிவுறுத்தல்களுக்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றின் உத்தியோகத்தர்களுக்கு 2004 ஆம் ஆண்டிலிருந்து 2011 திசெம்பர் 31 வரை ரூபா 120 மில்லியன் தொகை மொழித்தேர்ச்சிப் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணனி துணைக்கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக தனியான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) நிதிப்பிரமாணம் 71 மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.10 ஆம் பந்தி | சுற்றுநிருப அறிவுறுத்தல்களுக்கு முரணாக பணி ஒப்படைப்பு அடிப்படையில் நான்கு இலிகிதர்களும் ஒரு நிறைவேற்று உத்தியோகத்தரும் சேர்த்துக்கொள்ளப்பட்டு 2011 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,845,267 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான தாபனவிதிக் கோவையின் viii ஆம் அத்தியாயத்தின் 10.1 ஆம் பந்தி மற்றும் 1997 பெப்ரவரி 03 ஆந் திகதிய 07/97 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் | 1997 ஏப்ரல் 01 ஆந் திகதி வழங்கப்பட்ட 707 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றுநிருபத்தின் பிரகாரம் 4 மணித்தியாலங்கள் படி 02 நாட்கள் வேலைசெய்து விடுமுறைப்படியாக 2011 ஆம் ஆண்டிற்காக மாத்திரம் ரூபா 38,369 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் UGC/832/8.4 ஆம் இலக்க ஆணைக்குழு தீர்மானத்தின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்புப் பிரிவின் நிறைவேற்று உத்தியோகத்தருக்கு |

| | |
|---|---|
| | மாத்திரம் மணித்தியால விகிதத்தில் ரூபா 72,042 தொகை வார இறுதி மற்றும் விடுமுறை தினப்படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) நி.பி 502(2) மற்றும் 1980 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | தொடர்புபட்ட நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மீண்டுவரும் செலவுகளுக்கான அரசாங்க மானியத்தினை கணக்கிலெடுத்துக்கொள்வதற்கு முன்னர் ரூபா 645,129,626 பற்றாக்குறையினை விளைவித்திருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான தொடர்புபட்ட பற்றாக்குறை ரூபா 560,366,616 ஆக இருந்தது. மீண்டுவரும் செலவுகளுக்காகக் கிடைத்த ரூபா 640,903,460 தொகையான மானியத்தினை கணக்கிற்கு எடுத்துக்கொண்டதன் பின்னர் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 4,266,165 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளுக்காகக் கிடைத்த ரூபா 570,337,259 தொகையான அரசாங்க மானியத்தினை கணக்கிற்கு எடுத்துக்கொண்டதன் பின்னர் ரூபா 9,970,643 தொகை மிகையாகக் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2008/2009, 2009/2010, மற்றும் 2010/2011 கல்வி ஆண்டுகளின் போது பல்கலைக்கழகங்களுக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின்

எண்ணிக்கை மற்றும் மீண்டுவரும் செலவுகளின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| | 2008/2009 | 2009/2010 | 2010/2011 |
|---|---|---|---|
| பல்கலைக்கழகங்களுக்கு தகமைகளைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை | 130,236 | 125,284 | 142,516 |
| பல்கலைக்கழகங்களுக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | 20,846 | 21,547 | 22,016 |
| பல்கலைக்கழகங்களுக்குத் தகமைகளைப் பெற்ற மாணவர்களில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட அளவு சதவீதமாக | 16% | 17% | 15% |

| | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட மீண்டுவரும் செலவு (ரூபா '000) | 10,227,920 | 10,865,900 | 122,961,095 |
| மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | 71,471 | 73,398 | 77,640 |
| ஒரு மாணவனுக்கான சராசரி மீண்டுவரும் செலவு (ரூபா '000) | 143,105 | 148,040 | 166,938 |

## 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

### (அ) செயற்பாடற்று இருக்கும் புலமைப்பரிசில் நிதியம்

மீளாய்வாண்டின் இறுதியில் 87 பங்களிப்புச் செய்யும் புலமைப் பரிசில் நிதியங்கள் காணப்பட்டதுடன் அக்கணக்குகளின் மீதி ரூபா 18,334,472 ஆக இருந்தது. இந்த நிதியங்களில் 15 மாத்திரம் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் 2011 ஆம் ஆண்டின் போது 51 புலமைப் பரிசில்கள்

வழங்கப்பட்டிருந்தன. மிகுதியாகவுள்ள ரூபா 7,993,323 தொகையான (43%) நிதி செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது.

**(ஆ) தெரிவுசெய்யப்பட்ட 6 பல்கலைக்கழகங்களை உலக தரத்திலுள்ள பல்கலைக்கழகம் வரை உயர்த்துதல்**

---

ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்குமாக ரூபா 100 மில்லியன் படி பேராதனை, மொறட்டுவை, கொழும்பு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர, களணி மற்றும் ருகுணு பல்கலைக்கழகங்களுக்காக ரூபா 600 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இதில் ரூபா 173.5 மில்லியனாகிய 29% மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்களினால் எதுவித பணமும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(இ) தலைமைத்துவ சாத்திய சிந்தனை அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

---

2011 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழக ஆணைக்குழுவினால் உயர்கல்வி அமைச்சிற்கு பல்கலைக்கழகத்திற்கு தகைமை பெற்ற புதிய மாணவர்களின் தலைமைத்துவ பயிற்சி மற்றும் சாத்திய சிந்தனை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 199.7 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தும் அந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 185.1 மில்லியன் மாத்திரமே செலவு செய்யப்பட்டிருந்தது. ரூபா 14.6 மில்லியன் தொகையான எஞ்சிய பணத்தினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பொறியியல் பீடத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிறுவுதல்**

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தினை ஸ்தாபிப்பதற்காக ஆரம்பத்திட்டத்தினைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட பேராசிரியர் ஒருவருக்கு 2010 நவம்பர் மாதத்திலிருந்து 2011 யூலை வரை ரூபா 730,552 தொகை செலுத்தப்பட்டிருந்தும் அதன் செயலாற்றல் அறிக்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கிடைத்திருக்கவில்லை. 2012 யூன் 30 ஆந் திகதி வரை அவ்வாறான

பீடம் ஒன்றினை பல்கலைக்கழகத்தில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ஆணைக்குழுவின் வளங்கள்

---

1997 சனவரி 24 ஆந் திகதிய 116 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.4 ஆம் பந்திக்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2011 ஆம் ஆண்டின் போது 04 ஊழியர்கள் படி ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு அந்த உத்தியோகத்தர்களுக்கு சம்பளமாக ரூபா 599,122 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) மூலதன நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்

(இ) ஆட்சேர்ப்பு

ஒப்பம் :- எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*Nr/Sd*

**2011 டிசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கணக்குகள் மீதான கணக்காய்வுத் தலைமையதிபதியின் அறிக்கை**

| | கணக்காய்வுத் தலைமையதிபதியினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | பதிலும் அவதானிப்பும் | எடுத்த நடவடிக்கையும் தற்போதைய நிலையும், அபிவிருத்தியும். |
|---|---|---|---|
| 2.2 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**<br><br>**2.2.1**<br><br>**கணக்கீட்டுக்கொள்கைகள்** | உரிமை ஒப்படைக்கப்படாத காணிகளும் கட்டடங்களும் பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் முறையே ரூபா 450 மில்லியன் மற்றும் ரூபா 51.3 மில்லியனுக்கு மீள்மதிப்புச் செய்யப்பட்டு கணக்குகளில் காட்டப்பட்டிருந்தன. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அமைந்துள்ள காணியின் உறுதியினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இன்று வரை எடுத்துள்ள நடவடிக்கை கீழே தரப்பட்டுள்ளது.<br><br>• காணி தொடர்பாக அடிப்படை அளவீட்டு நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளதுடன் அவை தொடர்பாக 23.04.2012 ம் திகதியுடைய 9191ஆம் இலக்க ஆய்வுத் திட்டம் (Survey Plan) எடுக்கப்பட்டுள்ளது.<br>• சொத்துக்களின் உரிமை தொடர்பாக 27.04.2012 ம் திகதி பிரதேச செயலாளருக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பம் 17.06.2012 ம் திகதி மாகாண காணி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது அந்த விண்ணப் பத்திற்கிணங்க மாகாண ஆணையாளர் மேற்குறித்த காணியை நீண்ட கால வரி அடிப்படைமுறையில் பெற்றுத் தருவதற்கு 29.08.2012 ம் திகதி மேல்மாகாண அமைச்சரவையின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது.<br>• காணியின் சொத்துரிமை தொடர்பாக உயர்கல்வி அமைச்சினால் அமைச்சரவையின் அனுமதிக்காக அமைச்சரவைப் பத்திரம் அனுப்பப்பட்டுள்ளது. |

| | **கணக்காய்வுத் தலைமையதிபதியினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள்** | **பதிலும் அவதானிப்பும்** | **எடுத்த நடவடிக்கையும் தற்போதைய நிலையும், அபிவிருத்தியும்** |
|---|---|---|---|
| 2.2.2 **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**<br><br>**சட்டங்கள், விதிகள், முதலியவற்றுக்கான தொடர்பு**<br><br>(அ) 1978இன் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 89ஆம் பிரிவு 1958 இன் 15ஆம் இலக்க சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 47ம் பிரிவு,1988இன் 47ம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அதிகாரச் சட்டத்தின் 16(2)ஆம் பிரிவு | அவதானிக்கப்பட்ட<br><br>சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கீழே தரப்படுகின்றன.<br><br>**இணக்கமின்மைகள்**<br><br>2004ஆம் ஆண்டிலிருந்து 2011 மே 11ஆந் திகதிவரை பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களினால் செலுத்தப்பட்ட ரூபா 2,783.70 மில்லியன் தொகையான கல்விசார் படிகளிலிருந்து அண்ணளவாக சேமலாப நிதிக்கும் ஓய்வூதிய நிதியத்திற்கும் ரூபா 466.07 மில்லியன் தொகையும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 93.22 மில்லியனும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அப்பணத்தினை அறவீடு செய்வதற்கு அல்லது எதிரீடு செய்வதற்கு 2012 யூலை 30ஆந்திகதி வரை நடவடிக்கை எடுக்கப பட்டிருக்கவில்லை. இது | “உழைப்புக்கள்” என்ற பதத்திற்குள் கல்விப்படி உள்ளடக்கப்பட முடியாது என்ற நீதியரசர்களின் கருத்துக்கிணங்க பணிக் கொடைப்படி, ஊழியர் நம்பிக்கை நிதி, பல்கலைக்கழக சேமலாப நிதி, இளைப்பாற்றுச் சம்பள நிதி என்பன கணிப்பிடும் போது கல்விப்படி கணக்கு எடுக்கக்கூடாது என்று 23.03.2011 ம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டது. | ஆணைக்குழு சுற்றறிக்கை 703 (04.03.1997) தாபன சுற்றறிக்கைக் கடிதம் 8/1997<br><br>(1997/03.03) மூலம் கல்விப்படி கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.<br><br>2005 /01/12 ந் திகதியுடைய தொழில் ஆணையாளரின் கட்டளைக்கிணங்க உழைப்புக்களில் 30%கல்விப்படி உள்ளடங்கக்கூடாது என அறிவித்துள்ளனர்.<br><br>மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை 955 க்கு இணங்க தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கிணங்க பல்கலைக்கழக சேமலாப நிதிஇ ஊழியர் நம்பிக்கை நிதி என்பன கணிப்பிடும் போது 30% கல்விப்படி 2011.05.01 இல் இருந்து நீக்கப்பட்டுள்ளது.<br><br>2011 .05.05 ம் திகதி நடைபெற்ற பொது முயற்சிக் குழு கூட்டத்திலும் 30% படியினால் கூடுதலாகக் கணிக்கப்பட்டு செலுத்திய தொகையைக் கழிப்பதற்கு நடைமுறையொன்றினைத் தயாரிக்கும் படி கேட்கப்பட்டுள்ளது.<br><br>2011.02.19ந் திகதி நடைபெற்ற பல்கலைக்கழகமானிய ஆணைக்குழுவின் கூட்டத்தில் திரும்பவும் அறவிடுதல் சாத்தியப்படாது என்று 2012 05.02 ந் திகதி கடித மூலம் பொது முயற்சிக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | கணக்காய்வுத் தலைமையதிபதியினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | பதிலும் அவதானிப்பும் | எடுத்த நடவடிக்கையும் தற்போதைய நிலையும், அபிவிருத்தியும் |
|---|---|---|---|
| | தொடர்பாக பொது முயற்சிகள் தொடர்பான குழு தெரியப்படுத்தியுள்ளது. என தலைவர் தெரிவித்திருந்தார். | | |
| **(ஆ)**1998 மார்ச் 06ஆந்திகதிய அரசாங்க முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் பீஈ/1/ 174 /11(பீ) ஆம் இலக்க மற்றும் 2002 ஒக்டோபர் 25ஆந்திகதிய பீடீ/ பீஈ/1/ 174 /11 ஆம் இலக்க சுற்று நிருப கடிதம் | சுற்றுநிருப அறிவுறுத்தல்களுக்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு , பல்கலைக்கழகங்கள் உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றின் உத்தியோகத்தர்களுக்கு 2004ஆம் ஆண்டிலிருந்து 2011 டிசம்பர் 31 வரை ரூபா 120 மில்லியன் தொகை மொழித்தேர்ச்சிப் படியாக செலுத்தப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக சேவையில் 2003.01.01 ம் திகதிக்கு பின்பு சேர்ந்தோர்க்கு மொழித் தேர்ச்சிப்படி வழங்கப்படுவதில்லை. இத்தினத்திற்கு முன்பு சேர்ந்தோர்க்கு செலுத்தப்படுகிறது. மொழித் தேர்ச்சி கொடுப்பனவு சீர் செய்யப்படுவதற்கு அமைச்சரவைப் பத்திரமொன்று 25.02.2010ந் திகதியன்று சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. | அமைச்சரவை உபகுழுவினால் அது தொடர்பாக<br><br>பரிசீலித்து சிபார்சு சமர்ப்பிக்கும்படி விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.<br><br>இக்குழுத்தலைவர் (தாபனப்பணிப்பாளர் நாயகம்) 22.05.2012 ம் திகதி கடிதமூலம் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சிபார்சினை அமைச்சரவை உப குழுவிற்கு அனுப்பி வைப்பதாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர்க்கு அறிவித்துள்ளனர். |
| **(இ)** 2002 நவம்பர் 28ஆந் திகதிய IAI/2001/02 ஆம் இலக்க சுற்று நிருபம | சுற்று நிருபத்தின் பிரகாரம் கணனி துணைக்கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான தனியான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.க | விதப்புரைகளை ஏற்றுக்கொள்கிறோம். | தற்போது கணனிகள் தொடர்பாக தனியான நிலையான சொத்துப்பதிவேடு பேணப்படாததுடன் 2012 ஆம் ஆண்டின் திறைசேரிச்சுற்றறிக்கைக்கிணங்க புதிய நிலையான சொத்துப்பதிவேடு பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | ணக்காய்வுத் தலைமையதிபதியினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள | பதிலும் அவதானிப்பும் | எடுத்த நடவடிக்கையும் தற்போதைய நிலையும், அபிவிருத்தியும் |
|---|---|---|---|
| **(ஊ)** நிதிப்பிரமாணம் 71 மற்றும் 2003 யூன் 02ந்திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் 9.10 ஆம் பந்தி | சுற்றுநிருப அறிவுறுத்தல்களுக்கு முரணாக பணி ஒப்படைப்பு அடிப்படையில் நான்கு இலிகிதர்களும் ஒரு நிறைவேற்று உத்தியோகத்தரும் சேர்த்துக்கொள்ளப்பட்டு 2011ஆம் ஆண்டிற்காக ரூபா 1,845,267 தொகை சம்பள்மாக செலுத்தப்பட்டிருந்தது | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2008 ம் ஆண்டுக்கான அனுமதிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கைக்கிணங்க நிரந்தர நியமனங்கள் செய்யும் செய்யும் வரை அவசியமான தேவைகளுக்காக ஆணைக்குழுவின் அனுமதியுடன் பின்வரும் பதவியினர் ஒப்பந்த அடிப்படை முறையில் நியமிக்கப்பட்டனர்.<br><br>சி.உ.செயலாளர் 01(11மாதங்கள்)<br>எழுதுவினைஞர். 01(4மாதங்கள்)<br><br>கணக்குப்பதிவாளர் 01(4மாதங்கள்)<br><br>தொழிலாளி 01(8மாதங்கள்) | ஒப்பந்த அடிப்படை முறையில் நியமிக்கப்பட்ட 4 ஊழியர்களினதும் பதவி உத்தியோகத்தரது நியமனங்கள் சம்பளக் கொடுப்பனவு தொடர்பாக பொதுத்திறைசேரியின் அனுமதியை பெறுவதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.<br><br>இன்னும் அதற்கான அனுமதி கிடைக்கப்பெறவில்லை. |
| **உ)** அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான தாபனவிதிக் கோவையின் v111 ஆம் அத்தியாயத்தின் 10.1 ஆம் பந்தி மற்றும் 1997 பெப்ரவரி 03 ஆந்திகதிய 07/97ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்று நிருபம். | 1997 ஏப்ரல் 01ந்திகதி வழங்கப்பட்ட 707ம் சுற்று நிருபத்தின் பிரகாரம் 4 மணித்தியாலங்கள் படி 02 நாட்கள் வேலை செய்து விடுமுறைப்படியாக 2011ஆம் ஆண்டிற்காக மாத்திரம் ரூபா 38,369 | அமைச்சுக்களினதும் அமைச்சுக்களின் கீழ் உள்ள திணைக்களங்களினாலும் வெறியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள் சுற்றறிக்கைக் கடிதங்களில் கூறப்பட்ட தீர்மானங்கள் அறிவுரைகள் என்பவற்றை | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரவேச கிளையின் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகிற காலத்தில் அவசியமாக அலுவலக கடமைகளுக்காக கொடுப்பனவு செய்ய வேண்டி ஏற்பட்டது. இது ஒரு விசேட சந்தர்ப்பமாக கருதப்பட்டு மேற்குறித்த சுற்றறிக்கையின் அடிப்படையில் வைத்து துணைக்குழுவின் அனுமதியுடன் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |

| | கணக்காய்வுத் தலைமையதிபதியினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள | பதிலும் அவதானிப்பும் | எடுத்த நடவடிக்கையும் தற்போதைய நிலையும், அபிவிருத்தியும் |
|---|---|---|---|
| | தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் UGC/832/8.4 ஆம் இலக்க ஆணைக்குழு தீர்மானத்தின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்புப்பிரிவின் நிறைவேற்று உத்தியோகத்தருக்கு மாத்திரம் மணித்தியால விகிதத்தில் ரூபா 72,042 தொகை வார இறுதி மற்றும் விடுமுறை தினப்படியாக செலுத்தப்பட்டிருந்தது. | பல்கலைக்கழகங்கள் சட்டங்களுக்கு முரணாகாத வகையில் அவற்றினை பின்பற்றுவதற்கோ நடைமுறைப்படுத்துவதற்கோ<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரமுள்ளதாக நீதிபதியினால்<br><br>அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br><br>ஆதலால் பல் கலைக்கழகத்துறைக்கு இதுதொடர்பான சுற்றறிக்கை வெளியிடும் போது அரச நிருவாக அமைச்சினதோ அல்லது முகாமைச் சேவை திணைக்களத்தினதோ அனுமதி தேவை என்பது இங்கு தோன்றவில்லை. | |
| **ஊ)** நி.பி 502(2) மற்றும் 1980 டிசம்பர் 19ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்று நிருபம். | தொடர்புபட்ட நிதிப்பிரகாரத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களை ஏற்க முடியாதுள்ளது. | நிலையான சொத்துக்கள் தொடர்பாக தனியான பதிவேடு பேணப்படுவதுடன் அது நிததப்பிரமாணம் 502.2ற்கு இணங்க திரும்பவும் தயாரிக்கப்பட்டு 2012ம் வருடத்திலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | கணக்காய்வுத் தலைமையதிபதியினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | பதிலும் அவதானிப்பும் | எடுத்த நடவடிக்கையும் தற்போதைய நிலையும், அபிவிருத்தியும |
|---|---|---|---|
| **3. நிதி மீளாய்வு**<br><br>**3.1 நிதி விளைவுகள்** | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2011 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மீண்டுவருஞ் செலவினங்களுக்கான அரசாங்க மானியத்தினை கணக்கிலெடுத்துக்கொள்வதற்கு முன்னர் ரூபா 645,129,626 பற்றாக் குறையினை விளைவித்திருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான தொடர்புபட்ட பற்றாக்குறை ரூபா 560,366,616 ஆக இருந்தது. மீண்டு வருஞ் செலவுகளுக்கு கிடைத்த ரூபா 640,903,460 தொகையான மானியத்தினை கணக்கிற்கு எடுத்துக்கொண்டதன் பின்னர் மீளாய்விற்கான பற்றாக்குறை ரூபா 4,266, 165 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கான மீண்டுவருஞ் | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கிறோம். | |

| | கணக்காய்வுத் தலைமையதிபதியினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | பதிலும் அவதானிப்பும் | எடுத்த நடவடிக்கையும் தற்போதைய நிலையும், அபிவிருத்தியும |
|---|---|---|---|
| | செலவுகளுக்காக கிடைத்த ரூபா 570,337,259 தொகை யான அரசாங்க மானியத்தினை கணக்கிற்கு எடுத்துக் கொண்டதன் பின்னர் ரூபா 997,643 மிகையாகக் காணப்பட்டது. | | |
| **4.செயற்பாட்டு மீளாய்வு**<br><br>**4.1 செயலாற்றல்**<br><br>**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**<br><br>அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2008/2009, 2009/2010 மற்றும் 2010/2011 கல்வி ஆண்டுகளின் போது சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் மீண்டுவருஞ் செலவுகளின் பொழிப்பு கீழே தரப்படுகிறது. | பல்கலைக்கழகங்களுக்கு தகைமைகளைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை<br><br>2008/2009 - 130,236<br><br>2009/2010 - 125,284<br><br>2010/2011 - 142,516<br><br>பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக் | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கிறோம். | பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை தகுதி பெற்ற மாணவர்களுடன் ஒப்பிடுவதை விட பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்த மாணவர்களின் தொகையுடன் ஒப்பிடுவது பொருத்தமானதாகும். |

| | கணக்காய்வுத் தலைமையதிபதியினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | பதிலும் அவதானிப்பும் | எடுத்த நடவடிக்கையும் தற்போதைய நிலையும், அபிவிருத்தியும |
|---|---|---|---|
| | கொள்ளப்படுவதற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை<br><br>பல்கலைக்கழகங்களுக்கு தகைமைகளைப் பெற்ற மாணவர்களில் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட அளவு சதவீதமாக<br><br>2008/2009 - 16%<br>2009/2010 - 17%<br>2010/2011 - 15%<br>மேற்கொள்ளப்பட்ட மீண்டுவருஞ் செலவு (ரூ:000)<br><br>2009 – 10,227,920<br>2010 - 10,865,900<br>2011 - 122,961,095<br>மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | | |

| | கணக்காய்வுத் தலைமையதிபதியினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | பதிலும் அவதானிப்பும் | எடுத்த நடவடிக்கையும் தற்போதைய நிலையும், அபிவிருத்தியும் |
|---|---|---|---|
| \ <br><br> **4.2முகாமைத்துவ செயற்றிறனின்மை** <br><br> (அ)செயற்பாடற்று இருக்கும் புலமைப்பரிசில் நிதியம் | 2009 – 77,471<br>2010 - 73,398<br>2011 - 77,640<br><br>ஒரு மாணவனுக்கான சராசரி மீண்டுவருஞ்செலவு<br><br>2009 – 143,105<br>2010 - 148,040<br>2011 - 166,938<br><br>மீளாய்வாண்டின் இறுதியில் 87 பங்களிப்புச் செய்யும் புலமைப்பரிசில் நிதியங்கள் காணப் பட்டதுடன் அக்கணக்கு களின் மீதி ரூபா 18,334,472 ஆக இருந்தது. இந்த நிதியங்களில் 15 மாத்திரம் செயற் பாடற்றுக் காணப பட்டதுடன் 2011 ஆம் ஆண்டின் போது 51 புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டிருந்தன. மிகுதியாகவுள்ள ரூபா 7,993,323 தொகையான (43%) நிதி செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கிறோம். | புலமைப் பரிசில் நிதி பயன்படுத்தாமைக்கு பிரதான காரணம் கணக்கு மீதிகளுக்கு கிடைக்கிற வருமானம் புலமைப் பரிசில் வழங்குவதற்கு போதமானதாக இருப்பதில்லை.அதலால் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இதற்கென தனியாக புலமைப் பரிசில் நிதியம் ஒன்று ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவற்றுக்கான ஆரம்ப நடவடிக்கை முடிவடைந்துள்ளதுடன் அந்த புலமைப் பரிசில் உரித்தாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2012 ம் வருடத்தில் அந்த நிதியம் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | கணக்காய்வுத் தலைமையதிபதியினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள | பதிலும் அவதானிப்பும் | எடுத்த நடவடிக்கையும் தற்போதைய நிலையும், அபிவிருத்தியும் |
|---|---|---|---|
| (ஆ)தெரிவு செய்யப்பட்ட 6 பல்கலைக்கழகங்களை உலக தரத்திலுள்ள பல்கலைக்கழகம் வரை உயர்த்துதல் | ஓவ்வொரு பல்கலைக் கழகத்திற்குமாக ரூபா 100 மில்லியன் படி பேராதனை, மொரட்டுவ, கொழும்பு, ஸ்ரீ ஐயவர்த்தனபுர, களனி மற்றும் ரூகுணு பல்கலைக்கழகங்களுக்காக ரூபா 600 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் 2011 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இதில் ரூபா 173.5 மில்லியனாகிய 29% மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் ஸ்ரீ ஐயவர்த்தன புர பல்கலைக்கழகம் மற்றும் பேராதனைப் பல்கலைக் கழகங்களினால் எதுவித பணமும் பயனபடுத்தப் படவில்லை. | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்ள முடியவில்லை<br><br>பெற்றுக்கொள்ளப்பட்ட முன்னேற்ற அறிக்கைக்கிணங்க இத்திட்டத்திற்கு 177 மில்லியன் ரூபா பொதுத்திறைசேரியினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, மீகுதி ஒதுக்கீடு 423மில்லியன் ரூபா திறைசேரியினால் ஒதுக்கீடு செய்யப்படாததுடன் 2011ஆம் ஆண்டின் முடிவில் அந்த நிதி ஒதுக்கீடு பாவிக்க முடியாத படியால் அது அடுத்த வருடத்திற்கு கொண்டு செல்ல முடியாது. பொதுத்திறைசேரியிலிருந்து கிடைத்த நிதி பல்கலைக்கழகத்தினால்முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது, | <u>**பேராதனைப் பல்கலைக்கழகம்**</u><br><br>பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு எவ்வித நிதியும் பொதுத்திறைசேரியிலிருந்து கிடைக்காத படியால் பல்கலைக்கழக நிதியிலிருந்து 4-5 மில்லியன் ரூபா பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒதுக்கீடு தொடர்பாக வழங்கப்பட்ட 100 மில்லியன் ரூபாவுக்கு திட்டம் உரிய முறையில் அனுமதி பெறப்படாததால் நிதி ஒதுக்கீடு செய்ய முடியவில்லை. அது அப்பல்கலைக்கழகத்தின் தாமதம் என்று தான் கூற வேண்டும்.<br><br><u>**மொறட்டுவப் பல்கலைக்கழகம்**</u><br><br>மொறட்டுவப் பல்கலைக்கழகத்திற்கு ரூபா 100 மில்லியன் பொதுத்திறைசேரியினால் வழங்கப்படுள்ளதுடன் 63.43% வேலை முடிக்கப்பட்டுள்ளது. மிகுதி வேலை 2012ஆம் ஆண்டு முடிக்கப்பட்டுள்ளது,<br><br><u>**கொழும்புப் பல்கலைக்கழகம்**</u><br><br>ரூபா 52 மில்லியன் பொதுத்திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழக நிதியத்திலிருந்து ரூபா 23 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. மீதியான 48 மில்லியன் ரூபா திறைசேரியிலிருந்து கிடைத்துள்ளது. அதற்கிணங்க பொதுத்திறைசேரியிலிருந்து கிடைத்த நிதி 100% பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் 75% வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதினால் குறைவாகப்பயன்படுத்தப்பட்டுள்ளது என்று கூறுவது பொருத்தமற்றது. |

| | கணக்காய்வுத் தலைமையதிபதியினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள | பதிலும் அவதானிப்பும் | எடுத்த நடவடிக்கையும் தற்போதைய நிலையும், அபிவிருத்தியும் |
|---|---|---|---|
| | | | **<u>ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்</u>**<br><br>ரூபா 5 மில்லியன் பொதுத்திறைசேரியிலிருந்து வழங்கப்பட்டள்ளதுடன் பல்கலைக்கழக நிதியத்திலிருந்து ரூபா 6.63 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன் ரூபா 95 மில்லியன் பொதுத்திறைசேரியிலிருந்து வழங்கப்படவில்லை. ஆதலால் குறைவாகப்பயன்படுத்தப்பட்டுள்ளது என்று கூறுவது பொருத்தமற்றது.<br><br>**<u>களனிப் பல்கலைக்கழகம்</u>**<br><br>ரூபா 10 மில்லியன் பொதுத்திறைசேரியிலிருந்து வழங்கப்பட்டள்ளதுடன் பல்கலைக்கழக நிதியத்திலிருந்து ரூபா 51.20 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.<br><br>ரூபா 10 மில்லியனில் 100% பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் மிகுதி 90 மில்லியன் ரூபா பொதுத்திறைசேுரியிலிருந்து கிடைக்கவில்லை.<br><br>ஆதலால் குறைவாகப்பயன்படுத்தப்பட்டுள்ளது என்று கூறுவது பொருத்தமற்றது<br><br>**<u>றுகுணு பல்கலைக்கழகம்</u>**<br><br>றுகுணு பல்கலைக்கழகத்திற்கு 10 மில்லியன் ரூபா கிடைத்துள்ளதுடன் மிகுதி நிதியான 90 மில்லியன் ரூபா 2011 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியிலிருந்து வழங்கப்படவில்லை. பல்கலைக்கழக நிதியத்திலிருந்து ரூபா 72.68 மில்லியன் செலவிடப்பட்டு திட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அது 82.5 % முன்னேற்றத்தைக் காட்டுகிறது. இது குறைவாக ப்பயன்படுத்தியுள்ளது என்பது கூறமுடியாது. |

| | கணக்காய்வுத் தலைமையதிபதியினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | பதிலும் அவதானிப்பும் | எடுத்த நடவடிக்கையும் தற்போதைய நிலையும், அபிவிருத்தியும் |
|---|---|---|---|
| இ) தலைமைத்துவ சாத்திய சிந்தனை அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம். | 2011ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழக ஆணைக்குழுவால் உயர்கல்வி அமைச்சிற்கு பல்கலைக்கழகத்திற்கு தகைமை பெற்ற புதிய மாணவர்களின் தலைமைத்துவ பயிற்சி மற்றும் சாத்திய சிந்தனை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 199.7 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தும் அந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 185.1மில்லியன் மாத்திரமே செலவு செய்யப்பட்டிருந்தது. ரூபா 14.6மில்லியன் தொகையான எஞசிய பணத்தினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கிறோம்.<br><br>இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக 199.7 மில்லியன் ரூபா உயர் கல்வி அமைச்சினால் செலவிடப்பட்டுள்ளதுடன் சகல கொள்வனவுகள் கொள்வனவு நடைமுறைக் கிணங்க உயர்கல்வி யமைச்சினால்செய்யப் பட்டுள்ளது. அதற்கிணங்க மீகுதி நிதியாக குறிப்பிடப்பட்ட 14.6 மில்லியனட ரூபா உயர்கல்வி யமைச்சின் வைப்புக்கணக்கில் வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மிகுதி நிதியான 14.6 மில்லியன் ரூபா உயர்கல்வி அமைச்சினால் இந்த கருத்திட்டம் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய மிகுதிச் செலவுகளுக்காக வைக்கப்பட்டுள்ளதுடன் அச்செலவுகள் 2012ஆம் ஆண்டில் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது. ஆதலால் மீதியாக நிதிகள் ஒன்றும் இல்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. |
| ஈ) பொறியியல் பீடத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிறுவுதல். | யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத் தில் பொறியியல் பீடத்தினை ஸ்தாபிப்பதற்காக ஆரம்பத்திட்டத்தினை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட பேராசிரியர் ஒருவருக்கு | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கிறோம் | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கிறோம். ஆரம்ப நடவடிக்கைகள் பூர்ததியடைந்துள்ளதுடன் இது தொடர்பாக நிதிகளைப் பெறுவதற்கு இந்திய அரசாங்கத்துடன் உயர்கல்விஅமைச்சு பேச்சுவார்த்தையை மேற்கொண்டு வருகிறது. |

| | **கணக்காய்வுத் தலைமையதிபதியினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள்** | **பதிலும் அவதானிப்பும்** | **எடுத்த நடவடிக்கையும் தற்போதைய நிலையும், அபிவிருத்தியும்** |
|---|---|---|---|
| 4.3 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ஆணைக்குழுவின் வளங்கள் | 2010 நவம்பர் மாதத்திலிருந்து 2011 யூலை வரை ரூபா 730,552 தொகை செலுத்தப்பட்டிருந்தும் அதன் செயலாற்றல் அறிக்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழவிற்கு கிடைத்திருக்கவில்லை. 2012 யூன் 30ந் திகதி வரை அவ்வாறான பீடம் ஒன்றினை பல்கலைக்கழகத்தில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>1997 சனவரி 24ந்திகதிய 116 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபம் மற்றும் 2003 யூன் 02ந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் 9.4 ஆம் பந்திக்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2011 ஆம் அண்டின் | மதிப்புக்குரிய உயர்கல்வி அமைச்சர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும், ஆணைக்குழுவின் அனுமதியுடனும் குறிப்பிட் ஊழியர்கள் உயர்கல்வியமைச்சின் சேவையாற்ற விடுவிக்கப்பட்டுள்ளார்கள். | மதிப்புக்குரிய உயர்கல்வி அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்கவும், ஆணைக்குழுவின் அனுமதியுடனும் இரு தொழிலாளர்கள் உயர்கல்வியமைச்சில் சேவையாற்ற விடுவிக்கப்பட்டுள்ளார்கள். அவற்றில் தொழிலாளர் ஒருவர் உயர்கல்வி அமைச்சில் சேவையாற்றி வருகிறார். தற்போதும் சேவையாற்றி வருகிறார் |

| | கணக்காய்வுத் தலைமையதிபதியினால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் | பதிலும் அவதானிப்பும் | எடுத்த நடவடிக்கையும் தற்போதைய நிலையும், அபிவிருத்தியும் |
|---|---|---|---|
| 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும் | போது 04 ஊழியர்கள் படி ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு அந்த உத்தியோகத்தர்களுக்கு சம்பளமாக ரூபா 599,122 தொகை செலுத்தப்பட்டிருந்தது.<br><br>கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படகிறது.<br><br>அ) கணக்கீடு<br><br>ஆ) மூலதன நிதி ஏற்பாட்டினை பயன்படுத்தல்<br><br>இ)ஆட்சேர்ப்பு | | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு முறைமைகளும் கட்டுப்பாடுகளும் தொடர்பாக மேலும் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. |

# பல்கலைக்கழகங்கள் ஓய்வூதிய நிதியம்

## 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமை

| | குறிப்பு | 2011 | | 2010 | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | | | |
| **முதலீடுகள்** | | | | | |
| திறசேரி முறிகள் | 1 | 601,477,514 | | 607,390,783 | |
| நியையான வைப்புக்கள் | 2 | 1,399,000,000 | **2,000,477,514** | 1,047,000,000 | **1,654,390,783** |
| **நடைமுறைச் சொாத்துக்கள்** | | | | | |
| பெறவேண்டிய பங்களிப்புகள் | 3 | 16,013,582 | | 8,142,722 | |
| பெறவேண்டிய முதலீட்டு வருமானம் | 4 | 234,842,312 | | 158,866,805 | |
| குறுகிய கால வைப்புக்கள் (றீபோஸ்) | | - | | 25,000,000 | |
| காசு மற்றும் காசிற்கு சமமானவை | | 6,929,521 | **257,785,415** | 6,113,601 | **198,123,128** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | | **2,258,262,929** | | **1,852,513,911** |
| **பிரதிநித்ததுவப்படுத்துவது** | | | | | |
| **உறுப்பினர் நிதிகளும் ஓதுக்கங்களும்** | | | | | |
| பங்களிப்பாளர் நிதிகள் | 5 | 1,957,687,424 | | 1,632,542,630 | |
| ஓய்வூதியம் பெறுவோர் நிதிகள் | 6 | 76,114,209 | | 59,972,666 | |
| திரட்டப்பட நிதிகள் மு.செ | | 201,906,600 | **2,235,708,233** | 140,755,201 | **1,833,270,497** |
| **நடைமுறைப்பொறுப்புகள்** | | | | | |
| நில்லறைக் கடன்பட்டோர் | 7 | 105,000 | | 118,239 | |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 8 | 20,051,910 | | 17,016,178 | |
| உறுப்பினர்களிற்கு செலுத்த வேண்டியவை | 9 | 2,397,786 | **22,554,696** | 2,108,997 | **19,243,414** |
| **மொத்தப் பொறுப்புகள்** | | | **2,258,262,929** | | **1,852,513,911** |

# பல்கலைக்கழகங்கள் ஓய்வூதிய நிதியம்

## 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று

| | குறிப்பு | 2011 ரூபா | 2010 ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| முதலீட்டு வருமானம் | 10 | 224,093,091 | 213,474,520 |
| கழி: வருமானவரி | | (18,661,713) | (21,347,452) |
| | | 205,431,378 | 192,127,068 |
| கழி: **செலவினம்** | | | |
| பங்களிப்பாளர் நிதிய வட்டி | | (138,335,257) | (161,561,281) |
| ஓய்வூதியக்கார் நிதிய வட்டி | | (4,583,812) | (5,050,377) |
| ஓய்வூதியக்காருடைய நிதிய சீராக்கல்கள் | 11 | (1,303,638) | (365,290) |
| சில்லறைச் செலவினம் | | (35,000) | (35,000) |
| வங்கிக் கட்டணங்கள் | | (11,568) | (12,277) |
| வருமானத்திற்கான சீராக்கல்கள் | 12 | (10,704) | 2,752 |
| | | (144,279,979) | (167,021,473) |
| செலவிற்கு மேலான வருமானம் | | 61,151,399 | 25,105,595 |
| முன்னைய ஆண்டிலிருந்து முற்கொண்டுவந்த மீதி | | 140,755,201 | 115,649,606 |
| ஐந்தொகைக்கு மாற்றப்பட்ட மீதி | | **201,906,600** | **140,755,201** |

## பல்கலைக்கழகங்கள் ஓய்வூதிய நிதியம்
## 2011 ஆம் ஆண்டிற்கான காசுப்பய்ச்சல்

| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | **நடைமுறை ஆண்டு** | |
|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** |
| வட்டி வருமானம் | | 224,093,091 |
| உறுப்பினர் கணக்குகளிற்கு செலவு வைக்கப்பட்ட வட்டி | | (142,919,068) |
| ஏனைய கொடுப்பனவுகள் | | (46,568) |
| ஓய்வூதியக்காரர் நிதிய சீராக்கல் | | (1,303,638) |
| வருமானத்திற்கான சீராக்கல் | | (10,704) |
| **தொழிற்படு மூலதனத்திற்கு முன்னரான செயற்பாட்டு வருமானம்** | | 79,813,113 |
| | | |
| **சொத்துக்களில் (அதிகரிப்பு)/ வீழ்ச்சி** | | |
| பெறவேண்டிய பங்களிப்பு | (7,870,860) | |
| பெறவேண்டிய வட்டி | (75,975,507) | |
| **பொறுப்புக்களில் (அதிகரிப்பு)/ வீழ்ச்சி** | | |
| கடன்கொடுத்தோர் | (13,239) | |
| உறுப்பினர்களிற்கு செலுத்தவேணடிய கொடுப்பனவுகள் | 288,789 | (83,570,817) |
| **வரிக் கொடுப்பனவிற்கு முன்னரான செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | (3,757,705) |
| செலுத்திய வருமான வரி | | (15,625,982) |
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | | (19,383,687) |
| | | |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| திறைசேரி முறிகளின் கொள்வனவு | 5,913,269 | |
| நிலையான வைப்புக்களின் கொள்வனவு | (352,000,000) | |
| ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 25,000,000 | (321,086,731) |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | | (340,470,418) |
| | | |
| **நிதியிடல் நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| உறுப்பினர்கள் மற்றும் ஓய்வூதியக்காரர் நிதியத்தில் அதிகரிப்பு | | 341,286,338 |
| காசு மற்றும் காசிற்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு | | 815,920 |
| ஆண்டுத் தொடக்கத்தில் காசு மற்றும் காசிற்கு சமமானவைகள் | | 6,113,601 |
| ஆண்டு இறுதியிலுள்ள காசு மற்றும் காசிற்கு சமமானவைகள் | | **6,929,521** |

# විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
# கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
# AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No: சீஈ/பீ/பீஎன்எப்/எப்ஏ/2011

ඔබේ අංකය / உமது இல / Your No.

දිනය / திகதி / Date: 2012 யூலை 19

தலைவர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**பல்கலைக்கழகங்கள் ஒய்வூதிய நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

பல்கலைக்கழகங்கள் ஓய்வூதிய நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12(5) ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka
දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail: oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை பல்கலைக்கழகங்கள் ஓய்வூதிய நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் முதலியவற்றிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1999 ஏப்ரல் 09 ஆம் திகதிய அப/99/0438/11/033 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | i. அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், உத்தியோகத்தர்கள் தொடர்பாக பல்கலைக்கழகங் கள் சேமலாப நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட 25% பங்களிப்புக்களில் 10% ஓய்வூதிய நிதியத்திற்கு செலவு வைக்கப்படவேண்டும். எவ்வாறெனினும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வின் 747 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி தொழில் கொள்வோனால் சேமலாப நிதியத்திற்கு மேற்கொள்ளப்படும் 15 சதவீதப் பங்களிப்பின் 8/15 அளவினை ஒய்வூதிய நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

(ஆ) தொழில் ஆணையாளர் நாயகத்தின் 2005 சனவரி 28 ஆம் திகதிய பா/தாபனம்/2004 ஆம் இலக்கக் கடிதம் மற்றும் 2001 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய 5/ தாபனம் /11 ஆம் இலக்கக் கடிதம்

பல்கலைக்கழக சேமலாப நிதியப் பங்களிப்புக்களின் கணிப்பீட்டின் போதும் பணிக்கொடைக்கான கணிப்பீட்டின் போதும் கல்விசார் படிகள் கருத்தில் கொள்ள வேண்டியதில்லை என தொழில் ஆணையாளர் நாயகம் அறிவித்திருந்தார். எனினும், கல்விசார் படிகள் ஓய்வூதிய நிதிய கணிப்பீட்டிற்காக கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் 2004 ஆம் ஆண்டு முதல் 2011 மே வரை ஓய்வூதிய நிதியத்திற்கு மேலதிகமாக செலவு வைக்கப்பட்ட தொகை ஏறத்தாழ ரூபா 194 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் மிகை, ரூபா 61,151,399 தொகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 25,105,595 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டினைப் பார்க்கிலும் மீளாய்வாண்டில் நிதிசார் விளைவுகளில் ரூபா 36,045,804 தொகையான அதிகரிப்பிற்கு நிலையான வைப்பு வட்டி வருமான அதிகரிப்பு குறிப்பாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1999 செப்தெம்பர் 01 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட நிதியத்தின் மீளாய்வாண்டின் இறுதி வரை ஓய்வூதியம் பெறும் ஓய்வு பெற்றோரின் எண்ணிக்கை 111 ஆனதுடன் அவர்களுக்காக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ஓய்வூதியம் ரூபா

16,867,284 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வு பெற்றோரின் நிதியத்தில் செலவில் உள்ள மீதி ரூபா 76,114,209 ஆனதுடன் அம் மீதியிலிருந்து எதிர்காலத்தில் ஓய்வூதியம் சுமார் 4 1/2 வருட காலத்திற்கு மாத்திரமே செலுத்தக் கூடியதாயிருந்தமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது ஓய்வு பெற்றோரின் தனிப்பட்ட கணக்குகளில் மீதி இல்லாத போது ரூபா 1,303,638 தொகை பதினொரு அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

ஓய்வூதியம் பெறுகையில் 20 வருட சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திராத உத்தியோகத்தர்களுக்கு அவர்களது ஓய்வூதியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ள பங்களிப்புத்தொகையும் வட்டியும் மீளச் செலுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகையில் விண்ணப்பத்தில் குறைபாடுகள் பூர்த்திசெய்யப்பட்டு தீர்க்கப்பட்டதை அடுத்து ஓய்வூதிய விண்ணப்பப் படிவம் ஓய்வூதிய பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட நாளுக்கும் ஓய்வூதியக்காரருக்கு உரித்தான தொகை செலுத்தப்பட்ட நாளுக்கும் இடையே நீண்ட தாமதம் நிலவியமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் நிதியத்தின் தலைவருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) ஓய்வூதியக் கொடுப்பனவு மேற்கொள்ளல்

(ஆ) பங்களிப்புக் கணிப்பீடு

ஒப்பம் :- எச்.ஏ.எஸ் சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

## 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

| விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் | கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் | தற்போதைய நிலைமையும் தற்கால முன்னேற்றமும் |
|---|---|---|---|
| **2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**<br><br>**2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கி ஒழுகாமை**<br><br>(அ) 1999 ஏப்ரல் 09 ஆம் திகதிய அப/99/0438/11/033 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம்<br>. | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், உத்தியோகத்தர்கள் தொடர்பாக பல்கலைக்கழகங் கள் சேமலாப நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட 25% பங்களிப்புக்களில் 10% ஓய்வூதி நிதியத்திற்கு செலவு வைக்கப்படவேண்டும். எவ்வாறெனினும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வின் 747 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி தொழில் கொள்வோனால் சேமலாப நிதியத்திற்கு மேற்கொள்ளப்படும் 15 சதவீதப் பங்களிப்பின் 8/15 அளவினை ஓய்வூதிய நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம் கணக்கீட்டியல் மதிப்பீட்டாளரால் வழங்கப்பட்ட கணக்கீட்டியல் அறிக்கையின்படி, அறிக்கையின் அடிப்படையில் தாபிக்கப்பட்டது. இரண்டு சிபார்சுகள் ஆலோசனையாளர்களால் விதந்துரைக்கப்பட்டன. அமைச்சரவைப் பத்திரம் இரண்டு சிபார்சுகளைத் திருத்தி தயாரிக்கப்பட்டிருந்ததுடன் இதன்படி அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. ஆனால், ஓய்வூதிய முறைமை கணக்கீட்டியல் மதிப்பீட்டு அறிக்கை மூலம் செய்யப்பட்ட சிபார்சுகளின் அடிப்படையில் தாபிக்கப்பட்டிருந்தது. | 1. இந்த விடயம் பிரமாணப்படுத்தும் நோக்கில் அமைச்சரவைப் பத்திரம் 2012 சனவரி 21 சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.<br><br>2. 2012 திசெம்பர் 15 இல் இந்த விடயமானது நிதி அமைச்சு செயலாளருடன் விவாதிப்பதற்கு உயர் கல்வி அமைச்சு செயலாளருக்கு அமைச்சரவை ஆலோசனை வழங்கியிருந்ததுடன் இந்தப் பிரச்சனை தீர்வு காண்பதற்கு அமைச்சரவை உப குழுவிற்கு பொருத்தமான அறிகையொன்றினை சமர்ப்பித்திருந்தது |

| விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் | கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் | தற்போதைய நிலைமையும் தற்கால முன்னேற்றமும் |
|---|---|---|---|
| **(ஆ)**தொழில் ஆணையாளர் நாயகத்தின் 2005 சனவரி 28 ஆம் திகதிய பா.∴தாபனம்.∴2004 ஆம் இலக்கக் கடிதம் மற்றும் 2001 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய 5.∴ தாபனம் ∴11 ஆம் இலக்கக் கடிதம் | பல்கலைக்கழக சேமலாப நிதியப் பங்களிப்புக்களின் கணிப்பீட்டின் போதும் பணிக்கொடைக்கான கணிப்பீட்டின் போதும் கல்விசார் படிகள் கருத்தில் கொள்ள வேண்டியதில்லை என தொழில் ஆணையாளர் நாயகம் அறிவித்திருந்தார். எனினும், கல்விசார் படிகள் ஓய்வூதிய நிதிய கணிப்பீட்டிற்காக கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன.<br><br>இதன் பிரகாரம் 2004 ஆம் ஆண்டு முதல் 2011 மே வரை ஓய்வூதிய நிதியத்திற்கு மேலதிகமாக செலவு வைக்கப்பட்ட தொகை ஏறத்தாழ ரூபா 194 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. | ஓய்வூதிய பங்களிப்புக் கணப்பீடு பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களால் செய்யப்பட்டிருந்ததுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஓய்வூதிய நிதியம் இதில் ஈடுபட்டிருக்கவில்லை.<br><br>பல்கலைக்கழகங்கள் ஓய்வூதிய நிதிய பங்களிப்பு கணப்பீடு பல்கலைக்கழகங்கள் மற்றுமட உயர்கல்வி நிறுவனங்களால் செய்யப்பட்டிருந்ததுடன் ஓய்வூதிய நிதியம் இதில் ஈடுபட்டிருக்கவில்லை.<br><br>2011 ஏப்ரல் 28 ஆந் திகதிய 955 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கையிலும் 2011 மே 01 இலிருந்து கல்விசார் படிகள் ஓய்வூதிய நிதிய பங்களிப்பு கணிப்பீட்டிற்காக நிறுத்தப்பட்டிருக்கவில்லை. | ஓய்வூதிய பங்களிப்புக் கணப்பீடு பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களால் செய்யப்பட்டிருந்ததுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஓய்வூதிய நிதியம் இதில் ஈடுபட்டிருக்காததுடன் இது ஓய்வூதிய நிதியத்தின் கடமையாகவும் இருக்கவில்லை.<br><br>பல்கலைக்கழகங்கள் ஓய்வூதிய நிதிய பங்களிப்பு கணப்பீடு பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களால் செய்யப்பட்டிருந்ததுடன் ஓய்வூதிய நிதியம் பல்கலைக்கழகங்கள் ஓய்வூதிய நிதிய பங்களிப்பு கணப்பீட்டில் ஈடுபட்டிருக்கவில்லை.<br><br>2011 ஏப்ரல் 28 ஆந் திகதிய 955 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கையிலும் 2011 மே 01 இலிருந்து கல்விசார் படிகள் ஓய்வூதிய நிதிய பங்களிப்பு கணிப்பீட்டிற்காக நிறுத்தப்பட்டிருக்கவில்லை.<br><br>திறைசேரி செயலாளரின் ஆலோசனைப்படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2013 சனவரி 08 ஆந்திகதிய 1000 ஆவது ஆணைக்குழச் சுற்றறிக்கையின்படி ஓய்வூதிய நிதிய பங்களிப்பு கணிப்பதற்கு கல்விசார் படியை கவனத்தில் கொள்வதற்கு தீர்மானித்திருந்தது. |

| விடயம் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் | கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் | தற்போதைய நிலைமையும் தற்கால முன்னேற்றமும் |
|---|---|---|---|
| 3. நிதி மீளாய்வு<br><br>3.1 நிதிசார் விளைவுகள் | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் மிகை, ரூபா 61,151,399 தொகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 25,105,595 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டினைப் பார்க்கிலும் மீளாய்வாண்டில் நிதிசார் விளைவுகளில் ரூபா 36,045,804 தொகையான அதிகரிப்பிற்கு நிலையான வைப்பு வட்டி வருமான அதிகரிப்பு குறிப்பாகத் தாக்கமளித்திருந்தது. | உடன்பட்டது. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நிதிசார் விளைவுகளில் செய்யப்பட்ட கருத்துரைகளுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உடன்பட்டது. |
| 4. செயற்பாட்டு மீளாய்வு<br><br>4.1 செயலாற்றல் | 1999 செப்தெம்பர் 01 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட நிதியத்தின் மீளாய்வாண்டின் இறுதி வரை ஓய்வூதியம் பெறும் ஓய்வு பெற்றோரின் எண்ணிக்கை 111 ஆனதுடன் அவர்களுக்காக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ஓய்வூதியம் ரூபா 16,867,284 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வு பெற்றோரின் நிதியத்தில் செலவில் உள்ள மீதி ரூபா 76,114,209 ஆனதுடன் அம் மீதியிலிருந்து எதிர்காலத்தில் காணப்படக்கூடிய பொறுப்புக்களை கவனத்தில் கொள்ளப்படாத போதிலும் சுமார் 4 1.˙.2 வருட காலத்திற்கு மாத்திரமே ஓய்வூதியம் செலுத்தக் கூடியதாயிருந்தமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது ஓய்வு பெற்றோரின் தனிப்பட்ட கணக்குகளில் மீதி இல்லாத போதிலும் ரூபா 1,303,638 தொகை பதினொரு அங்கத்தவர்களுக்கு ஓய்வூதியமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | ரூபா 76,114,209.00 ஆன ஓய்வூதிய செலவு மீதி மற்றும் ரூபா 201,906,000.000 ஆன திரட்டிய வருமானம் ஓய்வூதியகாரர்களிற்க்கு ஓய்வூதிய கொடுப்பனவுகளிற்காக பயன்படுத்த முடியுந்ததுடன இதன்படி ஓய்வூதியக் கொடுப்பனவு இன்னொரு 16 ஆண்டுகளிற்காக செய்யமுடியும். இந்த நிதியத்திற்கு சேர்க்கப்டுகின்ற வட்டியை கருத்திற்கொள்ளும் போது இது ஓய்வூதிய நிதியம் மேலும் பல ஆண்டுகளாக ஓய்வுதியகாரர்களிற்கு செலுத்த முடியுமென அவதானிக்கப்பட்டது. மாதாந்த ஓய்வூதிய கொடுப்பனவுகளிற்கு அவர்கள் தகுதியற்றவர்களாயின் உறுப்பினர்களிற்கு மொத்த தொகை மீளளிப்புகள் கணிப்பிடுவதற்கு தனிப்பட்ட கணக்குகள் பேணப்பட்டன. | ஓய்வூதியத் திட்டம் கணக்கீட்டியல் மதிப்பீட்டாளரால் வழங்கப்பட்ட கணக்கீட்டியல் அறிக்கையின்படி, அறிக்கையின் அடிப்படையில் தாபிக்கப்பட்டது. ஒவ்வெரு மூன்று ஆண்டுகளிற்கு ஒருதடவை கணக்கீட்டியல் ஆலோசணையாளரிடம் இருந்து அறிக்கைகளைப் பெறுவதன் மூலம் ப.மா.ஆ குழுவால் மீளாய்வு செய்யப்பட்டது. சொல்லப்பட்ட அறிக்கையில் எவ்வித ஆபத்தும் இல்லையென அறிக்கையிடப்பட்டிருந்தது. இந்த நேரத்தில் 2011.˙.2012 இற்கான ஆலோசனை அறிக்கை ப.க.மா ஆணைக்குழுவால் தயாரிக்கப்படுகின்றன. மேலும், ஓய்வூதிய முறைமை தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது. ஆகவே இது மொத்த நிதியமாக மதிப்பாய்வு செய்யவேண்டியிருந்ததுடன் தனிப்பட்ட அடிப்படையில் இருக்கவில்லை. |

| விடயம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் | கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் | தற்போதைய நிலைமையும் தற்கால முன்னேற்றமும் |
|---|---|---|---|---|
| | | | ஓய்வூதியக்காரர்களிற்கு ஓய்வூதிய கொடுப்பனவுகள் பொதுவான ஓய்வூதிய நிதியத்தில் செய்யப்படவதுடன் இந்த பொதுவான ஓய்வூதிய நிதியம் வருடாந்தம் செலவினத்திற்கு மேலான மிகையை செலவு வைப்பதன் மூலம் மேலும் வளர்ச்சியடைகிறது. | |
| **4.2** | **முகாமைத்துவ திறமையீனங்கள்** | ஓய்வூதியம் பெறுகையில் 20 வருட சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திராத உத்தியோகத்தர்களுக்கு அவர்களது ஓய்வூதியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ள பங்களிப்புத தொகையும் வட்டியும் மீளச் செலுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகையில் விண்ணப்பத்தில் குறைபாடுகள் பூர்த்திசெய்யப்பட்டு தீர்க்கப்பட்டதன் பின்னர் ஓய்வூதிய விண்ணப்பப் படிவம் ஓய்வூதிய பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட நாளுக்கும் ஓய்வூதியக்காரருக்கு உரித்தான தொகை செலுத்தப்பட்ட நாளுக்கும் இடையே நீண்டகால தாமதம் நிலவியமை அவதானிக்கப்பட்டது. | 13 ஓய்வூதிய மீளளிப்பு கொடுப்பனவுகளில் 9 பெற்றுக்கோடல்களின் பெறுவனவுகளின் பெறுகையிலுள்ள தாமதம் காரணமான பெற்ற கொடுப்பனவுகள் தாமதப்பட்டிருந்ததுடன் ஓய்வூதிய நிதியத்தின் கட்டுப்பாடும் பின்தங்கியிருந்தது.<br><br>ஏனைய நான்கு (4) மீளளிப்புகள் வருடாந்த வட்டி வீதங்கள் வெளியிடுதல் மற்றும் முறையற்றத விண்ணப்பங்கள் காரணமாக ஓய்வூதிய நிதிய மீளளிப்புகள் தற்காலிகமாக தாமதமடைகின்றது.. | முறைப்படி சமர்ப்பிக்கப்பட்ட மீளளிப்பு விண்ணப்பங்கள் ப.மா.ஆணைக்குழுவால் தாமதப்படுத்தப்படவில்லை. அத்துடன் முரண்பாடான விண்ணப்பங்கள், வகைப்படுத்தல்களை மேலும் பெறுவதற்கான தேவைகள் சரியான நடைமுறைபடுத்துவதற்கு அதிகளவு காலத்தை எடுக்கிறதுடன் கொடுப்பனவை முடிவுறுத்தகிறது. |
| **5.** | **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்** | கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் நிதியத்தின் தலைவருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.<br><br>(அ) ஓய்வூதியக் கொடுப்பனவு<br>(ஆ) பங்களிப்புக்களை கணிப்பீடு செய்தல் | பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் காலரீதியாக மீளாய்வு செய்யப்படுவதுடன் அவசியமான திருத்தங்களும் செய்யப்படுகின்றன. | அவசியமான தேவை ஏற்படும் போது காலரீதியான மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன, வழிகாட்டல்கள் வழங்கப்பட்டது, |

## பல்கலைக்கழக சேமலாப நிதியம்

## 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | ஆண்டு 2011 இ.ருபா | ஆண்டு 2010 இ.ரூபா |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| நிண்டகால முதலீடுகள் | 01 | 13,581,813,374 | 12,501,013,981 |
| கடன்கள் | 02 | 4,031,338,395 | 3,798,759,459 |
| | | 17,613,151,769 | 16,299,773,440 |
| **நடைமுறைச் சொத்துக்கள்ள** | | | |
| பொருளிருப்பு | | 93,427 | 94,749 |
| பெறவேண்டிய வட்டி | 03 | 1,269,239,876 | 868,864,976 |
| பெறவேண்டிய பங்களிப்புகள் | 04 | 111,913,193 | 83,412,934 |
| பெறவேண்டிய கடன் தவணைப்பணங்கள் | 05 | 23,218,056 | 20,342,520 |
| ஏனைய மற்பணங்கள் | | 1,000 | 1,000 |
| காசு மற்றும் காசிற்கு சமமானவை | 06 | 13,342,435 | (27,131,712) |
| | | 1,417,807,987 | 945,584,467 |
| **கழி - நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| வரி | | 103,109,648 | 109,914,333 |
| கடன்கொடுத்தோர் | 07 | 405,886 | 254,544 |
| செலுத்தப்படாத மீளளிப்பு | 08 | 20,107,753 | 16,725,422 |
| செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை | | 19,075 | 34,450 |
| | | 123,642,362 | 126,928,749 |
| **தேறிய நடைமுசைச் சொத்துக்கள்** | | 1,294,165,625 | 818,655,718 |
| **மொத் தேநறிய சொத்துக்கள்** | | 18,907,317,394 | **17,118,429,158** |
| **பிரதிநிதித்துவப்படுத்தியவை** | | | |
| உறுப்பினர் மீதிகள் | 09 | 18,501,983,566 | 16,906,638,053 |
| செயற்பாடற்ற உறுப்பினர்களிற்கான ஏற்பாட்டுக் க/கு | | 8,000,000 | 5,000,000 |
| ஒதுக்கத்திற்கு சமமான வட்டி வீதங்கள் | | 281,650,220 | 136,943,768 |
| நிறுத்திவைத்த இலாபம் | | 115,683,608 | 69,847,337 |
| **நிதியத்தின் தேறிய மிகை** | | 18,907,317,394 | **17,118,429,158** |

## பல்கலைக்கழக சேமலாப நிதியம்

## 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று

| | குறிப்பு | ஆண்டு 2011 இ.ரூபா | ஆண்டு 2010 இ.ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | | - | - |
| முதலீட்டு வருமானம் | 10 | 1,560,635,215 | 1,553,864,041 |
| கழி: வருமான வரி | | (124,850,817) | (155,386,404) |
| **மொத்த திரட்டிய வருமானம்** | | 1,435,784,398 | 1,398,477,637 |
| செயற்பாட்டுச் செலவினம் | 11 | (175,141) | (73,293) |
| **கழி**::- முன்னைய ஆண்டின் நிறுத்திவைத்த வருமானம் | | 69,847,336 | 44,445,360 |
| **பகிர்வுக்காக கிடைத்த றேிய வருமானம்** | | 1,505,456,593 | 1,442,849,704 |
| உறுப்பினர் மீதிகள் மீதான வட்டி | | (1,247,223,701) | (1,245,357,838) |
| நடைமுறையாண்டு செயற்பாடற்ற க/கிற்கான மாற்றம் | | (3,493,003) | (3,160,667) |
| **கூட்டு: வமுானத்திற்கான சீராக்கல்** | | 8,650,171 | 12,459,907 |
| வட்டி வீதத்திற்க சமமான ஒதுக்க மாற்றம் | | (144,706,452) | (136,943,769) |
| செயற்பாடற்ற உறுப்பினர்களிற்கான ஏற்பாடு | | (3,000,000) | - |
| மீதி கீழ் கொண்டு சென்றது | | **115,683,608** | **69,847,337** |

**பல்கலைக்கழக சேமலாப நிதியம்**

**2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல்**

| | ஆண்டு 2011 இ.ரூபா | ஆண்டு 2010 இ.ரூபா |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| முதலீட்டிலிருந்தான வருமானம் | 1,560,635,215 | 1,553,864,041 |
| உறுப்பினர் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட வட்டி | (1,250,716,704) | (1,248,518,505) |
| ஏனைய கொடுப்பனவுகள் | (175,141) | (73,294) |
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு உட்பாய்ச்சல் / (வெளிப்பாய்ச்ல்)** | **309,743,370** | **305,272,242** |
| **சொத்துக்களில் அதிகரிப்பு (வீழ்ச்சி)** | | |
| இருப்புகள் | 1,322 | (25,586) |
| பெறவேண்டிய பங்களிப்பு | (28,500,259) | (82,606,571) |
| பெறவேண்டிய கடன் தவணைப்பணம் | (2,875,536) | (20,325,495) |
| பெறவேண்டிய வட்டி | (400,374,900) | (308,962,348) |
| பல்கலைக்கழக சேமாலகைக்கழக சேமலாப நிதியக் கடன் | (232,578,936) | (120,507,253) |
| **பொறுப்புகளில் அதிகரிப்பு (வீழ்ச்சி)** | | |
| கடன் கொடுத்தோர் | 151,342 | (18,196) |
| செலுத்தப்படாத முளளிப்புகள் | 3,382,331 | (139,395) |
| முத்திரைத் தீர்வை | (15,375) | 12,275 |
| | **(660,810,011)** | **(518,572,569)** |
| **வரிக்கு முன்னரான செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | **(351,066,641)** | **(213,300,327)** |
| **ஆண்டின்போது செலுத்தப்பட்ட வருமான வரி** | **(131,655,503)** | **(94,623,906)** |
| | **(482,722,144)** | **(307,924,233)** |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| திறைசேரி முறிகள் | (484,925,065) | (341,356,560) |
| நிலையான வைப்புக்கள்ள | (595,870,000) | (864,130,000) |
| சேமிப்புக் க/கு | (4,328) | (4,093) |
| தவணைப்பண பிணைமுறிகள் | - | (4,999,384) |
| முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் | **(1,080,799,393)** | **(1,210,490,037)** |
| **நிதியிடல் நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| உறுப்பினர் மீதியில் அதிகரிப்பு | 1,595,345,513 | 1,391,478,463 |
| முன்னைய ஆண்டு சீராக்கல்கள் | 8,650,171 | 12,459,907 |
| நிதியிடல் நடவடிக்கையிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் | 1,603,995,684 | 1,403,938,370 |
| காசு மற்றும் காசிற்கு சமமானவையில் தேறிய அதிகரிப்பு | **40,474,147** | **(114,475,900)** |
| ஆண்டு தொடக்கத்திலுள்ள காசு மற்றும் காசிற்கு சமமானவை | (27,131,712) | 87,344,188 |
| ஆண்டிறுதியிலுள்ள காசு மற்றும் காசிற்கு சமமானவை | **13,342,435** | **(27,131,712)** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No | சீஈ/பீ/யூபீஎப்/எப்ஏ/2011 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2012 யூலை 19 |

தலைவர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

**பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

